ஒக்டோபர் 10 - ஒக்டோபர் 16, 2010 October 10 - October 16, 2010 பக்கங்கள் - 28 25.00

பொது சன நூலகம்
[illegible]துறைப் படிப்பகம்
மாநகர சபை. யாழ்ப்பாணம்.

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்




## சிங்கள மக்களின் மனதில் இடம்பிடிக்க இனவாதத்தைக் கக்கும் ஐ.தே.க.

## தமிழர்கள் தோற்றுக்கொண்டிருக்கிறார்களா?

## வலி. வடக்கு மீள்குடியமர்வு; கண்ணிவெடி தடையாயிற்று

# சிங்கள மக்களின் மனதில் இடம்பிடிக்க இனவாதத்தை கக்கும் ஐ.தே.க

"ஐ.தே.க பல்டி அடித்துவிட்டது. பார்த்தீர்களா" என்று கேட்டார் ஓர் ஊடகத்துறை நண்பர்.

"ஐ.தே.க எங்கே பல்டி அடித்தது?" என்று கேட்டேன் நான்.

நண்பர், கடந்தவாரம் ஐ.தே.க பிரமுகர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்த கூற்றைப் பற்றிச் சொன்னார்.

"இதிலென்ன புதுமை இருக்கிறது?" என்று பதிலுக்கு கேட்டேன் நான்.

இந்தமாதிரி உரையாடல்கள் அவ்வப்போது அல்லது அடிக்கடி நமது அரசியல்சூழலில் நடப்பது வழமை. ஆனால், நமது குறைபாடு நமது ஞாபகசக்தியின் போதாமை அல்லது எதையும் எதிலிருந்தும் கற்றுக்கொள்வதில்லை என்பதே.

ஐ.தே.கட்சி எப்போதுமே இனப்பிரச்சினை விவகாரத்தில் நேர்மையாகச் செயற்பட்டதில்லை. அதற்காகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி 'சுத்தக் கட்சி' என்று இங்கே பொருள்கொள்ளப் படவும் வேண்டியதில்லை.



ஆனால், இலங்கையின் நவீன அரசியல் பாரம்பரியத்தில் மூத்த கட்சியான ஐ.தே.க அதிக காலம் ஆட்சி நடத்திய கட்சி. ஆரம்பத்திலேயே ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருந்த கட்சி. ஆட்சியில் இல்லையென்றால் எதிர்க்கட்சியாகவாவது நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் பெற்றிருந்த கட்சி. அந்தக் கட்சி இப்படித்தான் எப்போதும் நடந்து கொள்கிறது அல்லது புலம்புகிறது அல்லது பிரச்சினையை வளர்க்கிறது. நாட்டில் தீயை மூட்டி அழிவை ஏற்படுத்த முயற்சிக்கிறது.

இப்பொழுது மிகவும் பலவீனமான நிலையிலிருக்கும் கட்சிகளில் ஒன்று ஐ.தே.க. ஒரு காலத்தில் - ஜே.ஆரின் ஆட்சியின்போது - மிகப் பலவீனமாக இருந்தது சு.கட்சி. ஆனால், சு.க தன்னுடைய பலவீனத்தைக் களைந்து இன்று புதிய நிலைக்கு வந்துள்ளது. மட்டுமல்ல, ஐ.தே.கவையே உடைத்துச் சிதைத்துப் பழிவாங்கிக் கொண்டிருக்கிறது.

ஆனால், ஐ.தே.கவோ இன்னும் தன்னையே நிதானப்படுத்த முடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. அதன் வெளிப்பாடுதான் இந்தப் பச்சை இனவாதப் பேச்சுகள்.

"இலங்கையில் தமிழர்களுக்கு என்ன பிரச்சினை? எதற்காக அவர்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும்?" போன்ற கேள்விகளும் அபிப்பிராயங்களும் ஐ.தே.க வின் அரசியல் உபாயமொழியாடல்களே!

இனவாதத்தை வளர்ப்பதன் மூலம் சிங்கள மக்களின் மனதில் மீண்டும் செல்வாக்கைப் பிடிக்க முனையும் உபாயம் இது. அதேவேளை அரசை நெருக்கடிக்குள்ளாக்கவும் இது அதிக வாய்ப்புகளை அதிகரிக்கும். இது வளர்ச்சியடைந்தால் தமிழர் தரப்பில் இனவாதம் பற்றிப் பேசுவோருக்கும் அதிக வாய்ப்பைக் கொடுக்கும்.

ஆகவே, நாடாளுமன்ற அரசியலுக்குப் பொருத்தமான ஒரு அரசியல் உபாயத்தை மீண்டும் கையாள்வதற்கு முயற்சிக்கிறது. ஐ.தே.க இதைவிட வேறு வழிகளில் நேர்மையாகவும் விவேகமாகவும் சிந்திக்க முடியாதா?

முடியும். ஆனால், அது எதற்காக அவ்வாறு மாற்றுவழியில் சிந்திக்க வேண்டும்?

பெரும்பாலான அரசியற்கட்சிகளுக்கு இனவாதம் ஓர் இலகுவான அரசியல் முதலீடு. சனங்களுக்கு எதுவுமே செய்யாமல், நாடாளுமன்றக் கதிரைகளைப் பிடித்துக் கொள்வதற்கு இந்த இனவாதம் அவைகளுக்கு அதிக சந்தர்ப்பங்களை வழங்குகிறது.

ஐ.தே.க இதில் இன்னொரு படிமேலேபோய் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்க விரும்புகிறது. அதற்காக முயற்சிக்கிறது. இதற்கு இலகுவில் வாய்ப்பளிக்கும் இனவாத முதலீட்டை விட்டு விட்டு வேறு முதலீட்டுக்கு எதற்காக அது செல்ல வேண்டும்?


இதேவேளை நாம் இன்றைய ஐ.தே.கவைப் பற்றி மேலோட்டமாகவேனும் பார்க்க வேண்டும். ஐ.தே.கவின் தலைமைப் பொறுப்புக்கு ரணில் விக்கிரமசிங்க எந்த வகையிலும் பொருத்தமானவரல்ல என்று பத்தாண்டுகளுக்கும் மேலாகப் பலராலும் கூறப்பட்டு வருகிறது.

ஆனால், தலைமைப் பொறுப்பை விட்டுப் போவதற்கு ரணில் தயாரில்லை. ரணிலை விலக்க ஐ.தே.க வினாலும் முடியவில்லை. ஒன்றில் கட்சிக்காக ரணில் தியாகம் செய்ய வேண்டும் அல்லது கட்சி



முடிவெடுக்க வேண்டும் ரணிலை விலக்கிப் புதிய தலைவரைத் தெரிவு செய்ய. இதுவும் கட்சிக்காகவே. ஆனால், இரண்டுக்கும் ஐ.தே.கவில் இடமில்லை. எனவேதான் அதன் தோல்வியும் சரிவும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

இந்த இடத்தில் முடிவெடுக்கும் திறனும் தியாக மனப்பாங்குமே கட்சிக்கு அவசியம். இந்த அவசியத்தையே உணராத நிலையிலிருக்கும் கட்சி, மாற்று அரசியல் உபாயங்கள் குறித்து என்னதான் சிந்திக்கும்? மாற்று உபாயங்களில் எப்படி ஆர்வத்தோடு செயற்படும்?



ஆகவே, இனவாதத்தை அரசியல் முதலீடாக்கி, தன்னுடைய பலவீனங்களை மறைத்துக்கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறது ஐ.தே.க.

இந்த இடத்தில் தமிழர்கள் சற்று நிதானமாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது என்பதை இங்கே வலியுறுத்த வேண்டும்.

இன்றைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் சரி - தவறுகள், நேர்மை - நேர்மையீனங்களுக்கு அப்பால் அதிகாரத்தில் உள்ள ஆட்சித்தரப்பு என்றபடியால் இந்த அரசாங்கத்தை அரசியல் தீர்வுக்கும் பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களின் மேம்பாட்டுக்குமாக வற்புறுத்த வேண்டியுள்ளது.

இந்த இடத்தில் எதிர்க்கட்சியாகப் பொறுப்பு வகிக்கும் ஐ.தே.கவும் அரசுடன் இணைந்து நின்று ஒத்துழைப்பை வழங்க வேண்டியது கடமையாகும். ஆனால், இதை ஐ.தே.க செய்கிறதா? ஐ.தே.கவின் இந்தத் தவறை இதுவரையில் எந்தத் தமிழ் தரப்பாவது உரிய முறையில் கண்டித்துள்ளனவா?

இனப்பிரச்சினைக்கான தீர்வை மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் முன்வைக்குமா, இல்லையா என்பதல்ல இப்போதைய பிரச்சினை.

இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்கும் சூழலையே அது இப்போது இல்லாமலாக்குகிறது. இதுதான் ஆபத்தானது. இதுவரையான வரலாற்றிலும் இதுவே நடந்தது. இப்படித் தவறுகள் நடந்ததன் விளைவையே கடந்த முப்பது ஆண்டுகளாக நாடு போரில் அனுபவித்தது. இதன் பின்னரும் ஒரு தலைமைக் கட்சி இப்படித்தான் சிந்திக்கிறது என்றால் அதன் அர்த்தம் என்ன?

இங்கேதான் தமிழர்களுடைய ஞாபக மறதியைப் பற்றி நாம் கதைக்க வேண்டும். இது இல்லையென்றால் அது; அது இல்லையென்றால் இது எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தடுமாறவும் அலைபாயவும் கூடாது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்போதும் இருக்க வேண்டியவை நிதானமும் தெரிவுகளுமாகும்.

நிதானம்தான் சரியான தெரிவுகளைச் செய்வதற்கு உதவும். ஆகவே, ஞாபகமறதிக்குட்படாமல் இந்தத் தெரிவுகளைச் செய்வதற்கு அவர்கள் முயலவேண்டும்.

ஐ.தே.க ஆட்சிக்கு வந்தபோதெல்லாம் என்ன நடந்தது என்பதை தமிழர்கள் சிந்திப்பது நல்லது. இதேவேளை, அரசியலில் நண்பனும் இல்லை, நிரந்தர எதிரியுமில்லை என்பார்களே! அப்படியென்றால் ஐ.தே.கவை ஆதரிப்பதில் என்ன தவறு இருக்கிறது என்றும் எவரும் கேட்கக்கூடும்.

நிரந்தர நண்பனோ, நிரந்தர எதிரியோ அரசியலில் இருக்கமுடியாது என்பது உண்மையே. எதையும் தட்டையாகப் பார்க்காமல், நிதானமாகப் பார்க்கவேண்டும் என்பதும் உண்மைதான். அரசியல் உபாயத்தின்படி சூழ்நிலை, தேவை என்பவற்றுக்கமைய அரசியலைக் கையாள்வது, தரப்புகளைக் கையாள்வது என்பதெல்லாம் ஏற்புடையதே!

ஆனால், நிரந்தரத்தோல்வியோடு ஒரு சமூகம் இருக்கமுடியாதல்லவா! ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எப்போதும் நிரந்தரத் தோல்வியின் பக்கமே நிற்கின்றனர். இந்த நிலை மாறவேண்டும். அதற்கு முதலில்

**அருள் மனோகரன்**

தேவை தமிழர்களிடமுள்ள ஞாபகமறதி. அடுத்தது, சுய விசாரணையும் சுய மதிப்பீடும். அடுத்தது நிதானம். அதற்கு அடுத்தது சரியான தெரிவுகள்.

தேவைகளையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றக்கூடிய தெரிவுகள் அவசியம். ஐ.தே.க பூட்டுடன் நிற்கிறது. நாம்? *



# நிலம் திரும்பிய சாந்தபுரம் மக்கள்

"காணிகளில் புற்கள் அடர்ந்து போயிருக்கின்றன. அழிவுகள் உறைந்து முடிய காடுகளை போர்த்தியிருக்கும் நிலத்தில் யானையின் மலங்களும் ஊக்கி விட்டன. யானைகளின் பாதச்சுவடுகள் பரவலாகத் தெரிய போர் சிதைத்த கிராமத்தை யானையும் அடித்திருக்கிறது. பக்கத்தில் யாரு மற்று தெரியும் இந்துபுரம், செல்வபுரம் போன்ற கிராமங்கள் பாழடைந்திருக்கின்றன. பாழடைந்த சாந்தபுரம் கிராமத்தில் மக்களின் கால் அடிகள் மீண்டும் புகுந்து கொண்டிருந்தன. இந்தச் சூழலிலும் நாங்கள் புன்னகைக்கிறோம். ஆனால் எப்படி புன்னகைக்க முடிகிறது என்ற வாழ்வின் எழுச்சி மிக்க வார்த்தைகளை சொல்லும் ஒற்றைத்தாயின் வரிகளில் இருக்கிற வலிமையும் அந்த மண்ணின் குணமும் முழு ஈழத்து மக்களுக்கும் இன்று நம்பிக்கை தருகிறது" இப்படி குறிப்பிடும் குளோபல் தமிழ் செய்திகளின் கட்டுரையாளர் தீபச்செல்வன், நிலத்துக்காய் அழும் சனங்களின் குரல்கள் என்று அந்த மக்கள் சாந்தபுரம் நிலத்துக்காய் தவித்த பொழுது எழுதியிருந்தார். அண்மையில் மீளக்குடியேறிய சாந்தபுரம் மக்களை அவர்கள் அடைந்த நிலத்தில் சந்தித்த அனுபவத்தை புன்னகை பெறும் துயரக்கதையாக எழுதுகிறார்.

நான் சாந்தபுரம் மக்கள் குறித்து எழுதிய பதிவில் குறிப்பிட்டதைப்போல மீளவும் இந்த மக்கள் ஒரு குறியீடாகிறதை இந்த நாட்களில் பார்க்கிறேன். சமகால தடுப்பு முகாம் அவல முகத்தின் துயரும், நிலத்துக்காய் எழுச்சியுடன் அழும் குரல்களும் இன்றைய ஈழத்து சூழலின் குறியீடாக தெரிகின்றன. இன்று சாந்தபுரம் மக்கள் மீளக்குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். அந்த மக்களுக்கு இது பெரும் ஆறுதலும் மகிழ்வும். அந்த மக்களுக்காக பேசியவர்கள், செயற்பட்டவர்கள் எல்லோரும் ஆறுதலடைவார்கள். முக்கியமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சிறிதரன் இந்த மக்களுக்காக கொடுத்த குரலும் மக்கள் அளித்த ஆறுதலும் நம்பிக்கையும் கவனத்திற்குரியவை. நிலமடைந்த இந்த மக்களின் முகங்கள் துயரங்களிடையிலும் மகிழ்ச்சியின் கோடுகளை வெளிப்படுத்துகின்றன. நிலம் திரும்பிய வெற்றியை அதற்காய் எதிர்கொண்ட சவால்களை நாம் ஒரு வரலாற்றுப் பதிவாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. இன்றைய வன்னி வாழ்வில் ஈழ மக்கள் முகம் கொடுக்கும் சமகால அவலத்தில் ஏற்பட்ட வெளிச்சமாகவும் அடையாளமாகவும் நம்பிக்கையாகவும் நிகழ்ந்திருக்கிறது.

சாந்தபுரம் மக்கள் அவர்களது காணிகளுக்கு விடுவிக்கப்படுகிற செய்தியை கடந்த 10 ஆம் திகதி காலையில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரும் மாவட்ட இராணுவ அதிகாரியும் அந்த மக்களிடம் தெரிவித்த பொழுது அந்த மக்கள் அந்த வார்த்தைகளுக்குப் பிறகு பெரு மகிழ்வை பெற்றார்கள். பெருந்துயர்களுடன் அந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள். நான்கு ஏக்கர் காணியைக் கொண்ட சாந்தபுரம் கலை மகள் வித்தியாலய வளாகத்தினுள் 281 குடும்பங்கள் தங்கியிருந்தன.



பாடசாலையின் ஒரே கட்டடத்தில் சில குடும்பங்கள் மட்டும் தங்கியிருக்க ஏனைய குடும்பங்கள் பாடசாலை வளாகத்தினுள் தறப்பாள் கூடாரங்களை அமைத்து தங்கியிருந்தன. மலசலகூடம், உணவு, நடமாட்டம் என்று எல்லாமே பெரும் தடுப்பு முகாம் ஒன்றை ஞாபகத்துக்கு கொண்டு வந்தன. தடுப்பு முகாம் வாழ்வை வெறுத்து சொந்த நிலத்தில் வாழ முடியும் என்று வன்னி முகாங்களில் இருந்து திரும்பிய அந்த மக்கள் மீண்டும் ஒரு தடுப்பில் லாத முகாம் வாழ்வை அனுபவிக்க நேர்ந்தது. கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மூன்று மாதங்களும் சாந்தபுரம் பாடசாலையில் மூன்று மாதங் களும் இந்த மக்கள் அனுபவித்த நெருக்கடிகள் வெளிப் படுத்திய வார்த்தைகள் மிகவும் துயரம் மிக்கவை.

யாரைக் கண்டாலும் அந்த மக்கள் வந்து சூழ்ந்து கொள்வார்கள். வார்த்தைகளை பேசத் தொடங்குவார்கள். அவர்களின் வார்த்தைகளோ தீராத துயரிலும் வலிமையும் நம்பிக்கையும் கொண்டு கொந்தளித்துக் கொண்டிருப்பவை. மீள்குடியேற்றம் தானே! தடுப்பு முகாம் தானே! என்று இன்றைய கால வெகுசனமயமாகிவிட்ட வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. இந்த மக்களைப் பார்த்த பொழுது எனக்குள் இருந்த சஞ்சலம் மேலும் பெருகியது. எனது வார்த்தைகளில் இருந்த துயர் மேலும் அதிகரித்தது. அவர்களுக்கு நேர்ந்த வாழ்வின் கொதிப்பும் துயரும் எனக்கு வலிமிக்க வாழ்வின் வார்த்தைகளை கேட்க வைத்தன. அவர்கள் அந்த காணி நிலத்துக்காய் அனுபவித்த துயர்மிகு வாழ்வை வெளிப்படுத்திய விதம் எல்லோரது நெஞ்சங்களையும் உலுக்கக் கூடியவை.

சனிக்கிழமை (11.09.2010) காலை அந்த மக்கள் காணிகளுக்கு செல்லத் தொடங்கினார்கள். பாடசாலை வளாகத்தில் இருந்த குடும்பங்கள் தங்கள் கூடாரங்களை பிடுங்கி எடுத்துக் கொண்டு காணிகளுக்கு சென்று கொண்டிருந்தன.



இந்திய மக்களின் அன்பளிப்பாக குடும்பம் ஒன்றுக்கு ஒவ்வொரு தறப்பாளும் சில ரீப்பைத் தடிகளும் வழங்கப்பட்டன. அன்றைய தினம் அந்த மக்களைச் சந்தித்து பேசிய சரவணபவன் எம்.பி. மக்களுக்கு தண்ணீர் நிறைத்து வைத்திருக்கும் பெரிய வாளிகளை வழங்கினார். சாந்தபுரம் மக்களது விடயத்தில் சிறிதரன் எம்.பி. வகித்த முக்கிய பங்கு குறித்து மக்களிடம் விவரித்தார். சிறிதரன் எம்.பி. அந்த மக்களின் கிணறுகளை இறைப்பதற்காக கொடுத்திருந்த நீர் இறைக்கிற இயந்திரம் ஒன்றை சரவணபவன் எம்.பி. வழங்கினார். அதை வாங்கிக் கொண்டு புதிய கூடாரங்களை தங்கள் காணிகளில் அமைத்துக் கொள்ள அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள். குழந்தைகளும் தங்களால் முடிந்தளவு பொருட்களை சைக்கிள்களில் கட்டி உருட்டிச் சென்று கொண்டிருந்தார்கள். இன்னொரு இடப்பெயர்வு, இன்னொரு தறப்பாள் கூடாரம் செல்லும் அந்த மக்களிடமும் புன்னகை அரும்பத் தொடங்கியது.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை (12.09.2010) அந்த மக்களில் அநேகமானவர்கள் காணிகளில் குடியேறிக் கொண்டிருந்தார்கள். சாந்தபுரம் பாடசாலை கூடாரங்கள் அகற்றப்பட்டு வெளித்திருந்தது. பாடசாலையின் துயர முகம் நீங்கியிருக்கிறது. அந்த மக்களுடன் நானும் என்னுடன் பொன்காந்தனும் அன்றுதான் அந்த கிராமத்துக்குள் காலடி வைக்கிறோம். சனங்களை இழந்து போயிருந்த கிராமம் பாழடைந்திருந்தது. பக்கத்தில் பாழடைந்து முடிவற்ற துயரில் இருக்கிற சனங்களின் செல்வபுரம், இந்துபுரம் கிராமத்தின் எல்லைகள் முகம் காட்டுகின்றன. சனங்கள் அப்பொழுதும் தங்கள் பொருட்களை எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். சனங்களின் காலடிகள் நீண்ட காலத்தின் பின்னர் நிலத்தில் பதிகின்றன. யானைகளின் மலங்களும் ஊக்கிப் போயிருக்கின்றன. முதலில் அந்தக் கிராமத்தை சிதைத்துப் போட்டது யுத்தம். பின்னர் எஞ்சியிருந்தவைகளை யானைகள் சிதைத்திருக்கின்றன. யானை அடித்த கிராமம் என்று சொல்லுமளவில் பல பயன்தரு மரங்கள் வீழ்த்தப்பட்டிருக்கின்றன. எப்படி வளமாக செழித்திருந்த நிலம் என்று யாராலும் புரிந்து கொள்ள முடிகிற அளவில் யானை அடித்துப் போட்டவைகளின் எச்சங்கள் கிடக்கின்றன. மனிதர்களின் கால் தடங்களை இழந்த அந்த கிராமம் கடந்த இரண்டு ஆண்டுகளாக யானைகளின் சரணாலயகமாகி இருந்திருக்கிறது.

துயர்களிடையில் வாழத் தொடங்கியிருக்கிற அந்த மக்களின் மத்தியில் அந்த மக்களுடன் நான் பல தடவை பார்த்திருந்த வலிய குரல் மிக்க குமார் பூரணம் என்ற தாயைப் பார்த்தேன். எங்களால் இன்று புன்னகைக்க முடிகிறது என்ற வார்த்தைகளை அவர் சொல்லுகிறார். சிதைவுகளில் அபாயங்களில் தொடங்கியிருக்கிற வாழ்வு ஒருநாள் மீண்டும் பழைய செழிப்பை பெறும் என்று அவர்கள் வைத்திருக்கிற நம்பிக்கை மிக்க வார்த்தைகளை அந்த ஒற்றைத் தாயார் சொன்னார். முழு ஈழ மக்களுக்குமாக நம்பிக்கை தருகிறது. வலிமை மிக்க அந்த கிராமத்தின் அம்மாக்களில் அவரும் ஒருவர். எல்லாத் தாய்மார்களது முகங்களும் இழப்பும் வலிமையும் நிறைந்து கிடக்கின்றன. ஆனால் துயரம் கிழிய அவர்கள் தருகிற புன்னகை நம் எல்லோருக்கும் இன்று கிடைக்கிற ஆறுதல் என்றே தெரிகிறது.

எனது காணிக்கு திரும்பியதால் நான் மிக மகிழ்ச்சியடைந்திருக்கிறேன் என்று குருசாமி முருகையா என்னிடம் குறிப்பிட்டார். இந்த மண் எனக்கு வெறும் மண்போலத் தெரியவில்லை. கடந்த காலத்தில் என் குடும்பத்தை மிக மகிழ்ச்சியுடன் வைத்திருந்ததுக்கு இந்த மண்தான் காரணமாக இருந்தது என்று சொல்லும் முருகையாவின் மனைவி லீலா மரத்தின் கீழ் அடுப்பை மூட்டி சமைத்துக் கொண்டிருக்கிறார். 'யுத்தம் என்னை இப்பொழுது நோயாளி ஆக்கிவிட்டது. என்னால் அதிகளவு வேலைகள் செய்ய முடியாது. ஆனாலும் எனது மகன் இந்த மண்ணில் விவசாயம் செய்து எங்கள் குடும்பத்தை மறுபடியும் செழிக்க வைப்பான்' என்று மகிழ்வு வழியும் முகத்துடன் குறிப்பிட்டார். உழைத்து கறுத்து களைத்துப் போயிருக்கிற முருகையாவின் முன்னால் அவரது குடும்ப செழிப்பின் நம்பிக்கையாக மகன் புன்னகைத்தபடி நின்றார். உடைந்து சிதைந்துபோன வீட்டின் துகள்களை அள்ளி அகற்றிக் கொண்டிருந்தார் முருகையாவின் மகள். இன்று மாலைக்கிடையில் தறப்பாளைக் கட்டி விடுவோம் என்று சொல்லும் முருகையாவின் நம்பிக்கை மிக்க வாழ்வு இப்படித்தன் மீளத் தொடங்குகிறது.

அத்திவாரம் மட்டும்தான் இருக்கிறது மிகுதி எல்லாவற்றையும் கொண்டு போய் விட்டார்கள் என்று சொல்லும் குமார் பூரணம் அன்று தாம் கட்டிய வீடு மிக அழகாக இருந்தது என்றார், என் வீட்டைப் பார்த்து எல்லோரும் வியந்தார்கள். அது மிக அழகாக இருந்தது. இன்று

(04 ஆம் பக்கம் பார்க்க)

தீபச்செல்வன்

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடாக இருந்த எங்கள் சொத்தை கற்களாக உடைத்து கொண்டு போய் விட்டார்கள் என்று சொல்லி விட்டு, பிள்ளைகளையும் யானை தின்று விட்டது என்றார் பூரணம். பிள்ளைகளையா? என்று நான் கேட்ட பொழுது இந்தக் காணியில் 26 தென்னம்பிள்ளைகள் வைத்து பெரிய மரங்களாக நின்றன. இன்று எனது காணியில் மட்டுமல்ல பல காணிகளில் தென்னம் பிள்ளைகள் ஒன்றையும் காணவில்லை. ஒவ்வொரு காணியிலும் கிட்டத்தட்ட 25 தென்னைகள் நின்றன. இன்று பார்க்கும் இடங்களில் தென்னைகள் எதையும் காணவில்லை என்றார். எனது காணியில் நின்ற 26 தென்னைகளுக்கு கீழிருந்துதான் வாழ்ந்தோம் என்று சொல்கிறார் குமார் பூரணம். சாந்தபுரத்துக்கு செல்லும் பொழுது சாந்தபுரம் பாடசாலையின் முன்பாக உள்ள காணியில் நெடிதுயர்ந்த தென்னைகள் நிற்கின்றன. இந்த தென்னைகளின் வயதுகளை ஒத்த ஒரு தென்னை மரத்தைக் கூட அந்தக் கிராமத்தில் காண வில்லை. அடி பருத்த தென்னைகளின் அடிகள் பிய்த்து தின்னப் பட்ட நிலையில் சாட்சியமாக நிற்கின்றன. பட்டுப் போன அத்திவாரங்களும் தென்னை மரத்தின் அடிக ளும்தான் அந்த கிராமத்தின் காலத்தை மதிப்படுகின்றன.

நிழல் மரங்களின் வேர்களைகூட யானைகள் விட்டு வைக்கவில்லை. சிலவேளை அவைகளை பன்றிகள் கிளறித் தின்றிருக்கக்கூடும். அப்படித்தான் பல மரங்களும் வேர்களுடன் பிடுங்கி தின்னப்பட்டி ருக்கின்றன. அங்குள்ள பல மக்கள் தங்கள் காணி களை துப்புரவாக்கத் தொடங்கி விட்டார்கள். இரண் டாண்டு காலத்தில் வீட்டுக்குள் வைத்து விட்டுச் சென்ற பப்பாசிப் பழங்கள் பெரிய மரங்களாக முளைத்து நிற்கின்றன. துப்புரவாக்கிய பொழுது புற்றுகளும் பதுங்குகுழிகளும்தான் எஞ்சித் தெரிகின்றன. மிகவும் சமீபமாக புற்று தெரிகிறது. பலா மரத்தின் கிளை ஒன்றில் தொட்டிலை கட்டிய தாயார்



உதயகுமார் சத்தியலீலா

குழந்தையை உறங்க வைத்துக் கொண்டிருக்கிறார். பலா மரத்தின் கிளைகளில் இலைகள் இல்லை. வெயில் குழந்தையின் கண்களை மூடித் தூங்கத் தடுகின்றது. தனது கணவனது கையில் காயம் பட்ட காரணத்தால் குழந்தையுடன் தடுப்பு முகாமை விட்டு கடந்த வருடம் தான் வெளியேறி விட்டதாக குறிப் பிட்டார். உறவினர்களின் வீடுகளில் வாழ்தலைவதாக சொல்லும் உதயகுமார் தன்னை விரைவில் குடியேற்ற வேண்டும் என்று கேட்கிறார். முகாமை விட்டு வெளி யேறியதால் இதுவரையில் எந்த உதவிகளையும் நான் பெறவில்லை என்று சொல்கிற அவர் மன ஆறுதலுக் காக காணியை துப்புரவாக்குவதாக குறிப்பிட்டார். தூங்க மறுக்கிற குழந்தையின் முகத்தைப் பார்த்தபடி, சற்று முன்னரும் ஒரு பாம்பைப் பார்த்துக் கொன்றோம் என்று சத்திய லீலா சொன்னார். சனங்களற்ற அந்தக் கிராமத்தில் பல இடங்களில் இப்படி புற்றுகள் எழும்பி விட்டன. அவற்றில் இப்படி பாம்புகள் வந்து குடியிருக்கின்றன.

நான் முகாமிலிருந்து வந்து காணியைத் துப்புர வாக்குகிறேன் என்றார் சத்தியவதி யோண்டேஸ். கதிர்காமர் தடுப்புமுகாமிலிருந்து அனுமதி பெற்று வந்து காணியை துப்புரவாக்கிக் கொண்டிருந்தார். தங்களை எப்பொழுது காணிகளுக்கு ஏற்றுவார்கள் என்று தெரியாது எனக் குறிப்பிட்ட சத்தியவதி தங்கள் முகாமில் மாத்திரம் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 220 குடும்பங்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார். இப்படி வன்னித் தடுப்புமுகாங்களில் கிட்டத்தட்ட 400 குடும்பங்கள் தடுத்து வைக்கப்பட் டிருக்க வெளியில் நூறு குடும்பங்கள் வரை தங்கியி ருப்பதாக அந்தக் கிராமத் தகவல்கள் சொல்கின்றன. இப்பொழுது புதிய புதிய பாதைகளை யானைகள் திறந்திருக்கின்றன. யானை தனது பசுமை வேட்டைக் காக பல பாதைகளை திறந்திருக்கிறது. முகத்தை மூடுகிற குத்துகிற பற்றைகளை விலக்கித்தான் பல இடங்களுக்கு செல்ல முடிந்தது. அங்குள்ள பல காணிக ளுக்குரிய குடும்பங்கள் விடுவிக்கப்படாதுள் ளன. விடுவிக்கப்படாத பலர் முகாங்களில் இருந்து வந்து தங்கள் காணிகளை துப்புர வாக்குகின்றனர். இன்றோ நாளையோ குழந்தை பிறக்கிற நிலையில் உள்ள கர்ப்பிணித்தாய் ஒருவர் வெயில் நுழைந்து சுடும் தறப்பாளின் கீழிருந்து புன்னகைத்தார். அவரது கூடாரத்தின் முன்பாக வெளியில் வெயிலில் அடுப் பில் உலை கொதித்துக் கொண்டிருந்தது. தறப்பாளை தரையில் இழுத்துக் கட்டிக் கொண்டு உள்ளே இருக்கிறார்.

யானை தின்ற நிலத்தில் இந்த யானைகள் உன்னிமரங்களை தின்றிருக்கலாம் என்பதைத் போல தோன்றுகிறது. அப்படி பார்க்கும் இடமெல்லாம் உன்னிமரங்கள்தான் காடாக நிற்கின்றன.




செல்லத்துரை சண்முகராசா கதிர்காமர் தடுப்பு முகாமிலிருந்து வந்து தனது காணியைத் துப்புரவாக்குகிறார். இருபதாம் திகதி ஏற்றுவார்கள் என்ற நம்பி குறிப்பிட்ட நாளைச் சொல்லிக் கொண்டு தனது வாழைமரத் தோட்டம் நாசமாகிப் போயிருப்பதைப் பற்றி குறிப்பிட் டார். 1200 வாழை மரங்களை வைத்து தனது வாழ்வை நல்ல நிலையில் வைத்திருந்ததாக அவர் சொல்கிறார். அவரது காணி எங்கும் யானையாலும் யுத்த காலத்தாலும் அடிக்கப்பட்ட வாழை மரங்களின் அடித்துண்டுகள் நிற்கின்றன. சூம்பிப் போன வாழைக்குலை ஒன்று கனிந்தபடி வீழ்ந்து கிடந்தது. தனது விவசாய நடவடிக்கையில் பெரும் ஆதாயத்தை தந்ததில் டுபாய் பூசனி விவசாயம் முக்கியமானது என்று சொல்லும் சண்முகராசா யுத்தகாலத்தில் வள்ளிபுனம் வரையில் தனது காணியில் விளைந்த டுபாய் பூசனிக்காய்களை விற்றதாகவும் சொல்கிறார். அவரது மண் வீடு சிதையாமல் நின்றது. சீமெண்ட் வீடுகள் கற்களுக்காக உடைத்துக் கொண்டு செல்லப் பட்டன. மண் வீடுகள் என்பதால் இவை அப்படியே நிற்கின்றன என மக்கள் சொல்கிறார் கள். இதைப்போல இன்னொரு காணி நிலத்தில் ஒரு சுவரைத்தவிர ஏனைய சுவர்களைக் கொண்ட பழைய மண் வீட்டுக்குள் இரண்டு குழந்தைகள் விளையாடியபடியிருந்தார்கள். கூரைகள் உக்கி விட்டன.

அந்தக் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு கிணறுகளும் 35 முதல் 40 அடி வரையான ஆழம் கொண்டவை. அந்த ஆழத்தில் இருந்து தான் தண்ணீர் அள்ளி அந்த கிராமத்தின் செழிமை உருவாக்கப் பட்டது. தொடக்க காலத்தில் தாங்கள் கைகளால் தண்ணீர் அள்ளியே விவசாயம் செய்து வந்ததாக மக்கள் குறிப்பிட்டார்கள். பின்னர் தங்களிடம் குடும்பங்கள் தோறும் நீர் இறைக்கிற இயந்திரங்கள் இருந்து வந்த தாகவும் அவற்றால் விவசாயம் செய்ததாகவும் சொன்னார்கள். அந்த இயந்திரங்கள் எல்லாம் யுத்தத்தில் தொலைந்து விட்டன என தர்மலிங்கம் சிவராசா குறிப்பிட்டார். இரவிரவாக யானைக்கு அஞ்சிக் சத்தமிட்ட தால் குரலடைத்தபடி என்னுடன் பேசினார். தமிழ் கூட்டமைப்பு எம்.பி. சிவஞானம் சிறிதரனால் வழங் கப்பட்டுள்ள நீர் இறைக்கும் இயந்திரத்தால் அந்த கிராமத்தில் உள்ள கிணறுகளை சுழற்சி முறையில் இறைத்து துப்புரவாக்க முடியும். ஆனால் அவர்கள் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு ஒவ்வொரு குடும் பங்களுக்கும் ஒவ்வொரு நீர் இறைக்கிற இயந்திரங்கள் தேவைப்படுகின்றன என்று சிவராசா சொல்லுகிறார்.

வருடம் தோறும் பெரு மழைக்கு முந்திய காலத்தில் தண்ணீர் தட்டுப்பாட்டை தங்கள் கிராமம் எதிர்கொள் வதாகவும் அது இந்த சமகால மாதங்கள் என்றும் மக்கள் குறிப்பிடுகிறார்கள். விவசாய நடவடிக்கையின் பொருட்டு மழைக்கு காத்திருப்பதா அல்லது தறப்பாள் கூடாரங்களுக்குள் இருந்து மழையை எப்படி எதிர்கொள் வது என்று அஞ்சுவதா எனத் தெரியவில்லை என்று அங்கு சந்தித்த பல மக்கள் சொன்னார்கள். தற்பொழுது வறண்டிருக்கிற காணிநிலங்களில் உள்ள கிணறுகள் எல்லாமே உட்பகுதியால் இடிந்து தூர்ந்திருக் கின்றன. அந்த மக்களின் குடிநீர்த் தேவைக்காக நீர்ச்சேவை ஒன்றை உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் செய்து கொடுக்க வேண்டியுள்ளது. வறண்டுபோயிருக்கிற அந்த நிலத்தில் உள்ள மக்களுக்கு தாகம் தீர்க்கும் அந்த சேவை இன்றைய நாட்களின் பெரும் பணியாக அமையும்.

இப்படி நாளாந்த பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து சாந்தபுரம் கிராமத்தின் எழிலையும் செழிப்பையும் நோக்கி நகர ஆரம்பிக்கிறார்கள் இந்த மக்கள். இந்த மக்களின் பிரச்சினையை அவர்களின் குரல்களை வெளிக்கொணர்ந்த முக்கிய பணியை உள்நாட்டு பத்திரிகைகள், சில வானொலிகள், இணையதளங்கள் மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் என்பன செய்திருக் கின்றன. இந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நிலமடைந்த விடயத்தில் அதன் பின்னணியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முக்கியமான பங்காற்றியிருக் கிறது. அந்த அமைப்பின் எம்.பி. சிறிதரன் இந்த மக்க ளது பிரச்சினைகளை தொடர்ச்சியாக பேசி கவனப்ப டுத்தி வந்திருக்கிறார். அந்த மக்களை அடிக்கடி சந்தித்து ஆறுதல் சொல்லி நம்பிக்கை ஊட்டியிருந் தார். ஜனாதிபதியிடம் மகஜர் கையளித்த பிறகும் இந்த மக்கள் தொடர்ந்தும் துன்பங்களை அனுபவித்து வந்தார்கள்.

நீங்கள் அரசுக்கு நன்றி சொல்லவில்லையா என சாந்தபுரத்தில் மீளக்குடியேறிய முதியவர் ஒருவரைப் பார்த்துக் கேட்டேன். 'அவர்களுக்கு ஏன் நன்றி சொல்ல வேண்டும். அவர்கள்தானே எங்களை எங்கள் காணிக ளுக்குள் செல்ல விடாமல் தடுத்து வைத்திருந்தார்கள். அவர்கள் எங்கள் காணிகளை அபகரிக்க நின்றவர்கள். எங்கள் காணிகளைதான் நாங்கள் கேட்டோம். இதில் அவர்களுக்கு நன்றி சொல்ல என்ன இருக்கிறது' என அவர் குறிப்பிட்டார். இந்திய வெளியுறவுச் செயலா ளர் நிருபாமாவின் வருகையும் இந்தியாவிடம் இந்த விடயத்தை கூட்டமைப்பு எடுத்துப்பேச கவனத்தில் கொண்டு வந்ததும் இதில் பங்களித்திருக்கலாம் எனவும் அந்த முதியவர் குறிப்பிட்டார்.

மக்களுக்குரிய இந்த நிலத்தை மக்களிடம் சேர்வ தற்குரிய வகையில் கரைச்சிப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் சுலோஜினி நடந்து கொண்டதாக சொல்லப்ப டுகிறது. சில அரச அதிகாரிகள் இந்த விடயத்தில் நழுவல் போக்குடனும் சிலர் அபகரிக்கும் திட்டத் துக்கு ஆதரவாகவும் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

சாந்தபுரம் மக்களின் வலிய நிலம் இன்றைய ஈழ மக்களுக்கு பல செய்திகளை சொல்கிறது. சொந்த நிலத்துக்காக உறுதியாக இறுதிவரை அந்த மக்கள் போராடியிருக்கிறார்கள். இது சனங்களின் நிலம். இங்கு முதலில் சனங்களின் வாழ்வுதான். வளம் மிக்க நிலத்தில் வாழ்வை இறுக்கமாகப் பிணைத்திருந்த இந்த மக்கள் தங்கள் காணிகளைப் பெற்று விட்டார் கள். இந்த மக்களால் அவர்கள் வாழ்ந்த நிலத்தை பிரிய முடியாது என்பதுதான் அவர்கள் வைத்திருந்த வலிய சான்றும் நம்பிக்கையும். துயர்கள் இன்னும் விலகவில்லை. பற்றைகளின் வடிவில் துயர்கள் முளைத்து அடர்ந்திருக்கின்றன. வாழ்ந்த காலத்தின் நினைவுகளும் வளமும் உருக்குலைந்து மூடுண்டிருக் கின்றன. வீழ்ச்சி என்பது யானை அடித்து வீழ்த்தப் பட்டு அழிந்த தென்னை மரத்தைப்போல உயிரற்றுக்



கிடக்கிறது. யுத்தம் விட்டு வைத்த மனிதர்கள் மீண்டும் நம்பிக்கையுடன் திரும்பியிருக்கிறார்கள். எதிர்வரும் காலத்துக்காக குழந்தைகளுக்காக துயரநிழல் விழுந்த இந்த கிராமத்து மக்கள் மிகவும் பிரகாசமாக புன்னகைக்கிறார்கள். *

# வலி.வடக்கு மீள்குடியமர்வு; கண்ணிவெடி தடையாயிற்று

கடந்தகால யுத்தம் காரணமாக உருவாக்கப்பட்ட அதி உயர் பாதுகாப்பு வலயம் வலி - வடக்கு மக்களை இடம் பெயரவைத்தது. யுத்தம் முடிந்து வருடம் ஒன்று கடந்த போதும், அந்தப் பிரதேசத்தில் இருந்து வெளியேறிய மக்களுக்கு விடிவு கிட்டவில்லை.

இன்று விடுவார்கள், நாளை விடுவார்கள் என்ற எதிர் பார்ப்புடன் தினம் தினம் காத்துக் கிடக்கிறார்கள் அந்தப் பிரதேச மக்கள்.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் அந்தப் பிரதேசத்தில் வெடித்த யுத்தம் காரணமாக தமது உடைமைகளை விட்டுத் திடீரென வெளியேறியவர்கள் தான் அந்த மக்கள்.

அன்று முதல் இன்று வரை அதாவது 20 வருடங்களுக்கு மேல் ஏக்கப் பெருமூச்சுடன் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள்.

அந்த மக்களை ஒரு மாதத்தில் குடியேற்றுவோம். இரண்டு மாதங்களில் குடியேற்றுவோம் என அறிவிப்புக்கள் வரும். ஆனால், அவை எல்லாம் கனவுகள்தான் என்பது அந்தக் காலக்கெடு முடிந்த பின்னர் தான் தெரியும்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த வடக்கின் மீள்கட்டுமான ஜனாதிபதி செயலணி யின் தலைவரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ யாழ். செலயகத்தில் அதிரடி அறிவிப்பை விடுத்தார்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்துக்கு அவர் தலைமை தாங்கினார். ஏதோ ஏதோ விடயங்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. முடிவுகள் எடுக்கப்பட்டன.

ஆனால் வலி - வடக்கு மக்களின் மீள் குடியமர்வு பற்றிப் பேசப்படவில்லை. அந்த விடயம் கூட்ட நிகழ்ச்சி நிரலில் கூட இடம் பெறவில்லை.

கூட்டம் முடிவதற்குச் சில நிமிட நேரம் இருக்கையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கேள்வி ஒன்றை அவரிடம் எழுப்பினார்.

வலி - வடக்கு மீள் குடியமர்வு பற்றி ஏதாவது நிகழ்ச்சி நிரல் உண்டா? அது எப்போது நடக்கும்? என்று கேள்வி கேட்டார் சரவணபவன்.

அதிரடியாக வந்தது பஸிலின் அறிவிப்பு. அடுத்தவாரம் பலாலி அதி உயர் பாதுகாப்புக்கு மேற்கே காங்கேசன் துறைப் பிரதேசம், கீரிமலை, கட்டுவன், தொண்டமானாறு ஆகிய பிரதேச மக்கள் மீள்குடியமர்த்தப்படுவர் என்ற பதிலே வந்தது.

மறுநாள் அந்த விடயம் சகல ஊடகங்களிலும் பரபரப்புச் செய்தியாக வெளிவந்தது. அந்தப் பிரதேச மக்களும் குதூகலித்தனர். எதிர்காலத்தை இட்டு மகிழ்ந்தனர்.



இந்த அறிவிப்பு வந்து ஒரு வாரத்தில் பஸில் ராஜபக்ஷ வருகிறார். வலி - வடக்கு மீள் குடியமர்வை ஆரம்பித்து வைக்கப்போகிறார் என்ற செய்தி வெளிவந்தது. ஆனால், மறுநாள் வந்த செய்தி அந்தப் பிரதேச மக்களின் மனங்களைச் சுக்குநூறாக்கியது.

மீளக் குடியர்த்த வேண்டிய பிரதேசங்களில் கண்ணி வெடிகள் இன்னமும் உள்ளன. கண்ணி வெடிகளை அகற்றாமல் மீளக் குடியமர்த்தினால் மக்களுக்கு உயிராபத்து ஏற்பட்டுவிடும். ஆன படியால் மீள் குடியமர்வு தாமதமாகும் என்ற அறிவிப்பே அரச பக்கத்தில் இருந்து வந்தது.

அந்தச் செய்தியுடன் அடங்கிப் போனது வலி - வடக்கு மீள்குடியமர்வு என்ற விவகாரம். இந்நிலையில், கடந்த 3ஆம் திகதி யாழ். ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் யாழ். மக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாக மக்களிடம் கையளிக்கப்படும். மிதிவெடி அபாயம் உள்ள இடங்களில் அவை விரைவாக அகற்றப்பட்டு வருகின்றன. அப்பணி முடிந்ததும் மக்கள் அங்கு மீளக்குடியர அனுமதிக்கப் படுவர் என்று கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க கூறியுள்ளார்.

இதேவேளை - கண்ணி வெடி அகற்றும் பணி மிகவும் மெதுவாகவே இடம் பெறுவதாகப் படைத்தரப்புத் தகவல்கள் கூறுகின்றன. சர்வதேச மரபுப்படி கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டாலும், நீண்டகாலமானதால் அவை எங்கே உள்ளன என்பதைத் தேடிக்கண்டு பிடிப்பது சிரமமாக உள்ளதாம். ஐ.நாவின் மேற்பார்வையில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டுக் குழு முன்னர் மிதி வெடிகளை புதைத்த படைத்தரப்புடனும் விடுதலைப் புலிகளுடனும் கலந்துரையாடி, மிதிவெடிகள் புதைக்கப்பட்ட இடங்களைச் சுலபமாகக் கண்டுபிடிக்க வசதியாக இருதரப்புக்களிடமும் வரைபடங்களைப் பெற்றிருந்தது. அந்த வரைபடங்களின் அடிப்படையில் கண்ணிவெடி புதைக்கப்பட்ட இடங்கள் இணங்காணப் பட்டு அவற்றை அகற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது. அதன் காரணமாகக் கண்ணிவெடி அகற்றும் பணியும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டது.

ஆனால் இப்போது நிலைமை வேறு. வலி - வடக்கில் கண்ணிகளை விதைத்த விவரங்களை, வரைபடங்களைப் பெறுவதற்கு விடுதலைப் புலிகள் இல்லை. அவர்கள் வசம் இருந்த ஆவணங்களும் அழிக்கப்பட்டு விட்டன. இந்த நிலையில் அரச படைகளும் விடுதலைப் புலிகளும் புதைத்த கண்ணிவெடிகளை விரைவாக அகற்றுவது என்பது இயலாத காரியமாகும். அத்துடன் படையினர் மெதுமெதுவாக அங்குலம் அங்குலமாவே கண்ணி அகற்றும் பணியை முன்னெடுக்கின்றனர்.

## அங்குலம் அங்குலமாக நடக்கும் பணி பூர்த்தியடைய பல வருடங்களாகுமா?

கண்ணிவெடி அகற்றும் படையினரும் தொடர்ந்து பணியாற்றவில்லை. சரியான இடம் தெரியாத காரணத்தால் ஓய்வு எடுத்து எடுத்தே கண்ணிகளை அகற்றுகிறார்கள். தினமும் ஒருவர் 2,3 மணிநேரம் தான் பணியாற்றுவார். குறித்த இடத்தில் உன்னிப்பாகச் சோதனை செய்யும் போது அவர்களின் மனம் சோர்வடைந்து விடும். பின்னர் ஓய்வு எடுத்து மீண்டும் பணியைத் தொடங்குவர் என்று படைத்தரப்பு விளக்கம் தந்தது.

அண்மையில் மாவிட்டபுரத்தில் கண்ணி அகற்றும் பணியில் ஈடுபட்ட ஒருவர் கண்ணி ஒன்று வெடித்ததால், கொல்லப்பட்டார். மற்றொருவர் காயம் அடைந்தார். இந்தச் சம்பவம் படையினருக்குச் சோர்வை ஏற்படுத்தியுள்ளது என்ற படைத்தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

அந்தப் பிரதேசத்தில் பெரிய மரங்கள் வளர்ந்து காடு போல் காட்சியளிப்பதால் அங்கு கண்ணி அகற்றுவது சுலபமான விடயம் அல்ல எனப் படைத்தரப்பு சுட்டிக் காட்டுகிறது. நிலைமை இவ்வாறு இருக்க, கண்ணி வெடி அகற்றப்பட்டு மீள்குடியமர்வு என்பது உடனடியாகச் சாத்தியமாகாது போலத் தெரிகின்றது.

கொள்கை அளவில் மீள் குடியமர்வை அரசு நடைமுறைப்படுத்த முன் வந்தாலும், அதற்குத் தடையாக இருக்கப்போகிறது கண்ணிவெடி அகற்றும் பணி. கண்ணிவெடிகள் அகற்றப் பட்டு, ஐ.நாவின் அனுமதிச் சான்றிதழ் கிடைத்து மீள்குடியமர்வு என்பது இப் போதைக்கு நடக்கும் காரியமாகத் தெரியவில்லை.

கால்நூற்றாண்டைக் கடந்துதான் வலி - வடக்கு மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமரப் போகிறார்கள் என்று எதிர்வு கூறப்படுகின்றது. அந்த மக்களின் ஏக்கத்துக்கு விடிவு எப்போதோ. அதுவரை பொறுத்திருப்போம்.

## தெற்குத் தலைமைகளின் பேரினவாதப் போக்கு: மீண்டும் நிலைமை குழம்பக் காரணமாகுமா?

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் 2000 ஆம் ஆண்டில் இருந்து யாழ்.மாவட்டத்தில் இருந்து பிரதிநிதி ஒருவரைப் பெறும் கட்சியாக ஐ.தே.கட்சி உள்ளது.

தென்னிலங்கையின் பிரதான கட்சிகளில் ஒன்றான ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் 2000 ஆம் ஆண்டில் இருந்து யாழ்.மக்களால் தெரிவு செய்யப்பட்டு வருகிறார். அந்தக் கட்சியின் ஊடாக ஓரளவாவது தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம் எனத் தமிழ் மக்கள் நம்பினார்கள்.

அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அதன் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்து வெளியிட்டுள்ளார். விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப் பட்டு விட்டார்கள். அதனால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய அவசியம் தற்போதைக்கு இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வரும் எனத் தமிழர் தரப்பு நம்பியது. ஆனால் அவரது ஆட்சிக் காலம் அடுத்தமாதம் முடிவடைந்து மேலும் அடுத்த பதவிக்காலமும் தொடங்கப் போகிறது. மேலும் 3 ஆவது பதவிக் காலத்தையும் கைப் பற்ற அரசமைப்பிலும் திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டுவிட்டது.

முதலாவது பதவிக்காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சி எதுவும் எடுக்காத ஜனாதிபதி மகிந்த இரண்டாவது பதவிக் காலத்திலாவது ஏதாவது முயற்சி எடுப்பாரா என்பதற்கு உடனடிப் பதிலைக் காணமுடியாது. ஏதாவது வழங்குவதாக இருந்தாலும் எதிர்த் தரப்பின் ஆதரவைப் பெற வேண்டிய நிலை அவருக்கு உண்டு.

இந்நிலையில், ஐ.தே.க. எடுத்துள்ள நிலைப்பாடு, மஹிந்த காலத்தை இழுத்தடிக்க உதவப்போகிறது.

கடந்த 60 வருட காலமாக சிங்களத் தலைமைகள் கடைப்பிடித்த இன வாதப்போக்கையே, இன்றைய நவீன உலகத்திலும், தெற்கின் தற்போதைய தலைமைகள் கடைப்பிடிக்கப் போகின்றன. தமிழர்கள் இரண்டாம் தரப்பிரஜைகள். அவர்களுக்கு உரிமை வழங்கத் தேவையில்லை என்ற போக்கே மீண்டும் தெற்குத் தலைமைகளின் சிந்தனையில் ஓடுகிறது.

சாத்வீகப் போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்து, நாட்டையே உலுக்கி ஓய்ந்துள்ள நிலையில் சிங்களத் தலைமைகள் எடுத்துள்ள நிலைப்பாடு தமிழ் மக்களைக் கொதிப்படைய வைத்துள்ளது. சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்திய மற்றும் சர்வதேசத்தின் நெருக்குதல், அழுத்தம் காரணமாகத் தெற்குத் தலைமைகள் ஏதோ ஒரு தீர்வை - அரை குறையான தீர்வை - முன் வைக்கக்கூடும். அந்தத் தீர்வு தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிச்சயம் தீர்க்காது என்பதைத் தெற்குத் தலைமைகள் எடுத்துள்ள நிலைப்பாடு சுட்டிக் காட்டுகிறது.

போர்முடிந்த கையோடு, ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் வெளியிட்ட கருத்து இன்றுள்ள நிலையில் முக்கியத்துவம் பெறுகிறது. இலங்கைத் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு ஒன்று விரைந்து காணப்பட வேண்டும். இல்லையேல் விளைவு மோசமாகிவிடும் என்று அவர் கருத்து வெளியிட்டார். சிங்களத் தலைமைகள் அந்த விளைவுக்கு மீண்டும் கால்கோள் இடுவதைத் தவிர்த்து, அமைதியான நாட்டைக் கட்டி எழுப்பக் கூடிய சிந்தனையில் முன்னே சென்று தமிழர்களை மதித்து அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதே சகலரின் பிரார்த்தனையாகும்.

யாழவன்

# குழந்தை பிரசவமும் மனோநிலை பிறழ்வும்

கேள்வி:- எனது மனைவிக்கு சமீபத்தில் குழந்தை பிறந்தது. பிறந்து ஒரு வாரத்திலிருந்து மனைவியின் மனோநிலையில் பிறழ்வு ஏற்பட்டது. எதற்கெடுத்தாலும் கோபம் அடைவார் அழுகை வந்துவிடும். பிறந்த குழந்தையையும் கணக்கில் எடுக்கமாட்டார். மனோ வைத்தியரிடம் காட்டினேன். பிரசவத்தின் பின்னர் ஏற்படும் மனப் பிறழ்வு என்று கூறி வைத்தியம் செய்தார். அதற்கும் சரிவராமல் போக மூளைக்கு மின் அதிர்வு கொடுத்து வைத்தியம் செய்தார். ஓரளவு குணம் ஏற்பட்டது. என்றாலும் எனது மனைவி பழைய நிலையை அடையவில்லை. இது பற்றிய விளக்கத்தையும் - சிகிச்சை பற்றிய கருத்துக்களையும் அறியத் தருவீர்களா?



பதில்:- பிரசவத்தின் பின்னர் ஒரு சில தாய்மாருக்கு இப்படியான மனப்பிறழ்வு ஏற்படுவதுண்டு. இதனை POSTPARTUM DEPRESSION என்று அழைப்பார்கள். அநேகமாக முதலாவது பிரசவத்தின் பின்னர்தான் இது ஏற்படுவதாக அறியப்பட்டாலும், அடுத்த பிரசவங்களிலும், சில வேளைகளில் கருச்சிதைவுக்குப் பின்னரும் (ABORTION) இது ஏற்படலாம். சோகம், பதற்றம், எரிச்சல், உணர்ச்சிகள் அடிக்கடி மாறுதல் (MOODS CHANGES) களைப்பு என்ற நோய்க் குணங்கள் இதன்போது ஏற்படலாம். பிரசவத்தின் பின்னர் ஏற்படும் இந்த கோளாறு ஓரிரு வாரங்களில் தானாகவே குணமாவதுண்டு. ஒரு சில தாய்மாருக்கு பிரசவத்தின் பின்னர் ஒரு விதமான பீதி மனோநிலை PSYCHOSIS ஏற்படுவதுண்டு. அதன் போது வெறிபிடித்தவர்கள் போல தன்னையோ அல்லது தனது குழந்தையையோ காயப்படுத்த முயல்வார்கள். இந்நிலைக்கு உடனடி வைத்திய உதவி அவசியப்படும்.

இந்தக் கோளாறு எதற்காக, எதனால் ஏற்படுகிறது என்பதை திட்டவட்டமாக கூறமுடியாது. உடலியல் மற்றும் உளவியல் மாற்றங்கள் தான் இதற்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

பிரசவத்தின் பின்னர் முதல் 24 - 48 மணித்தியாலங்களில் உடலில் உள்ள பெண் ஹோர்மோன் மற்றும் புரஸ்ரோஜன் ஈஸ்ரஜோன் (OESTRO-GEN) பெருமளவில் குறைவதால் உடலியலில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவை DEPRESSION எனப்படும் மன இறுக்கத்தை ஏற்படுத்துகின்றன. மேலும் தைராய்ட் சுரப்பும் இவ்வேளையில் குறைந்து மனஇறுக்கத்தை அதிகரிக்கிறது. பிரசவத்தின் முன்னர் ஏற்படும் நித்திரை குறைவு, பின்னர் ஏற்படும் களைப்புணர்வு என்பவையும் இந்த கோளாறை அதிகரிக்கின்றன. இது தவிர திட்டமிடாத கர்ப்பம் (UNPLANNED PREGNANCY) காலத்திற்கு முந்திய பிரசவம், பிரசவத்தினால் ஏற்படப்போகும் தனி மனித சுதந்திரத்தின் இழப்பு, அழகு குறைதல் என்ற நினைப்பு, குழந்தை வளர்ப்புக்கு சுற்றத்தாரின் உதவி, ஆதரவு கிடையாது போதல் என்பவை மனோநிலை மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

இவையெல்லாம் ஒன்றுசேர்ந்து இந்த கோளாறுக்கு காரணமாகின்றன. இந்த பிரசவத்தின் பின்னர் ஏற்படும் மனப்பிறழ்வு - சரியான வழியில் சிகிச்சை பெறாவிடில் தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் CHRONIC DEPRESSION ஆக வந்து கொண்டிருக்கும். இந்த தாயின் மனோநிலை குழந்தையின் வளர்ச்சிக்கு ஊறுவிளைவிக்கக் கூடியது.

இதற்கு சிகிச்சை முறை மருந்துகள் அல்ல. ஒரு சிலர் B COMPLEX விற்றமின் மாத்திரைகளை பாவித்துவருகிறார்கள். மனோவைத்தியம் கூடதாற்காலிகமானதே.

இந்தக் கோளாறுக்கு தாய்க்குப் போதிய ஓய்வு இல்லாததே முக்கிய காரணமாக இருப்பதால் கணவன் தொடக்கம் வீட்டில் உள்ள அனைவரும் குழந்தையின் வேலைகளை, வீட்டு வேலைகளை பகிர்ந்து உதவுதல், தாய்க்கு தெம்பூட்டும் வகையில் பேசுதல், ஆதரவு, ஆறுதல் அளித்தல் போன்றவை கோளாறு ஏற்படுவதைத் தவிர்க்கும். CRITICIZING எனப்படும் தாயை எந்த வேளையும் விமர்சிக்காமல் இருப்பது அவசியம். நிறைய பழங்கள், காய்கறிகள் என்பவை உணவில் சேர்க்கப்பட வேண்டும். கோப்பி, தேநீர், இனிப்பு பண்டங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். ஓரளவு இயலுமானவரையில் உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும். இந்த வழிமுறைகளால் இந்த கோளாறு ஏற்படுவதைத் தவிர்ப்பது மாத்திரமல்ல, கோளாறு ஏற்பட்டாலும் விரைவில் குணமாக முடியும்.

கேள்வி:- வயது 24. எனக்கு குளிரான பதார்த்தங்களை சாப்பிடும் போது பற்கள் கூசுகின்றன. ஆனால், சகல பற்களும் பூச்சி அரிக்காமல் நன்றாகத்தான் உள்ளன. இதற்கு காரணம் என்ன? இதனைக் குணப்படுத்துவது எவ்வாறு?

பதில்:- பொதுவாக பற்கள் உறுதியாகவும் - உணவு கடித்து மெல்லக்கூடியவையாகவும் இருக்க வேண்டும். ஆனால், உங்கள் பற்களோ குளிர் பதார்த்தங்களை சாப்பிடும்போது கூசி வேதனை தருகின்றன. இதனை SENSI-TIVE TEETH என்று வைத்தியர்கள் அழைப்பார்கள். முரசுக்கு மேலே தெரிகின்ற பற்பகுதி CROWN எனப்படும். இது உலகிலேயே கடினமான பொருளான எனமல் (ENAMEL) படையால் மூடப்பட்டுள்ளது. இதனால் DENTINE என்கின்ற உள்படை தன்னுள் பொதிந்துள்ள பற்களின் நரம்புகளை பாதுகாக்கின்றது. முரசும் பற்களும் சந்திக்கின்ற இடத்தில் உள்ள எனமல் மெல்லியது. இந்த இடத்தில்தான் TARTAR அல்லது PLAQUE என்கின்ற பற்படை உருவாகிறது. எனமல் சிதைந்து உள்ளிருக்கும் DENTINE வெளியில் தெரியும்போது குளிர் உணவுகள், இனிப்பு, அமில பதார்த்தங்கள் நேரடியாக நரம்புகளில் பட்டு கூச்சத்தன்மையை உருவாக்கும். இதுதான் உங்கள் விடயத்தில் நடைபெறுகிறது.




பெரும்பான்மையாக இருபது வயதிலிருந்து நாற்பது வயதுக்கிடைப்பட்ட பெண்களுக்குத்தான் இந்த பற்கூச்சம் ஏற்படுகின்றது என்று பிரித்தானிய பல் வைத்தியர் சங்கம் ஆய்வு நடத்தி கூறுகிறது.

இந்த எனமல் சிதைவு பெறுவதற்கு பல காரணங்கள் உள்ளன. முக்கிய காரணம், வயிற்றில் உள்ள அமிலம் வாயினுள் வரும் கோளாறு. இதனை ACIDREFLUX அல்லது GASTRITIS என்று அழைப்பர். தவறான உணவு முறைதான் இந்தப் பிரச்சினைக்கு முக்கிய காரணம். இரவில் தூங்கும் போது இப்படி வாய்க்குள் மேலெழுந்து வரும் வயிற்று அமிலம் பற்களின் ஈறுகளில் உள்ள எனமலைக் கரைக்கின்றது. இது தவிர வாய்ச் சுகாதாரத்தை பேணாமல் இருப்பது, பற்சிதைவு, முரசு கரைதல், முரசுகளில் ஏற்படும் கோளாறு. தூங்கும் போது பற்களை அரைக்கும் (GRINDING) பழக்கம் என்பவையும் பற்கூச்சத்துக்கு காரணங்களாகும். இரவில் தூங்க முன்னர் அமிலம் தடுத்தக்கூடிய உணவுகளை உண்பது, கடினமான பற்தூரிகைகளைக் கொண்டு பற்களை முன்னும் பின்னுமாக துலக்குவது போன்ற விடயங்களும் பற்களின் எனாமலை கரைக்கும்.



பற்கூச்சம் ஏற்படுவதை தவிர்க்க வருடத்துக்கு ஒரு தடவையாவது பல் வைத்தியப் பரிசோதனைக்கு செல்ல வேண்டும். மெதுவான பற்தூரிகைகளைக் கொண்டு மேலிருந்து கீழாக பற்களை துலக்க வேண்டும். பல் துலக்கிய பின்னர் முரசுகளை விரல்களைக் கொண்டு மேலிருந்து கீழாக இறுக்கமாக நீவிவிட வேண்டும். தினமும் உணவு உட்கொண்ட பின்னர் பற்களைத் துலக்க வேண்டும். பற்கூச்சம் உள்ளவர்கள் பற்கூச்சத்துக்கு தயாரிக்கப்பட்ட SENSODYNE, THERMOSEAL போன்ற விசேட பற்பசைகளை தொடர்ந்து உபயோகிக்க வேண்டும். மிகச் சூடான, மிகக் குளிரான உணவுகளை உண்பதை தவிர்க்க வேண்டும்.

கேள்வி:- எனது மனைவி வயது 32. கடந்த வருடம் ஒரு வாகன விபத்தில் காயமடைந்தார். தலையின் பின்புறத்தில் அடிபட்டதினால், MRICT ஸ்கேன் செய்யப்பட்டு பெரிதாக பிரச்சினைகள் இல்லை என்று கண்டறியப்பட்டது. ஆனால், அவரது முகர்வு (SENSE OF SMELL) உணர்வு ஆரம்பத்தில் குறைவாக இருந்தது. ஆறு மாதத்தின் பின்னர் மலர்களின் வாசனை, பொரியல் வாசனை, PER-FUMES வாசனைகள் ஆகியவற்றை ஓரளவு உணர முடிகின்றது. மதிய உணவு, இரவு உணவு உட்கொண்ட பின்னர் வாந்தி, வயிற்றுப் பிரட்டல் குணம் ஏற்படுகின்றன. ஏன் இன்னும் எனது மனைவியின் முகர்வு உணர்வு முற்றாகத் திரும்பி வரவில்லை?

பதில்:- தலையில் ஏதாவது தாக்கங்கள், காயங்கள் ஏற்பட்டால் முற்றாக முகர்வு உணர்வு இல்லாமல் போவதும் (ANOSMIA), முகர்வு உணர்வுகள் பிழையான வாசனைகள் தருவதும் (PAROSMIA) பொதுவாக நடைபெறுவது உண்டு. இந்தக் கோளாறு காலம் செல்லச்செல்ல முற்றாக குணமாவதும் உண்டு. அல்லது ஓரளவு மட்டுமே குணமடைவதுண்டு. குறைந்தது ஒரு வருடத்துக்குள் எந்தளவு முகர்வு உணர்வு திரும்பி வந்ததோ அதுதான நிரந்தரமாக நிலைத்து நிற்கும். இதற்கு எதுவித சிகிச்சையும் தேவையில்லை. ஆனால், உங்கள் மனைவிக்கு ஏற்படும் வாந்தி - வயிற்றுப் பிரட்டல் குணம் பற்றி ஆராயப்பட வேண்டும். தலையில் ஏற்படும் காயங்களுக்கு பின்னர் வயிற்றுப் பிரட்டல், வாந்தி என்பன ஏற்படுவது மூளை அழற்சியின் அறிகுறியாக கணிக்கப்படுகிறது. விபத்துகளின் பின்னர் மூளையில் இரத்த கசிவு ஏற்படுவதனால் மூளை அழற்சி ஏற்படுகிறது. சில வேளைகளில் விபத்தின்போது ஏற்பட்ட சிறு இரத்தக் கசிவு அந்த வேளையில் CT, MRI ஸ்கேன் பரிசோதனையில் தென்படாத அளவில் சிறிய அளவாக இருப்பினும் காலம் செல்லச் செல்ல அது கட்டியாகி நீர் உறிஞ்சும் தன்மை பெற்று வளர்ந்துபெரிதாகும் சந்தர்ப்பம் உண்டு. அந்த வேளையில் அது மூளையை சுழற்சியுறச் செய்து, இம்மாதிரி விளைவுகளை கொடுக்கலாம். எனவே, திரும்பவும் அவரை NEUROLOGIST எனப்படும் நரம்பு சிகிச்சை நிபுணரின் ஆலோசனை பெற அழைத்து செல்வது நல்லது.

**இலவச மருத்துவ ஆலோசனைகள்**

'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
**எஸ்.அருள் ராமலிங்கம்**
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை கொழும்பு - 14.



# உயிர் வலிக்கும் கணங்கள்...!

## இறந்து கிடந்த குழந்தையை நாய்கள் கடித்துக் குதறின

2009 ஜனவரி 21 ஆம் திகதி. எனது நண்பனின் வீரச்சாவு நிகழ்வுக்குச் சென்றேன். செல்லும் பாதைகள் தோறும் மக்கள் வலியோடு வலி சுமந்த படி உண்ணாமல் உடமைகளை இழந்து உறவுகளைப் பிரிந்து அழுதுகொண்டிருந்தார்கள். நண்பனின் வீரச்சாவட நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்றேன். மறு நாள் காலையில் அதே வழியாக தனிமையாக நடந்து வந்தேன். எந்த ஒரு மனித நடமாட்டமும் இல்லை. எதுவுமே புரியவில்லை. கொஞ்ச தூரம் நடந்து சென்றேன். சிறிது தூரத்தில் காகங்கள் கரைந்தபடி இருந்தன. நாய்கள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. அதன் அருகே மிக விரைவாக சென்றேன். சென்ற பின்புதான் தெரியும், எறிகணை எமது மக்களை பலியெடுத்து இருக்கிறது என்று. என் இதயம் பதறிப் போனது. என் கண்களில் இருந்து நீர் கசிந்தது. நாய்களும் காகங்களும் பிணங்களை பிய்த்தெரிந்து கொண்டிருந்தன. முப்பதுக்கு மேற்பட்டவர்கள் உடல் சிதறி பிணங்களாக கிடந்தனர். வீதிகள் தோறும் இரத்த ஆறாக காணப்பட்டது. என்ன செய்வது என்று தெரியாமல் என் கால்கள் மறு அடி எடுத்து வைக்க மறுத்தன. சிறிது தூரம் சென்றேன். மாட்டு வண்டியின் கீழ் இரண்டு நாய்கள் சண்டை போட்டுக் கொண்டிருந்தன. எனது உடம்பு பதறிப்போனது. உடம்பெல்லாம் புல்லரித்தது. ஒரு கர்ப்பிணித் தாய் கொல்லப்பட்டிருந்தார். அவரின் வயிற்றில் எறிகணைத் துண்டு பட்டு வயிறு சிதறி குழந்தை வெளியே வந்து தொப்புள் கொடியோடு இறந்து கிடந்தது. குழந்தையை நாய்கள் கடித்துக்குதறும் காட்சியை கண்ட என் உடல் நடுங்கியது. கோபம் தாங்க முடியாமல் எனது துப்பாக்கியை எடுத்து நாயை சுட்டு விட்டேன். பின்பு அந்த அம்மாவின் உடலை என்னிடம் இருந்த சாரத்தைக் கிழித்து மூடிவிட்டு கண்ணீரோடு அங்கிருந்து நகர்ந்தேன்.

அந்த வான் கழுகுகள் (ஏவுகணைகள்) காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமாக வந்தன. அவ்விடத்தை விட்டு வேகமாக நகரத் தொடங்கினேன். சிறிது தூரம் சென்ற பின்பு சன நடமாட்டம் தெரிந்தது. வான் கழுகுக்கு பயந்து மக்கள் நாலு பக்கமும் சிதறி ஓடினார்கள். வான் கழுகு தனது கொடூர எச்சத்தை கொட்டிவிட்டுச் சென்றது. சிறிது நேரத்தில் கூக்குரல் வானுயரக்கேட்டது. மக்களின் உடல்கள் இறைச்சித் துண்டங்களாக சிதறிக் கிடந்தன. காயப்பட்டவர்கள் வலி தாங்க முடியாமல் கதறினார்கள். உறவை பிரிந்தவர்களின் கதறல்கள் என்னைப் பாடாய்ப்படுத்தியது. காயப்பட்ட அனைவரையும் வேகமாக வாகனத்தில் ஏற்றி மெடிசினுக்கு அனுப்பிவிட்டேன். மீண்டும் எறிகணைகள் எம் மக்களின் வீடுகளை பதம் பார்த்தன. கொட்டகைக்குள் கதறும் சத்தம் கேட்டுக் கொண்டு இருந்தது. பக்கத்தில் இறந்த அக்காவின் சாரத்தைப் பறித்துக் கொண்டு ஒரு கொட்டகைக்குள் ஓடினேன். குடும்பமே இரத்த வெள்ளத்தில் கிடந்தது. சிறுவன் ஒருவன் வயிற்றில் காயப்பட்டு இருந்தான். அவனை என் மடியில் தூக்கிவைத்து காயத்தை கட்டினேன். அம்மாவை காப்பாற்றுங்கோ என கூறியபடி என் மடியில் அவன் இறந்து விட்டான். அவனை விட்டு விட்டு அவனின் தந்தையாரின் காயத்தை கட்டச் அங்கே சென்றேன். அவருக்கு மூச்சு இல்லை. பின்பு தாயாரின் காயத்துக்கும், சிறுமியின் காயத்துக்கும் கட்டுப்போட்டு மெடிசினுக்கு அனுப்பி விட்டேன். என் உடம்பில் இருந்த இரத்தத்தை பார்த்து எவரும் ஆச்சரியப்பட வில்லை. தமிழன் வாழ்வில் இரத்த வாடையும், பிணவாடையும் பழகிப்போனவை தானே! இப்படியே தினம் தோறும் அவலங்களோடு எம் மக்களின் வாழ்க்கை ஓடிக்கொண்டு இருந்தது.



**அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்**

சிறிது காலம் சென்றது. நான் காலில் காயப்பட்டு மெடிசினில் இருந்தேன். ஏப்ரல் 8, 2009 அன்றைய தினம் அதிகாலையில் அப்பிரதேசம் அமைதியாக இருந்தது. மக்கள் தங்கள் அடிப்படை தேவைகளை மிக வேகமாக செய்து கொண்டு இருந்தாரகள். காலை 8 மணி வழமையாக அந்த நேரத்தில் எறிகணைகள் வந்து விழும். ஆனால் அன்று வழமைக்கு மாறாக அமைதியாக இருந்தது. சிறிது நேரத்தில் வானொலியில் ஓர் அறிவிப்பு வந்தது. பாதுகாப்பு வலயம் அரசாங்கத்தினால் பிரகடனம் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. மக்கள் தங்கள் பங்கர்களை விட்டு வெளியே வந்தனர். தங்கள் வேலைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். அன்று எவருமே அறிய வில்லை எமன் பலருடைய உயிரை காவு கொள்ளப்போகிறான் என்று.

மதியம் 12 மணி எறிகணைகள் காதை கிழித்தபடி எம் மக்களின் கொட்டகைகளை தாக்கின. மக்கள் நான்கு பக்கமும் சிதறி ஓடினார்கள். எமன் விடவே இல்லை. அவர்களை கலைத்து கலைத்து உயிர்களை காவு கொண்டான். எங்கும் கூக்குரல் ஓயவில்லை. எறிகணைகள் கூடுதலாக விழத்தொடங்கின. நான் அவ்விடத்தை விட்டு நகரத்தொடங்கினேன். என் சொத்தான இரண்டு ஊன்று கோல்களின் உதவியோடு நகரத் தொடங்கினேன். வீதிகள்தோறும் உடல்கள் சிதறிக்கிடந்தன. காயப்பட்டவர்கள் கதறிக்கொண்டிருந்தனர். மண்நிற பூமி இரத்த பூமியாக மாறிக்கிடந்தது. என்னால் அதிக தூரம் நடக்கமுடிய வில்லை.எறிகணைகள் எனக்கு மிக அருகில் விழத்தொடங்கின. பக்கத்து கொட்டகைக்குள் மண்மூடையால் பங்கர் அடித்து இருந்தது. நான் பாதுகாப்புக்காக அந்த கொட்டகைக்குள் சென்றேன். என் இதயம் பதறிப் போனது. உடம்பெல்லாம் நடுங்க தொடங்கியது. என்ன கொடுமை. ஒரு தாய் பிள்ளைக்கு பால் கொடுத்து கொண்டு இருந்த போதே தலையில் பாரிய காயம் பட்டு இறந்து கிடந்தாள். உடம்பெல்லாம் இரத்தத்தால் நனைந்திருந்தது. ஏதும் அறியாத பச்சிளம் குழந்தை தாயின் மார்பில் இருந்து வடிந்த குருதியை உறிஞ்சிக் கொண்டு இருந்தது. என் உடம்பெல்லாம் புல்லரித்தது. ஒரு கணம் என்ன செய்வது என்று தெரிவில்லை. பின் பிள்ளையை தாயிடம் இருந்து பிரித்து, உடம்பில் இருந்த இரத்தத்தை துடைத்து விட்டு தூக்கி வைத்திருந்தேன். பிள்ளை பசியால் அழத் தொடங்கியது. சிறிது நேரத்தில் மெடிசின் வாகனம் அவ்விடத்துக்கு வந்தது. அதில் பிள்ளையை கொடுத்து விட்டேன். பின் அப்பிள்ளை என்ன ஆனது என தெரியாது.

தமிழனுக்கு மறு ஜென்மம் ஒன்று இருந்தால், அந்த ஜென்மத்தை பாவப்பட்ட ஜென்மமாக கடவுள் படைக்கக் கூடாது.

**ஆர். இடிமாண்.**

உலகின் மூத்த இனங்களில் ஒன்று தமிழினம். முதல் ஏழு மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்று. கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தின் மூத்தக் குடி தமிழ்க்குடி. மிகப் பழைய பெரும் புகழ் கொண்ட பண்பாட்டையும் வாழ்வையும் வரலாற்றையும் உடையவர்கள் தமிழர்கள். வீரத்துக்கும் மானத்துக்கும் சிறந்தது தமிழர் வாழ்வே. கங்கையும் கடாரமும் வென்றவர்கள் தமிழர்கள்.

இப்படித் தமிழர்களின் புகழுக்கும் பெருமைக்குமாகச் சொல்லப்படும் சிறப்புகள் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். நானும் அறிந்திருக்கிறேன்.

10. கோட்பாடு ரீதியாகவும் தத்துவார்த்த ரீதியாகவும் தமிழில் அடையாளம் காணப்பட்ட மேதைகள்?

அடடே, தப்பு நடந்துவிட்டது. நவீன தமிழர்களின் சிறப்புகளைப் பற்றிச் சொல்ல முற்பட்டு, இப்படிக் கேள்வி சார்ந்த ஒரு பட்டியலை அடுக்கிவிட்டேன். ஆகவே, மன்னித்துக்கொள்ளுங்கள்.

ஆனால், முடிந்தால் இந்தச் சிறிய கேள்விகளுக்கான பதில்களையும் வேடிக்கையாக எழுதிப் பார்த்துக்கொள்ளுங்கள்.

சரி, நாம் அப்பால் செல்லலாம். தமிழர்களின் நவீனகாலச் சிறப்புகள் என்றால்....?

இந்தமாதிரியெல்லாம் நாம் சிந்திக்க வேண்டாமா?

ஏனென்றால், பொதுவாக நாம் பேசும்போது உலகம் முழுவதும் இன்று எட்டுக்கோடி தமிழர்கள் இருக்கின்றனர். தமிழர்கள் பலமானதோர் சமூகக் கட்டமைப்பையும், வரலாற்றுத் தொடர்ச்சியையும், பண்பாட்டுப் பேறுகளையும் உடையோர் என்றெல்லாம் சொல்லிக் கொள்கிறோம்.

ஆனால், இந்த எட்டுக்கோடி தமிழர்களும் சில பொதுப் பிரச்சினைகளில் ஒன்றுபட்டு செல்வாக்குச் செலுத்தும் தரப்பினராகவோ, தாக்கத்தை ஏற்படுத்தும் அளவினராகவோ இருக்கிறார்களா?

மனப்பாங்கு, பெரியாரியம் எல்லாம் இன்று என்ன நிலையில் உள்ளன?

கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டு அரசு மத்திய அரசுடன் அல்லது வடக்கின் பெரும் கட்சிகளுடன் கூட்டுவைத்தே அரசியல் அதிகாரத்தைப் பெறுகிறது; ஆட்சியை நடத்துகிறது.

ஆறு கோடி தமிழர்களுக்கு முதல்வராக இருப்பவர், தன்னுடைய நாளாந்தக் கடமைகளான மலசலம் கழிக்கச் செல்லவே பிறரின் உதவியை நாடும் ஒருவராக இருக்கிறார். ஆனால், இவரை மகிழ்விக்கவும், இவரைப் பாராட்டவும் பருவ வயதுப் பெண்களும்

# தமிழர்கள் தோற்றுக்கொண்டிருக்கிறார்களா?

இவையெல்லாம் தமிழர்களின் பழங்காலச் சிறப்புகளாகவே சொல்லப்படுகின்றவை.

தமிழர்களின் நவீனகாலச் சிறப்புகளும் தாராளமாக இருக்கின்றன. ஒரு மூத்த இனத்துக்கு எப்படித் தனிச் சிறப்புகள் இல்லாமலிருக்க முடியும்? ஆனால், இந்தச் சிறப்புகளை எல்லாம் இங்கே என்னால் முழுமைப்படுத்த முடியவில்லை. அதற்காக உங்களிடம் சற்றுத் தயக்கத்தோடு மன்னிப்பைக் கோரிக்கொள்கிறேன். தயவுசெய்து இதனையிட்டு என்னைக் கோபித்துக் கொள்ளாதீர்கள்.

தமிழர்களின் நவீனகாலச் சிறப்புகளைப் பற்றிச் சிந்தித்தபோது அது பெரியதொரு நீண்ட பட்டியலாகவே இருக்கிறது. இங்கே அவற்றை அப்படியே குறிப்பிடாமல், வகைமாதிரிக்கான உதாரணமாக சிலவற்றை மட்டுமே குறிப்பிடுகிறேன்.

1. தமிழர்கள் அதிகமாகப் பார்க்கின்ற தமிழ்த் தொலைக்காட்சி? (பின்னே தமிழர்கள் தமிழ்த் தொலைக்காட்சியைப் பார்க்காமல் வேறு என்ன மண்ணாங்கட்டியையா பார்ப்பார்கள்?)

2. அந்தத் தொலைக்காட்சியில் அல்லது அவர்கள் பார்க்கும் தொலைக்காட்சிகளில் அதிகம் பேரைக் கவர்ந்த நிகழ்ச்சி?

3. தமிழர்களுக்குப் பிடித்தமான லட்சக்கணக்கான வாசகர்களுக்கு அறிமுகமான கவிஞர் - எழுத்தாளர்கள்?

4. கோடிக்கணக்கான தமிழர்களின் பேரபிமானம் பெற்ற தமிழ் அரசியல் குடும்பம்?

5. தமிழர்கள் கடந்த ஒரு நூற்றாண்டாக (இந்தியாவிலும் இலங்கையிலும்) கைக்கொண்ட அரசியல் வழிமுறைகளும் அரசியல் கோட்பாடுகளும்?

6. லட்சக்கணக்கான அல்லது கோடிக்கணக்கானவர்களின் ஆதரவைப் பெற்ற சினிமாவும் நடிகரும்? (இதுவும் ஒரு கேள்வியா? 'எந்திரன்' படத்துக்கு கிடைத்திருக்கும் மா.... பெ....ரு....ம்... வரவேற்பைப் பற்றி அறியாத மக்குக் கேள்வி இது?)

7. நடந்துகொண்டிருக்கும் இந்த நூற்றாண்டில் தமிழர்கள் சாதித்த சாதனைகள்? அதாவது, அரசியலில்? அறிவியலில்? கலையில்? இலக்கியத்தில்?

8. தியாகம், வீரம், இலட்சியம், தர்மம், அறிவு, பண்பு எல்லாவற்றிலும் எல்லோரையும் வியக்க வைக்கும் தமிழர்கள் கடந்த 500 ஆண்டுகளில் இவற்றின் மூலம் எத்தகைய வெற்றிகளைப் பெற்றிருக்கிறார்கள்? அல்லது சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறார்கள்?

9. கடந்த 500 ஆண்டுகளில் (இந்தக் காலப் பகுதியின் உலக வரலாறு என்பதே மனித குல வரலாற்றின் மிகப் பெரிய சாதனைகளின் இரண்டாம் கட்டம் என்று கருதப்படுகிறது. அறிவியல் - விஞ்ஞானம் - தொழில்நுட்பம் - தகவல் போன்றவற்றில் சர்வதேச வலையமைப்பு முழுமையடைந்த காலம் எனக் கூறப்படுகிறது) உலகம் கண்டடைந்த விஞ்ஞான அறிவியல் சாதனைகளில் தமிழர்களின் பங்களிப்பு?

**ஜோசப் தயாளன்**

உலகமெங்கும் தமிழர்கள் வாழ்கிறார்கள். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கான ஆதரவு அமைப்பு ஒன்றைக் கூட வைத்திருக்கும் நிலையில் இன்று அவர்களின் வளர்ச்சியிருக்கிறது.

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, ஜப்பான், கனடா, இலங்கை, மலேசியா, அவுஸ்திரேலியா உட்பட அனைத்து நாடுகளிலும் ஒரே நாளில் சினிமாவை வெளியிடக்கூடியவர்களாகத் தமிழர்கள்



மட்டுமே இருக்கிறார்கள்.

ஒரு பிரச்சினையை அல்லது ஒரு விடயத்தைப் பற்றி ஆண்டுக் கணக்காகப் பேசுவதில் களைப்படையாதவர்களாகவும், சலிப்படையாதவர்களுமாக தமிழர்களே இருக்கின்றனர். (உதாரணங்களாக இலங்கை இனப்பிரச்சினை பற்றியும், தமிழர்களின் பண்பாடு குறித்தும் கதைக்காத தமிழர்களும் இல்லை; கதைக்காத நாட்களும் இல்லை)

மிகப் பிரமாண்டமான ஊர்வலங்களை அரசியலுக்கும், சினிமாவுக்கும், வேறு பண்பாட்டு நிகழ்வுகளுக்கும் நடத்தும் வல்லமை தமிழர்களிடமே உள்ளது. குறிப்பாக வன்னிப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த 2008 காலப்பகுதியில் மனித சங்கிலிப் போராட்டத்தில் தமிழகம் பெரும் சாதனையை நிலைநாட்டியிருந்தது. பின்னர் செம்மொழி மாநாட்டின்போது இன்னொரு சாதனை. இப்போது 'எந்திரன்' பட வைபவங்களில் பிறிதொரு சாதனை.

ஆகவே, இந்த மாதிரி நாம் பல விடயங்களைச் சொல்லிக்கொண்டு போகலாம். ஆனால், எங்களுடைய தற்போதைய நிலை என்ன?

எங்களுடைய தலையாய பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண முற்பட்டிருக்கிறோம்? அடுத்ததாக என்ன செய்யப்போகிறோம்? இப்போதிருக்கும் சரி, தவறுகளை எவ்வாறு நாம் மதிப்பிடுகிறோம்? அல்லது அவ்வாறு நம்மை நாமே மதிப்பீட்டுக்கொள்கிறோமா?

குறிப்பாக, இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினை நடைபெற்ற போர் - போரின் பின்னரான அகதி முகாம் அவலம் - இப்போதைய மீள்குடியேற்றப் பிரச்சினைகளில் கூட தமிழர்களின் செல்வாக்குத் தீர்மானமும் எப்படியிருக்கிறது?

ஆகவே, இவற்றைச் சற்று நிதானமாகச் சிந்தித்தால் சில உண்மைகள் நமக்குப் புரியும்.

எட்டுக் கோடித் தமிழர்களும் வெவ்வேறு தரப்பினர்களே! அவர்கள் வியாபார ரீதியாக ஒன்றுபடும் அளவுக்கு சீரியஸான அரசியல் மற்றும் மனிதாபிமானப் பணிகளில் ஒருபோதும் ஒன்றுபட்டு நிற்பதில்லை. வியாபார ரீதியிலும் சீரழிவுக்கலாசாரம் என்ற அளவிலான சினிமாவிலும் தொலைக்காட்சித் தொடர்களிலும்தான் அதிகளவில் ஒற்றுமைப்படுகிறார்கள்.

அத்துடன், உடைகள் விடயத்திலும் (இந்த உடைகளை அறிமுகப்படுத்துவதில் சினிமாவே அதிக பங்கை வகுப்பதால்) ஓரளவுக்கு இந்த ஒன்றுபடுதல் உண்டெனலாம்.

மற்றும்படி, அரசியல், அறிவியல், ஊடகம், மனிதாபிமானப் பணிகள் போன்றவற்றில் எல்லாம் மிகவும் பலவீனமான நிலையிலேயே தமிழர்கள் உள்ளனர்.

தமிழகத்தில் 1940 களில் நிலவிய திராவிட கோட்பாடு- தமிழ்நாடு பற்றிய பேச்சுகள், ஹிந்தி எதிர்ப்பு, வடக்கின் ஆதிக்கத்துக்கு எதிரான


நடிகைகளும் பகிரங்க மேடைகளில் ஆடிக்காட்டுகிறார்கள். இதைப் பெருமையோடு சில புகழ்பெற்ற (தமிழர்களிடம் மட்டும்) தொலைக்காட்சிகள் ஒளிபரப்புகின்றன. இதைக் கோடிக்கணக்கான மக்கள் உளப்பூரிப்போடு ரசித்துப் பார்க்கிறார்கள்.

இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் ஏறக்குறைய ஐந்து லட்சம் மக்கள் உள்ளனர். சாதாரண பாதிப்புடன் 20 லட்சம் மக்கள் உள்ளனர். கடுமையான பாதிப்புக்குள்ளாகியவர்கள் குறைந்தது நான்கு லட்சத்துக்கு மேலானோர். ஆனால், இவர்களுக்கு உதவுவதற்கு இதுவரையில் ஒழுங்கான ஒரு மனிதாபிமான அமைப்பைத் தமிழர்கள் வைத்திருக்கிறார்களா? அந்த மனிதாபிமான அமைப்பு சர்வதேச நியமங்களைக் கொண்டதா? அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எல்லைகளற்ற முறையில் - வரையறையற்ற முறையில் செயற்படும் திறனுடன் உள்ளதா?

பண்பாட்டுக்கு அமைப்புகள், மொழி வளர்ச்சிக்கு அமைப்புகள், திரைப்படத்துறைக்கு அமைப்புகள், அதற்கு, இதற்கு என ஆயிரம் அமைப்புகளோடு இருக்கும் தமிழர்கள் உருப்படியான ஊடக அமைப்பையோ, மனிதாபிமானப் பணிகளுக்கான அமைப்புகளையோ சர்வதேச அளவில் கொண்டிருக்கவில்லை என்பது தமிழ் பழங்குடியின் பலவீனமன்றி வேறென்ன?

வெறும் பெருமை பேசுவதால் பயனேதுமில்லை. 'தாழ்ந்து பறக்கும் தமிழ்க் கொடி' என்று ஒரு தடவை எழுத்தாளர் சுந்தரராமசாமி எழுதியிருந்தார். அதுதான் உண்மை. அதுதான் நம் நிலைமை. அதுவே நமது துயரம்; ஆமாம், அதுவேதான் நம்முடைய நிரந்தர துயரம்.


## பகவதி அம்மனின் மஹாமந்திர சக்தி



பகவதி அம்மனின் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. ஒருவருடைய ஜனன ஜாதக குறிப்பை தெட்டத்தெளிவாக துல்லியமாகக் கணித்துக்கொள்ள விரும்புவர்கள் பாரத தேவி மாதாவை சந்தியுங்கள். ஒருவருடைய வாழ்க்கை கதையை எழுதி இருப்பது ஜாதகத்தில் அல்லது கைரேகையில் மட்டுமே! பிறப்பு முதல் இறப்புவரை உங்கள் வாழ்க்கை கதையை சரியாக அறிந்துகொள்ள உங்கள் ஜாதகத்தை அல்லது இருகை பெருவிரல் அடையாளத்தை எமக்கு அனுப்பி வையுங்கள். உங்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கும் எதிர்வு கூறல்கள் கூறப்படும்.

**20 வருட நிறைவான சேவை**

பகவதி அம்மாளின் மற்றுமொரு மஹாசக்தியைப் பெற்ற மலையாள மாந்திரீகத்தை பயன்படுத்தி உங்கள் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு பெற்றுத்தருகிறார், பாரத தேவி அன்னை. ஆண் பெண் வசியம், பிரிந்த கணவன் மனைவி ஒன்று சேர்தல், காதலித்தவரையே மணம் முடித்துக்கொள்ளல், பரீட்சையில் வெற்றி, தொழில் முன்னேற்றம், குடும்பத்தில் ஒற்றுமை, வீடு சொத்து பாதுகாப்பு. எந்த ஒரு பிரச்சினைக்கும் 7 நாட்களில் தீர்வு கிடைக்கும்.

இரகசியம் பாதுகாக்கப்படும்

வெளிநாட்டவர்களுக்கும் கடல் கடந்த பலிக்கக் கூடியவாறான வேலைகள் செய்து தரப்படும்.

**பாரத தேவி**

சந்திப்பு - திங்கள், வியாழன், ஞாயிறு
காலை 10.00 - 5.00
சந்திப்புக் கட்டணம் 250.00 ரூபா

12B, கோகிலா வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06. Tel. 078 9429706 / 078 9582820

# facebook ஐ உருவாக்கியவர் இவர் தான்



இந்த விஞ்ஞான உலகத்தில் 'பேஸ் புக்' பற்றி தெரியாதவர்கள் ஒருவருமே இல்லை. எந்த இளையவரைக் கேட்டாலும் இந்த இணையத் தளத்தைப் பற்றிச் சொல்வார்கள். இது சமூகத்தை இணைக்கும் வலைப்பின்னல் போன்ற ஓர் அமைப்பாகும். இது பெப்ரவரி, 2004 ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா மாநிலத்தில்



ஸ்தாபிக்கப்பட்டு, இன்று 50 கோடி மக்களை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. உலகம் முழுவதும் நட்பின் இணையத்தளமாக விளங்குகின்றது.

இந்த பேஸ் புக்கின் மூலம் ஒருவர் இன்னொருவரை நண்பராக ஏற்படுத்திக் கொள்ளலாம். பல தொடர்புகள் மற்றும் பல வித தகவல்களை இந்த அமைப்பின் மூலம் பெறலாம். படிப்பவர்களையும் வேலை செய்பவர்களையும் மற்றும் பல தரப்பினர்களையும் நட்பின் மூலம் இத்த இணையத்தளம் இணைக்கிறது.



உலகெங்கிலுமுள்ள பிரபலமான மக்களைக் கொண்ட ஒருங்கிணைப்பு அமைப்பான இந்த பேஸ் புக்கை உருவாக்கியவர், கலிபோர்னியா மாநிலத்தைச் சேர்ந்த மாணவர் எலியட் சகர்பேர்க் ஆவார். 26 வயதான இவர் மே 14, 1984 இல் பிறந்தார். அமெரிக்காவில் பிரபல கல்வி நிறுவனமான ஹாவாட் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது இவர் தனது சக மாணவர்களான டஸ்ரின் மொஸ்காவிச், எட்யார்டோ சவரின் மற்றும் கிறிஸ் கியூஸ் ஆகியோருடன் இணைந்து இந்த இணையத்தைத் தொடங்கினார். இவருக்கு இதில் 24 வீதம் பங்கு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இன்று இந்தப் பிரபலமான கம்பனியில் 1400 பேர் வேலை செய்கிறார்கள். 2009 இல் இந்த நிறுவனத்தின் வருமானம் 80 கோடி டொலர்களாகும்.

அதிகமாக பொது வாழ்வில் தொடர்புகளை தவிர்ந்து வரும், மார் எலியட், அண்மையில் தான் தனது நீண்ட காலமாகத் தான் வாழ்ந்து வரும் வீட்டிற்குப் பத்திரிகையாளர்களை அழைத்து ஒரு சிறிய பேட்டியை வழங்கினார்.

26 வயதுடைய இவர், இன்று ஒரு கோடீஸ்வரர். இருப்பினும், இவர் இன்னும் பாலோ அல்ரோ என்ற இடத்தில் வாடகை வீட்டிலேயே குடியிருக்கிறாராம். இந்தச் சிறிய வீட்டினுள் படிப்பறையில் ஒரு மேசையும் மூன்று கதிரைகளும் மாத்திரமே இருக்கின்றனவாம்.

பிறீசிலா சென் என்ற சீனப் பெண்ணைக் காதலிக்கிறார். இதனால் இப்போது இவர் சீனமொழியை ஆர்வமாகக் கற்கிறார்.

தினமும் தனது தலைமையகத்தில் 16 மணி நேரம் வேலை செய்கிறார். இவரின் அலுவலகம் வினோதமானது என பத்திரிகையாளர்கள் கூறுகிறார்கள். சக ஊழியர்களுடன் அமர்ந்து தனது லப் டப்பில் வேலை பார்த்துக் கொண்டிருப் பாராம்.

அமெரிக்காவில் நடந்த நிகழ்வு ஒன்றில் அங்கிருக்கும் கல்லூரியின் சீரமைப்புக்கு என 10 கோடி டொலர்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார் மார்க் எலியட்.

குறுகிய காலத்தில், இளம் வயதில் பெரும் பணக்காரராக உயர்ந்துள்ள இவர் வழங்கியுள்ள இந்த நன்கொடையை பலரும் பாராட்டியுள்ளார்கள்.






## அந்தஸ்து

"ரமேஷ்! என்னோடு வேலை செய்யுற பெண் சின்னவயசு! அவளைத் தாலிகட்டினவன் மாரடைப்புலே கல்யாண மண்டபத்திலேயே செத்துப் போயிட்டான். அவளை மனசார விரும்புவதாக தினமும் சொல்றியே, எங்கட குடும்பம், அந்தஸ்து இதைப் பற்றி யோசிச்சியா?" மருதாச்சலம் பேசிக்கொண்டிருக்கும் போதே கைப்பேசி அழைத்தது.

"யாரு தர்மலிங்கமா? அது 2006 மொடல் கார். ஏற்கெனவே இரண்டு பேருதான் மாறியிருக்கு. காரிலே ஒரு சின்ன கீறல் கூட இல்லை. இன்னும் புதுமை குலையாமே இருக்கு. ஆளைக் கூட்டிட்டு வாங்க, மற்ற விஷயங்களை அப்புறம் பேசிக்கலாம்" கைப்பேசியைக் கட் பண்ணினார் மருதாச்சலம்.

"அப்பா, ஒரு சாதாரண இரும்புத் தகர வாகனம்! ஜடம்! அதுக்குப் போய் இத்தனை பில்டப் செய்து மூன்றாவது நபருக்கு விற்க முயற்சிக்கிறீங்களே. ஓர் உயிருள்ள ஜீவனை ஏற்க மறுக்கிறீங்களே. வியாபாரத்தை விட்டுட்டு வெளியுலகத்துக்கு வந்து நல்லது செய்யுங்கப்பா. நான் சொல்வது வாழ்க்கை வியாபாரமல்ல!"

ரமேஷ் சொன்னதில் உள்ள நியாயத்தைப் புரிந்து கொண்டார் மருதாச்சலம்.

## உலகின் உயரமான சிறுவன்

உலகின் உயரமான குழந்தையாக இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தின் மீரட் மாவட்டத்தைச் சேர்ந்த கரன் சிங் கருதப்படுகின்றான்.

இரண்டரை வயதான இக்குழந்தையின் தற்போதைய உயரம் 4 அடி 5 அங்குலம். 7 அடி 2 அங்குலமான இவனது தாயார் ஆசியாவின் உயரமான பெண் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அவர் ஒரு கூடைப்பந்து வீராங்கனையாவார்.



இதே வயதையொத்த குழந்தைகளை விட கரன் சிங் சுமார் 2 மடங்கு உயரமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிறக்கும் போதே இக்குழந்தை 2 அடி உயரம் இருந்ததாகவும், தன்னை விட உயரமாக, தன் மகன் வளர்வான் எனவும் கரனின் தாயார் தெரிவித்துள்ளார்.

கரன் தினமும் 5 ஆப்பிள்கள் 10 தேக்கரண்டி தேன் போன்றவற்றை உண்கின்றான்.

காலையில் எழுந்தவுடனேயே உணவு கேட்பான் என்றும், எப்போழுதும் உணவு உட்கொண்டபடியே இருப்பான் என்றும் இவனது இவரது தாயார் தெரிவிக்கின்றார்.



அமீர் கானின் மனைவி கிரண் ராவ் இயக்கி இருக்கும் 'டோபி காட்' எனும் குறும்படம், டொரன்ட்டோ திரை விழாவில் பாராட்டுக்களைக் குவித்திருக்கிறது. ஆனால், இந்திய சலவைத் தொழிலாளர்களைக் கேவலப்படுத்துகிறது என்று படத்துக்கு எதிர்ப்புக் கிளம்பி, நீதிமன்றப் படியேறி இருக்கிறது விவகாரம். வழக்கமாக நான் இயக்கும் படங்கள்தான் நீதிமன்றப் படியேறி வெற்றி பெறும். இப்போது அந்த ராசி என் மனைவிக்கும் வொர்க் - அவுட் ஆனால், சரிதான்!' என்கிறார் அமீர் ஜாலியாக.



அனில் கபூர் மகள் சோனம் கபூர், சத்ருகன் சின்ஹா மகள் சோனாக்ஷி சின்ஹாவைத் தொடர்ந்து, 'இரண்டாம் தலைமுறை வாரிசு' நடிகைகள் பட்டியலில் இணைகிறார் கோவிந்தா மகள் நர்மதா. படத்தில், கெஸ்ட் ரோலில் வந்து பஞ்சாபி ஆட்டம் போடவிருக்கிறார் அப்பா கோவிந்தா.

சிறுகதை

# அம்மா வந்தாள்!

ச. முருகானந்தன்

“அம்மா... நீ என்னை விட்டுவிட்டு எங்கே போனாய்?” சுயநினைவு வந்த நேரம் முதல் மீண்டும் மீண்டும் சிறுமி சுமதியின் மனதில் எழுகின்ற கேள்வி இதுதான்.

அவளது முனகல் கேட்டு அருகே வந்த தாதி, “அழாதேங்கோ குஞ்சு... அம்மா வந்திடுவா?” என ஆறுதல் சொன்னாள். சுமதியின் குழந்தை மனம் அமைதி அடைவதாக இல்லை. மனதின் துயரம் கண்களில் நீராகப் பெருகியது. “ஒரு நிமிஷம் கூட என்னை விட்டுப் பிரிஞ்சிருக்காத அம்மா எங்கே போட்டா?”

சுமதி தானிருக்கும் சூழலைச் சுற்று முற்றும் பார்த்தாள். அது ஒரு வைத்தியசாலை என்பதும், தான் இருப்பது குழந்தைகள் வாட் பகுதி என்பதும் அவளுக்கு நினைவுக்கு வந்தது. இங்கே அவளைப் போல் இன்னும் பல காயப் பட்ட குழந்தைகள் கட்டிலிலும் தரையிலுமாக நிறைந்து போயிருந்தனர். டாக்டரும், சிற்றூழியர்களும், தாதியரும் பம்பரம் போல் சுழன்று சுழன்று வேலை செய்து கொண்டிருப்பதைப் பார்த்தாள் சுமதி. ‘இவர்களுக்கு ஓய்வே இல்லையா?’ என்று நினைத்துக்கொண்டாள்.

அவளுக்கு மருந்து கட்ட வந்த பெண் அற்றெண்டனுடன் சுமதி புன்னகையைப் பரிமாறிக் கொண்டாள். “மெதுவாக நோகாமல் கட்டுங்கோ மிஸ்.”

“பிள்ளைக்கு நோகாமல் கட்டுறன்.... கொஞ்சம் நோகும்தான்.... பல்லைக் கடிச்சுக் கொண்டு பொறுத்துக்கொள்ளுங்கோ செல்லம்.... அப்பதான் புண் கெதியிலை மாறும். புண் மாறினால் தானே வீட்ட போகலாம்.”

சுமதி சிரித்தாள். “வீட்ட போகேலாது மிஸ்... எங்கட வீடு கந்தபுரத்தில் பிளேன் குண்டு போட்டு உடைஞ்சு போச்சு. அப்பதான் அப்பாவும், அண்ணாவும் செத்தினம்.” மீண்டும் சுமதியின் கண்கள் கலங்கின. மனதின் வலியில் கண்கள் சொரிய சிறிது நேரம் மௌன இடைவெளியில் கழிந்தது.

“அழாதையுங்கோ சுமதிக் குட்டி. எங்கட தாய் மண்ணிலை இந்தச் சண்டையால ஆருக்குத்தான் இழப்பு இல்லை? மிஸ்ஸுட பபாவும், பபாவின்ர அப்பாவும் கூட ஷெல் விழுந்து விசுவமடுவிலை இருக்கேக்கை செத்துப் போச்சினம்.” அவளது கண்கள் கலங்கின.

“மிஸ்.... அழாதேங்கோ...” இப்போது சுமதி மிஸ்ஸுக்கு ஆறுதல் சொன்னாள். “மிஸ் உங்கட பெயர் என்னெண்டு சொல்லுறியளோ?”

“என்னுடைய பெயர் கமலா” என்று கூறியபடி புண்ணைத் துப்புரவு செய்து மருந்து கட்டினாள்.

“எங்கட அம்மாவின்ர பெயர் விமலா. உங்களைப் பார்த்தா அவ மாதிரித்தான்.”

“சுமிக் குட்டி.... உங்களைப் போல தான் என்னுடைய கவிதாக் குட்டியும். ம்.... கனவு போல இருக்கு.”

மருந்து குடிக்கவும் கொடுத்து விட்டு மற்ற நோயாளிகளைப் பார்க்கச் சென்றாள் கமலா.

“அம்மா ஏன் வரவில்லை?” என்று கேட்க வேண்டும் என்றிருந்த சுமதி, அதை மறந்து விட்டதை உணர்ந்து தவித்தாள். அவள் யோசித்துக் கொண்டிருக்கும்போதே டாக்டர் நோயாளர்களைப் பார்வையிட்டபடி அவளருகே வந்தார்.

“பபாவுக்கு இப்ப எப்படி? வலி வேதனை இருக்கோ?” கடவுள் புண்ணியத்திலை கால் தப்பிட்டுது. காலமை சாப்பிட்டுட்டியளோ பபா?”

“ஓம்... கமலா மிஸ் சாப்பாடு தந்தவ. தேத்தண்ணியும் தந்தவ. இப்ப கால் வேதனை குறைவாக இருக்கு டாக்டர்.” சிரித்தபடியே டாக்டர் அடுத்த நோயாளியிடம் விரைந்தார்.

டாக்டரைப் பார்க்கப் பார்க்க சுமதிக்கு வியப்பாக இருந்தது. எவ்வளவு சுறுசுறுப்பாக இயங்குகிறார். இந்த யுத்த காலத்திலை சனத்தோட சனமாக கூட நின்று எவ்வளவு சேவை செய்கிறார். மக்களைப் பற்றி, அவர்கள் படுகின்ற அவலங்களைப் பற்றிக் கொஞ்சமும் சிந்திக்காமல், டாக்டர்மாரை தென்பகுதிக்கு வரும்படி பணித்த ஆட்சியாளர்களை நினைக்க அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. எத்தனையோ டாக்டர்மார் மக்களைக் கைவிட்டுட்டுப் போன பிறகும் நாலைஞ்சு டாக்டர்மார் தான் நிண்டு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கினம். அதுவும் மருந்துக்கும் தட்டுப்பாடு. வெளியிலை வாங்கவும் பாமசியள் இல்லை. அம்மா அடிக்கடி சொல்வது சுமதியின் நினைவுக்கு வந்தது. கூடவே அம்மாவின் நினைவு நெஞ்சை அழுத்தியது.

சுமதி சுற்றுமுற்றும் பார்த்தாள். வாட் நிறைய காயம் பட்ட குழந்தைகள். கை இல்லாமல், கால் இல்லாமல், கண் இல்லாமல், வயிற்றிலை, மார்பிலை சன்னம் பாய்ந்து - பார்க்கவே தாங்க முடியாமலிருந்தது. இவர்களுக்கெல்லாம் சிகிச்சை அளிக்கும் டாக்டர்களையும், தாதியரையும், ஊழியர்களையும் பார்க்கப் பார்க்க நெஞ்சுருகி பெருமிதம் ஏற்பட்டது.

அவள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே கமலா மிஸ் அவளருகே வந்தாள். அவளின் வரவு சுமதிக்கு இதமாக இருந்தது.

“மிஸ் உங்களிட்டை ஒண்டு கேட்க நினைச்சனான் மறந்து போச்சு. அம்மா ஏன் வரவில்லை? அம்மா என்னைப் பார்க்காமல் இருக்க மாட்டாவே?”

சுமதியின் கேள்வியில் கமலாவின் மனது துணுக்குற்றது. காயம் பட்டு ஒரு கையையும், ஒரு காலையையும் பறிகொடுத்து விட்டு இன்னொரு வாட்டில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் விமலாவால் எப்படி வரமுடியும்?”

“அம்மாவும் இன்னொரு வாட்டிலை தான் இருக்கிறா. அண்டைக்கு அவவுக்கும் காயம் பட்டது செல்லம். சுகமானவுடன் சுமிக் குட்டியைப் பார்க்க வருவா. இல்லாட்டி உங்களுக்கு சுகமானவுடன் அம்மாவைப் போய் பார்க்கலாம்” கமலா ஆறுதல் சொன்னாள். காலும், கையும் இல்லாமல், முகமும் சிதைந்துபோன அம்மாவைக் கண்டால் சுமதி மிரண்டு விடுவாள் என்பதாலேயே கமலா தட்டிக் கழித்தாள். சுமதியை நினைக்க அவளது நெஞ்சம் உருகியது.

“மிஸ்... உங்களை மிஸ்சியம்மா எண்டு கூப்பிடட்டே? அம்மாவைப் போல என்னைக் கவனிக்கிறியள்” சுமதியின் அழைப்பில் கமலாவின் நெஞ்சம் உருகியது. கவிதாவின் நினைப்பும் கூடவே வந்து தலைகாட்டி நின்றது.

“மிஸ்சியம்மா... எங்கட வாட்டைப் பார்க்கிற டாக்டர் ரொம்ப நல்லம்... அவற்றை பெயர் என்ன சொல்லுங்கோ...”

“ம்.... மூர்த்தி டாக்டர். பாவம் இராப்பகல் நித்திரை இல்லாமல் சேவை செய்கிறார். வைத்திய நிபுணர்கள் இல்லாத இடத்திலையும் இவை கொஞ்சப் பேர் அரும்பரிய சேவை செய்யினம். உண்மையாகவே இவையள் கடவுளின்ர அவதாரம்தான்.”

“டாக்டர் அங்கிளுக்கு அன்ரி, பபா ஒருத்தரும் இல்லையே மிஸ்சியம்மா?”

“இருக்கினம். அவையை வவுனியாவுக்கு அனுப்பிப் போட்டு இங்கே தனிச்சிருந்து சேவை செய்யிறார். இங்கே மக்கள் படுகிற துன்ப துயரங்களை - காயம் படுகிறதை - சாகிறதை எல்லாம் வெளிநாட்டு வானொலிக்கு பேட்டி கொடுத்ததும் இந்த டாக்டர்தான். இவர் சொல்லாமல் விட்டிருந்தால் நேரடி சாட்சியம் எதுவும் இல்லாமல் போயிருக்கும்” என்று கூறி கமலா சுமதியிடமிருந்து விடைபெற்று மற்ற நோயாளிகளைப் பார்வையிடச் சென்றாள்.

தினமும் கமலா காட்டும் அன்பில் மூழ்கித் திழைத்த சுமதி, அம்மாவை கமலாவின் வடிவில் கண்டாள். எனினும், அம்மாவின் நினைவு அவள் மனதை அரித்துக்கொண்டே இருந்தது. ‘அம்மாவை எப்ப பார்க்கலாம்?’

அம்மா எவ்வளவு பாசமானவள். தினமும் அவள் சொரியும் அன்பில் திளைக்கும் சுமதி, இப்படி ஓர் அம்மா கிடைக்க என்ன தவம் செய்தேனோ என எண்ணுவாள். ஒவ்வொரு முறையும் அம்மாவின் அன்பு மழையில் நனையும்போதும் அவளது நெஞ்சு உருகும். அப்பாவையும், அண்ணாவையும் இழந்த பின்னர், யுத்த நெருக்கடிகள் அதிகரிக்க, விமானக்குண்டும், ஷெல் மழையும் விரட்டியடிக்க ஒவ்வோர் இடமாக இடம்பெயர்ந்து ஓடுற போதும் அம்மாவின் பாசத்தையும் அன்பையும் இன்னொருபடி அதிகமாக உணர்ந்தாள். குண்டுகள் வந்து விழும் போதெல்லாம் அம்மா அவள் மீது பாதுகாப்புக் கவசம் போல படர்ந்திருந்து பாதுகாப்பாள்.’

போன கிழமையும் ஒரு நாள் தொடர்ந்து குடியிருப்புகள் மேல் ஷெல் வந்து விழுந்து கொண்டிருந்தது. எல்லோரும் பதறி அடிச்சு, செய்வது அறியாமல் தவிச்சம். அம்மா என்னை அணைத்தபடி நிலத்தில் வீழ்ந்து படுத்திருந்தா. பெரிய சத்தத்தோட அருகில விழுந்து வெடிச்ச குண்டுச் சன்னங்கள் எல்லாப் பக்கமும் சிதறிச்சு. எங்கும் புழுதி மயம். ஐயோ என்ற அலறல் சத்தங்கள். நான் அப்படியே மயங்கிப் போனேன். பிறகு இந்த வைத்தியசாலையில்தான் கண் முழிச்சன். ம்... அம்மாவுக்கு ஏதாவது நடந்திருக்குமோ? மிஸ்சியம்மா மறைச்சு பொய் சொல்லுறாவோ?” என்று சுமதியின் மனதிலே ஆயிரம் கேள்விகள்.

இன்றும் வழக்கம்போல கமலா உணவுடன் வந்தாள். “சாப்பிடுங்கோ குஞ்சு” “எனக்கு வேண்டாம். எனக்கு அம்மாதான் வேணும். அம்மாட்ட கூட்டிக்கொண்டு போங்கோ. எனக்கு இப்ப சுகம்தானே?” என்ற சுமதியின் குரலில் ஏக்கம் தெரிந்தது.

“டாக்டர் மாமா வந்தவுடன கேட்டுட்டு கூட்டிக் கொண்டு போறன். இப்ப சாப்பிடுங்கோ செல்லம்.” கமலாவின் வார்த்தைகளினால் சுமதியின் முகத்தில் நம்பிக்கை ஒளி தெரிந்தது. தாய்மை ததும்பும் ஆறுதல் வார்த்தைகளில் சற்றுத் தேறி சாப்பிட்டு முடிந்தபோது மூர்த்தி டாக்டர் வாட்டு பார்க்க வந்தார்.

அம்மாவைப் பார்ப்பதற்கு இன்று டாக்டர் மாமாவிடம் கேட்க வேண்டும் என காத்திருந்த சுமதி, டாக்டர் அவளது கட்டிலின் அருகே வந்ததும் தனது மழலை மொழியில், “டாக்டர் மாமா... எனக்கு நல்ல சுகம். கீழே இறங்கி நடந்தும் பார்த்தனான். நான் அம்மாவைப் பார்க்கலாமா?” என்று கேட்டதும் டாக்டர் மூர்த்தியின் முகம் இருண்டது. பதில் எதுவும் சொல்லாமல் சிரித்தபடி அடுத்த கட்டிலுக்குச் சென்றார். சுமதியின் பிஞ்சு முகத்தில் ஏமாற்றம்.

வாட்டு பார்த்து முடிந்து போகும் போது கமலாவை அழைத்தார். “கமலா... அந்தக் குழந்தையின் அம்மாவுக்கு கடுமையாக இருக்கு. இப்பவோ, எப்பவோ கண்ணை மூடுறன் எண்டு உயிர் ஊசலாடுது. எதுக்கும் அந்தப் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு போய் ஒருக்கால் தாயைக் காட்டும்.”

கமலா ‘சரி’ என தலையசைத்தாள்.

“சுமதிக் குட்டி... எழும்புங்கோ. அம்மாவிடம் போவம் செல்லம். ம்... மெதுவாக... ம்... நடக்கக் கூடாது. நான் தூக்கிக் கொண்டு போறன்.” சுமதியைத் தூக்கிக் கொண்டு கமலா பெண்கள் வாட்டை நோக்கி நடந்தாள். தாயைக் கண்டதும் சுமதி அழுது குளறி ஆர்ப்பாட்டம் செய்வாளோ என்ற பயம் கமலாவின் மனதில் இருந்தது. “சுமிக்குட்டி அம்மாவுக்கு பெரிய காயம். கதைக்கவும் ஏலாது. அம்மாவிடம் போனதும் நீங்கள் அழக்கூடாது. அச்சாப் பிள்ளையாக அம்மாவைத் தடவுங்கோ” என்று கூறியபடி வாட்டுக்குள் நுழைந்தாள்.

விமலாவின் கட்டிலின் அருகே சுமதியைக் கொண்டு சென்றபோது அவள், தாயை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. மலங்க மலங்க விழித்தாள்.

“இதுதான் உங்கட அம்மா...” கமலா கூறியதும் நம்ப முடியாதவள் போல் சுமதி வெறித்துப் பார்த்தாள். எனினும், சுமதியை அடையாளம் கண்டுகொண்ட விமலா தனது கண்களை விழித்து மகளை அருகே அழைத்தாள். அம்மாவின் கண்ணசைவில் அம்மாவை அடையாளம் கண்டுகொண்ட சுமதி, “அம்மா...” என்று அழத் தொடங்கினாள். கமலா அவளைத் தேற்றி, அவளது கைகளால் அம்மாவைத் தடவ வைத்தாள்.



(15ஆம் பக்கம் பார்க்க)

# கற்பழிக்கப்பட்டவர் சின்னஞ் சிறு சிறுமி மட்டுமல்ல, எமது தாய்நாட்டின் இறைமையும் கௌரவமும் கூடத்தான்

சிறுமிகள் வல்லுறவுகளுக்கு உட்படுத்தப்படுவது இலங்கையில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் இடம்பெற்றுவரும் ஒரு விடயம். எனினும், தந்தையையும் இழந்து மனநோயாளியான தாயாருடன் காலம் கழித்து வந்த இந்த 14 வயதுச் சிறுமியை வல்லுறவுக்குட்படுத்தி, கர்ப்பமாக்கிவிட்டுத் தலைமறைவான கயவனின் கொடுமையை எவராலும் மன்னிக்க முடியாது.

உலக சிறுவர் தினமும், முதியோர் தினமும் ஆரவாரமாகக் கொண்டாடப்பட்டுள்ள இவ்வேளையில், அகிம்சையையும் கருணையையும் போதிக்கும் எமது பௌத்த நாட்டில் 14 வயதுச் சிறுமி ஒருத்தி கயவனொருவனால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு, குழந்தை ஒன்றுக்கும் தாயான விபரீதம் அரங்கேறியுள்ளது. தந்தையை இழந்து மனநோயாளியான தாயாருடனும் இரு தங்கைகளுடனும் வாழ்ந்துகொண்டே எட்டாம் ஆண்டு வரை கல்வி பயின்று முடித்த இந்தச் சிறுமியின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது. அவளுக்கு நடந்த கொடூரம் இதயமுள்ள எவராலும் ஜீரணிக்க முடியாத ஒன்று.

தந்தையை இழந்து தாயையும் மனநோயாளியாகக் கொண்டு திக்கற்ற நிலையிலிருந்த இந்தச் சிறுமிக்கு உயிர்ப்பிச்சை அளித்து வந்தது அவரது தமக்கை முறை உறவினரான பெண் ஒருத்தியே. சிறுமியின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு எட்டாம் ஆண்டு வரை கல்வி கற்கவும் அந்தச் சகோதரி உதவி புரிந்தார். ஆடம்பரமாக இல்லாவிட்டாலும் அன்றாடக் கஞ்சிக்கும் கல்விக்கும் ஆண்டவன் வழிவிட்டிருந்த வேளையில் அரக்கனாகப் பிரவேசித்தான் இந்தக் கயவன். மேசன் வேலைக்கென வந்த இவன், திக்குத்தெரியாமல் இருந்த இந்தப் பாலகியை ஏமாற்றி தனது பாலியல் இச்சைக்கு உட்படுத்திக் கர்ப்பமாக்கிவிட்டுத் தலைமறைவானான். மாதங்கள் உருண்டோடிய பின்னரே தமக்கைக்கு விபரீதம் புரியவந்தது. பாலியல் உறவு என்பதன் அட்சரம் கூட அறிந்திராத இச்சிறுமி, கர்ப்பமாக உள்ளதை அறிந்த தமக்கை மனம் நொந்துபோனாள். அவள் நினைத்திருந்தால் இச்சிறுமியியை விரட்டியடித்திருக்கலாம். அவ்வாறு செய்யவில்லை. இன்னும் மனித நேயம் எங்கோ ஒரு மூலையில் உயிர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது என்பதற்கு இந்தச் சகோதரி ஓர் எடுத்துக்காட்டு.

பிரசவம் நெருங்கிய வேளையில் கடுவெல அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இந்தச் சிறுமியைப் பார்த்து முழு வைத்தியக் குழாமும் அரண்டுபோனது.

குழந்தை ஒன்று, குழந்தை ஒன்றைப் பிரசவித்தது. அதனைத் தொடர்ந்து இந்த விபரீதம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து சபையின் தலைவி சட்டத்தரணி அனோமா திசாநாயக்கவின் நேரடித் தலையீட்டில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

> உலக சிறுவர் தினமும் முதியோர் தினமும் ஆரவாரமாகக் கொண்டாடப்பட்டுள்ள இவ்வேளையில் அகிம்சையையும் கருணையையும் போதிக்கும் எமது பௌத்த நாட்டில் 14 வயதுச் சிறுமி ஒருத்தி கயவனொருவனால் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு குழந்தை ஒன்றுக்கும் தாயான விபரீதம் அரங்கேறியுள்ளது. தந்தையை இழந்து மனநோயாளியான தாயாருடனும் தங்கைகளுடனும் வாழ்ந்துகொண்டே எட்டாம் ஆண்டு வரை கல்வி பயின்று முடித்த இந்தச் சிறுமியின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது. அவளுக்கு நடந்த கொடூரம் இதயமுள்ள எவராலும் ஜீரணிக்க முடியாத ஒன்று.

விடயம் விபரீதமாகிவிட்டதை அறிந்த காமுகன், அதிகார சபை அதிகாரிகளிடம் சரணடைந்து, இச்சிறுமியைக் கர்ப்பமாக்கியது தானே என ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளான். அதனையடுத்து கொழும்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவனுக்கு ஓர் இலட்சம் ரூபா சரீரப்பிணை விதித்து அவனை விடுவித்த நீதவான் திருமதி துலானி அமரசிங்க, பிறந்த குழந்தையின் தந்தை அவனே என்பதை உறுதிப்படுத்த மரபணுப் பரிசோதனையை (DNA) மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

தாயும் சேயும் கொழும்பு காசல் மருத்துவமனையில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர். அவர்கள் குணமடைந்து வெளியேறும் நிலைக்கு வந்தபின்பு தனக்கு உடனடியாக அறிவிக்குமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி சட்டத்தரணி அனோமா திசாநாயக்க மருத்துவமனை அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

தாய்க்கும் சேய்க்கும் சர்வோதய அமைப்பின் மூலம் இலவச வீடொன்று வழங்கப்படும். அதன்பின் தாயான சிறுமி கல்வியைத் தொடர விரும்பினால் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கவும் அல்லது பொருத்தமான தொழில் ஒன்றைப் பெற்றுக்கொடுக்கவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் முன்வந்துள்ளனர். இருண்டு போன இந்த அப்பாவிச் சிறுமியின் வாழ்வில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஓர் ஒளிக்கீற்றை ஏற்படுத்த முனைவது பாராட்டத்தக்கது.



இந்த அப்பாவிச் சிறுமியின் குடும்பத்தில் மேலும் இரண்டு தங்கைகள் உள்ளனர். அவர்கள் முறையே 11, 9 வயதுடையவர்கள். இருவரும் பாணந்துறையிலுள்ள சிறுவர் பாதுகாப்பகம் ஒன்றில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இருவரையும் பாணந்துறைப் பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் சேர்ப்பதற்கும் அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

எவ்வாறாயினும், குதிரை களவு போனபின் லாயத்தைப் பூட்டுவது போன்ற விடயமே இச்சிறுமியின் விடயத்திலும் நடந்துள்ளது. தந்தையை இழந்து தாயையும் மனநோயாளியாகக் கொண்டு வேறொருவர் தயவில் அவல வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்த இந்தச் சிறுமி, அப்போதே காப்பற்றப்பட்டிருக்க வேண்டும். தும்பை விட்டு விட்டு வாலைப் பிடித்தது போல இன்று பெரும் ஆர்ப்பாட்டம் செய்வது அர்த்தமற்றதெனவே தோன்றுகிறது.

ஓரிரு மாதங்களுக்கு முன்பு வறுமையின் கோரத்தால் தனது குழந்தையைக் களுத்துறை ஆற்றில் வீசி எறிந்த ஏழைத்தாய் பற்றி வாசகர்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அக்குழந்தையைக் காப்பாற்ற வழி தெரியாமல் களுத்துறை விகாரைக்கருகில் உயிருடன் விட்டுச் செல்வதற்கு அந்த ஏழைத்தாய் முயன்றபோது அவர் பின்னால் ''அம்மா, அம்மா'' எனக் கதறிக்கொண்டு அந்தக் குழந்தை ஓடிவந்துள்ளது. வேறுவழியின்றி தினம் தினம் செத்துப் பிழைப்பதை விட ஒரேயடியாகத் தொலைந்துபோ என மனதைக் கல்லாக்கிக்கொண்டு அந்த ஏழைத்தாய் குழந்தையை ஆற்றில் வீசியுள்ளார். சுமார் இரண்டு வாரம் தலைப்புச் செய்திகளுடன் கொக்கரித்த ஊடகங்கள் அந்தச் சம்பவத்தையே இன்று மறந்து விட்டன. அவர்கள் மெல்லுவதற்கு இப்போது புதிய அவலொன்று கிடைத்துள்ளது. குழந்தையை ஒப்படைக்க பல அநாதை இல்லங்களின் கதவுகளை அந்தத் தாய் தட்டியுள்ளார். அவை இம்மியளவும் திறக்கப்படவில்லை. அதனாலேயே அந்தப் பரிதாப சாவு அல்லது சட்டத்தின் கண்களில் ''கொலை'' நடந்தது.

இந்தச் சிறுமியின் நிலை அதைவிடப் பரிதாபகரம். 14 வயதிலேயே தாயாகி பிள்ளையை வளர்த்து ஆளாக்க முடியுமா?

மணி

குற்றம் புரிந்தவனுக்கு வேண்டுமானால் ஒரு சில வருடங்கள் தண்டனை கிடைக்கலாம். அல்லது சட்டத்தின் ஓட்டைகள் வழியாக அவன் தப்பிக் கொள்ளவும் முயலலாம். ஆனால், எவ்விதச் சட்டத்துக்கும் நியாயத்துக்கும் அப்பால் பிஞ்சுக்குழந்தை ஒன்று இன்னுமொரு பிஞ்சுடன் வாழ்வது யார் செய்த குற்றம்? ★

# அலட்சியம் வேண்டாம் மூளையும் முக்கியம்!

ஆங்கிலத்தில் GOLDEN HOUR என்று கூறப்படும் நேரம் மிகவும் முக்கியமானது. ஒருவர் விபத்தில் அடிபட்டாலோ அல்லது இதய நோயால் மாரடைப்பு ஏற்பட்டாலோ அல்லது பாரிசம் ஏற்பட்டாலோ அந்த முதல் ஒரு மணி நேரக் கவனிப்பு அவருடைய குணமடைதலுக்கு துணை செய்கின்றது. பாரிசம் ஏற்பட்டவர் முதல் ஒரு மணி நேரத்தில் மருத்துவம் பெற்றால் அவருடைய குறை முற்றிலும் குணமாகலாம். ஏன் எல்லோரும் போல் நன்றாக நடந்து பேசி வேலை செய்யமுடியும்.

உதாரணமாக எங்கள் மருத்துவமனைகளில் ஒரு 35 வயது நபர் இடது பக்க பாரிசத்துடன் 15 நிமிடங்களில் சேர்க்கப்பட்டார். அவரை பரிசோதித்து அவருக்கு சிகிச்சை உடனடியாக தொடரப்பட்டது. அவர் 10 நாட்களில் முழுவதுமாக குணமாகி வீட்டுக்கு சென்றார். அன்று அவர் என்ன தொழில் செய்துக்கொண்டிருந்தோரோ, அதையே தொடர்ந்தும் செய்து வருகின்றார்.

பாரிசத்திற்கு இன்னொரு காரணம் உண்டு. அதாவது மூளையில் மண்டை ஓட்டிற்கும் மூளைக்கும் இடையே இரத்தம் சேர்ந்து அது அழுத்தம் கொடுக்கின்றது. அதை Subdural Hematomaஎன்பர்.

எதனால் ஏற்படுகின்றது? (Chronic subdural Hemation) தலைக்காயம் பட்டால் ஏற்படலாம். இது, 6 வாரத்தில் இருந்து. 11/2 வருடம் வரை வரலாம். இது மெதுவாக கசிந்து கட்டியாகும்போது தான் தன்மையை காட்டுகின்றது. அது பெரிதாகும்போது எந்த பகுதியில் உள்ளதோ அதற்கு எதிர்பகுதி கை கால்கள் செயல் இழந்து போகின்றன. கோமா நிலை ஏற்படுகின்றது.

இந்த நோயாளியை உடனடியாக CT scan எடுத்து பார்த்தால் இந்த காரணம் தெரியும். அதை உடனடியாக அறுவை சிகிச்சையின் மூலம் அப்புறப்படுத்தினால் நோயாளி தன் சுய நினைவை அடைந்து கை கால் பாரிசம் குறைந்து நன்றாக குணமடைவர்.

எங்களிடம் ஒரு 70 வயது பெரியவர் கொண்டுவரப்பட்டார். அவர் நினைவு இல்லாமல் கோமா நிலையில் இருந்தார். அவருக்கு வலது கை கால்களில் செயல்படுவதில்லை. அவருடைய இடது மூளைப்படத்தில் இரத்தக்கட்டி இருப்பது தெரிந்தது. அதன் அளவு பெரியதாக இருந்ததால் இடது மூளை வலது மூளையை தள்ளிக் கொண்டு இருந்தது. நோயாளியின் மகன்கள் அவர் குணமடைவாரா என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்களிடம் இந்த அறுவை சிகிச்சையினால் அவர் முற்றிலும் குணமடைவார். மற்றும் அறுவை சிகிச்சை செய்யும் போதே அவர் நினைவு பெறுவார் என்று கூறி அறுவை சிகிச்சை செய்தேன். மூளையின் சவ்வை திறக்கும்போது இரத்தம் வெளிவந்தது. அவ்வாறு வெளி வரும்போதே அவர் நினைவு திரும்பியது, சத்தம் போட ஆரம்பத்தார். அறுவை சிகிச்சை முடிந்து வெளிவரும் போது அவரின் மகன்களுடன் பேசினார். 5 ஆண்டுகளுக்கு பின்னும் நன்றாக நடந்துகொண்டு சராசரி மனிதனாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். பாரிசம் என்பது கை கால் செயல் இழப்பை குறிக்கின்றது. அதற்கான காரணங்கள் ஏராளம். அதை மூளை படம் எடுப்பதால் தெரிந்து கொள்ளலாம். (Chronic subdural Hemation) நாள்பட்ட இரத்த கசிவினால் ஏற்பட்ட பாரிசம் அறுவை சிகிச்சை செய்தவுடன் குணமடையும். குடிப்பழக்கம் இருப்பவருக்கு இந்த இரத்த கசிவு சுலபமாக வருவதுண்டு. எனவே குடிப் பழக்கத்தை நிறுத்த பழகிக்கொள்ள வேண்டும். பாரிசம் ஏற்பட்டால், உடனடியாக சிகிச்சைக்கு நரம்பயல் நிபுணரிடம் கொண்டு செல்லுங்கள்.

உணர்வுபூர்வமாக எந்த விஷயத்தையும் அணுகுவதை விட, அறிவு பூர்வமாக அணுகுவது தெளிவைத் தரும் தானே? எதைக் குறிப்படுகிறேன் என்கிறீர்கள்...? இதய நோய்க்கு தரும் முக்கியத்துவத்தை மூளை நோய்க்கும் தர வேண்டும் என்பதைத் தான் அதோடு குடிப்பழக்கம் குடியை மட்டும் கொடுப்பதில்லை. மூளையையும் பதம் பார்க்கிறது. குவாட்டர் லார்ஜ் ஸ்மால் இந்த வார்த்தைகளோடு இனி பாரிசம் என்ற வார்த்தையையும் சேர்த்து சியர்ஸ் சொல்லுங்கள். குடிப்பழக்கம் தானாக ஓடிவிடும். *

# அயோத்தித் தீர்ப்பு சிறுபான்மையினருக்கு அநீதி?



கிட்டத்தட்ட 60 ஆண்டுகாலமாக இருந்து வந்த அயோத்தி பாபர் மசூதி - ராமர் கோயில் பிரச்சினைக்கு சமீபத்தில் வெளிவந்த தீர்ப்பு எவ்வகையிலும் உதவாது எனச் சமூகத்தின் பலமட்டங்களையும் சேர்ந்த அறிஞர்கள் கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிட்டு வருகின்றனர்.

இந்திய தேசத்தில் நீதித்துறைத் தீர்ப்பு ஒன்று இவ்வளவு தூரம் பரவலாகப் பொதுமக்களால் விமர்சிக்கப்படுவது இதுவே வரலாற்றில் முதல் தடவையாகும். வேறு தீர்ப்புகளாயின் உடனடியாகவே நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடுக்கப்பட்டு விமர்சித்தவர்கள் தண்டனைக்குட்படுத்தப்பட்டிருப்பர். ஆனால், இந்தத் தீர்ப்பை பலமட்டங்களில் பலர் விமர்சனம் செய்வதால் யாருக்குத் தண்டனை என்பதில் நீதிபதிகளுக்கே தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, விமர்சித்தவர்கள் முன்வைக்கும் காரணங்களும் மிகவும் காத்திரமானவையாக இருப்பது இந்த நீதிபதிகளுக்குப் பெரிய தலைவலியாக இருக்கிறது.

உதாரணமாக, புகழ்பெற்ற எழுத்தாளர் அருந்ததி ராய் இந்தத்தீர்ப்பு பற்றி சென்றவாரம் நடந்த புத்திஜீவிகள் கூட்டத்தில் முன்வைத்த வாதம் இங்கு கவனிக்கற்பாலது. "அயோத்தி நிலம் இருதரப்புக்களுக்கோ, மூன்று தரப்புக்களுக்கோ சொந்தமானது என்றே



வைத்துக்கொள்வோம். ஆனால், இந்தத் தரப்புக்களில் ஒன்றான இந்துக்கள், மசூதியை நீதிமன்ற எச்சரிக்கையையும் மீறி இடித்துத் தள்ளியவர்கள் என்பது கவனிக்கப்பட வேண்டும். அதாவது, இவர்கள் நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை வைத்தவர்களுமல்லர். இவ்வாறு சட்டத்தை தம் கையில் எடுத்துக்கொண்டவர்கள் இந்தத்தீர்ப்பில் ஒருதரப்பு. அதேவேளை நீதிமன்றத்தீர்ப்புக்காக காத்திருந்த முஸ்லிம்கள் மற்றைய தரப்பு. இந்த இருதரப்புக்களும் நிலத்துக்கு உரிமையானவர்களே! ஆனால், இந்த இரு தரப்புக்களும் நீதிமன்றத்தை நம்புவதில் சமமானவர்களா? நீதிமன்றத்தின் தீர்ப்பு வரமுன்னமே தமக்குரிய உரிமையில் பெரும் பகுதியை அனுபவித்துவிட்ட தரப்பு ஒன்று இருக்கிறதே? அந்தத்தரப்புக்கு உண்மையில் கிடைக்கவேண்டியதற்கு குறைவாகவே நீதிமன்றத்தினால் அனுகூலம் கிடைக்கவேண்டும்." இதுவே அருந்ததி ராயின் வாதத்தின் சாரமாகும். இது நூற்றுக்கு நூறு சரியான வாதம் என்பது சிறு குழந்தைக்கும் புரியும். உதாரணமாக, ஒரு குற்றவாளி ஏற்கனவே சிறைத்தண்டனை அனுபவித்து வரும் நிலையில் அவரது இறுதிக் குற்றத்தீர்ப்பு 10 வருட சிறைத்தண்டனை என வைத்துக்கொள்வோம். இதில் ஏற்கனவே ஒரு வருடம் சிறையில் கழித்திருந்தால் அத் தண்டனை 10 வருடத்திலிருந்து கழிக்கப்படும். இவ்வாறாயின், தீர்ப்பு வர முன்பே எழுந்தமானமாக அதுவும் நீதிமன்றத்தை அவமதித்து தமது உரிமைகளைச் சட்ட விரோதமாக நிலைநாட்ட முயன்றவரை மற்றைய அப்பாவித்தரப்புடன் சமமாக வைத்துப் பார்த்துத் தீர்ப்பு வழங்க முடியுமா என்ற கேள்வி எழுகின்றது.

ஆகவே, அலஹபாத் உயர்நீதிமன்றத்தின் லக்னோ அமர்வு வழங்கிய இந்தத் தீர்ப்பு நியாயத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றே எனப் பலதரப்பினரும் குரலெழுப்பி வருவது நியாயம்தான் என்பதன் கருத்து பரவலாக எழுந்துள்ளது. மேன்முறையீடு செய்ய உச்சநீதிமன்றத்துக்கு முஸ்லிம் தரப்பு செல்லமுடியும்: அவ்வாறு மேன்முறையீட்டை விசாரிக்கும் உச்சநீதிமன்றம் நிச்சயமாக இப்போதுள்ள தீர்ப்பின் மீதான விமர்சனங்களை கருத்தில் கொள்ளவே வேண்டும். ஆரோக்கியமான இந்த விமர்சனங்கள் உச்சநீதிமன்றத்தின் நியாயக்கண்ணை நிச்சயம் திறக்கும் என்பது உறுதி. அதுவும் எச். என். பகவதி போன்ற நீதிமான்களைப் பிரசவித்த இந்தியா, நீதியை நிலைநாட்டுவது புதிதல்ல.

- எஸ்.சுரேந்திரஜித் -

எனவே, தற்போதைய தீர்ப்பின் நேரெதிர் தீர்ப்பு உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட நிறைய வாய்ப்புள்ளது.

முஸ்லிம் அமைப்புகள் உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய தயாராகி வருவதும் குறிப்பிடத்தக்கது. அதாவது, இங்கு தீர்ப்பு என்பது 1949 ஆம் ஆண்டில் எழுந்த சர்ச்சைக்குத் தீர்ப்பாக மட்டும் கருதப்பட முடியாது. இடையில் 1992 டிசம்பர் 6ஆம் திகதி மசூதி சட்டத்தை மீறி இடிக்கப்பட்ட துயர சம்பவத்தையும் கணக்கிலெடுத்தே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். அந்தத் துயரத்தின் சூத்திரதாரிகளின் துணிகரத்தையும் கூட்டிக் கழித்துக் கணக்குப்பார்த்தே தீர்ப்பு எழுதப்பட்டிருக்க வேண்டும். காரணம், அப்போதைய பி.ஜே.பி அரசின் உத்தரப் பிரதேச முதலமைச்சர் கல்யாண்சிங்கின் செயற்பாடு இங்கு கவனிக்கத்தக்கது.

மசூதியை இடிக்க முலாயம் சிங் முதலமைச்சராக இருந்தபோது 1990 ஒக்டோபர் 30இல் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், பிரதமர் வி.பி.சிங்கும் உத்தரப் பிரதேச முதல்வர் முலாயம் சிங் யாதவும் சேர்ந்து உயிரைக் கொடுத்து ஒக்டோபர் 30ஆம் திகதி மசூதியைக் காத்தனர். இந்த ஒக்டோபர் 30ஆம் திகதியை மனதில் வைத்தே இன்னும் கூட முலாயம் சிங் யாதவ் முஸ்லிங்களால் 'மௌலானா முலாயம்' என்ற செல்லப் பெயருடன் அழைக்கப்படுகின்றார். வி.பி.சிங் நிலையோ இதைவிட தியாகத்தின் நிலையாகும். மசூதியை இடிக்கவிடாததால் ஆத்திரமுற்ற பி.ஜே.பிக்கட்சி இரண்டு மாதத்தினுள் டிசம்பரில் ஒரு பெரும் ரதயாத்திரையை அயோத்தி நோக்கித் தொடங்கியது. வி.பி.சிங்கோ அதையும் தடுத்தார். உடனடியாகவே வி.பி.சிங் அரசுக்கு வழங்கிய ஆதரவை (டிசம்பர் 1990) பி.ஜே.பி விலக்கியது. அன்றைய வி.பி.சிங் அரசு 1989இல் காங்கிரஸ் கட்சியை ஆட்சியிலிருந்து விரட்ட வேண்டும் என்பதற்காகவே பி.ஜே.பியின் ஆதரவுடன் அமைக்கப்பட்டிருந்தது. பி.ஜே.பியின் ஆதரவின்றேல் தனது அரசு கவிழும் என்பதை வி.பி.சிங் நன்கறிவார். கவலையின்றி மத ஒற்றுமைக்காக முடிதுறந்த மன்னனாக அவர் போற்றப்பட வேண்டியவராவார். நினைத்தபடியே அரசும் கவிழ்ந்தது. மகாத்மாவுக்கு அடுத்து இந்திய தேசத்தின் வரலாற்றில் மத ஒற்றுமைக்காக தியாகம் செய்த - பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்றுக் காவியம் விஷ்வநாத் பிரதாப் சிங் என்ற வி.பி.சிங் ஆவார்.

இதற்கு நேர்மாறான கயமையின் உச்சக்கட்டம் கல்யாண் சிங் என்ற அரசியல்வாதி ஆவார். பி.ஜே.பியின் இந்துப் பிராமண சமூகத்தவர் அல்லர் இவர். பிராமணர்களால் ஒடுக்கப்பட்ட தலித் போன்ற மற்றொரு சமூகமான லோத் சாதியைச் சேர்ந்த இவர் பிராமணரை வென்று, இந்துமத வெறி தன்னிடம் இருப்பது போல நாடகமாடினார். 1992 டிசம்பர் 6இல் இவர் உத்தரப்பிரதேச முதல்வராக இருந்தபோதுதான் மசூதி இடிக்கப்பட்டது. அதற்குச் சில வாரங்கள் முன்பு மசூதி உடையாமல் காப்பதாக ஒரு முக்கிய வழக்கில் நீதிமன்றில் ஆஜரான கல்யாண் சிங் உத்தரவாதம் அளித்திருந்தார். ஒரிரு வாரங்களில் அதை மீறி மசூதியை உடைத்துத் தள்ளினார்.

அதன்தொடர்ச்சியாக நரசிம்மராவ் அரசு அவரது மாநில அரசைக் கலைத்துவிட்டமை குறிப்பிடத்தக்கது. மசூதியை இடித்ததால் உத்தரப்பிரதேச மாநிலத்தில் சாகும்வரை தானே முதலமைச்சர் என கல்யாண் சிங் பிதற்றிக்கொண்டு திரிந்தபோதும், அடுத்துவந்த தேர்தல்களில் அவரால் முதலமைச்சராக வரவே முடியவில்லை. அதுமட்டுமன்றி பி.ஜே.பியை விட்டே அவர் வெளியேறவும் நேர்ந்தது. பின்பு அவர் முலாயம் சிங்குடன் கூட்டுச்சேர்ந்ததனால் முலாயம் சிங் முஸ்லிம் வாக்குகளை இழந்தார். இதனால் முலாயம் சிங்கும்



கல்யாண் சிங்கை கைகழுவிவிட்டது குறிப்பிடத்தக்கது. அரசியல் அநாதையான கல்யாண்சிங் காங்கிரஸுடன் சேரமுயன்றார். இவரைச் சேர்த்துக் கொண்டால் முஸ்லிம் வாக்குகளை இழக்க நேரும் என்பதால் காங்கிரஸிலும் சேரமுடியவில்லை. பிறகு தனிக்கட்சி தொடங்கினார்; ஒரு தொகுதியில் கூட கட்சியால் வெல்லமுடியவில்லை. இந்தக் கல்யாண் சிங் சென்ற வாரம் அயோத்தித் தீர்ப்பு வெளியானபோது அயோத்திக்குள் தனது செல்வாக்கைக் காட்ட பெரும் பேரணியைத் திரட்டுவதாக கூறி அங்கு சென்றபோதும் அவ்வளவாக மக்கள் கூட்டம் கூடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அயோத்தி லோக்சபாத் தொகுதியில் 1984 இற்குப்பின் பெரும்பாலும் பி.ஜே.பியே தொடர்ச்சியாக வென்று வந்தது. ஆனால், 25 வருடங்களுக்குப்பின்பு 2009 இல் காங்கிரஸ் கட்சி அயோத்தி தொகுதியை வென்றது. எனவே, இந்துக்கள் இதை மறக்கத் தொடங்கிவிட்டனர் என்பது தெளிவு. அத்துடன் பி.ஜே.பியை அரசியல் துரும்பாகவே பயன்படுத்துகிறது என்பது இந்துக்கள் தெளிவாக அறிந்த உண்மையாகும். 6 வருடம் பதவியில் இருந்த வாஜ்பாயும், பி.ஜே.பியும் அக்காலத்தில் ராமர் கோயிலை ஏன் கட்டவில்லை என்ற கேள்விக்கு பி.ஜே.பியால் பதில்தரமுடியாது. சமீப தேர்தல்களில் உத்தரப்பிரதேச மற்றும் பீஹாரில் பிராமணர்கள் மீண்டும் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்கத் தொடங்கியுள்ளனர். எனவே, இந்தத் தீர்ப்பின் மேன்முறையீட்டால் தீர்ப்பு அமுலாவது தொடர்ந்து தள்ளிப்போகும் என்பதும், அதை இந்துக்கள் சட்டை செய்யப்போவதில்லை என்பதுமே யதார்த்தமாகும். ❋

# சீனாவின் கவலை




உலக நாடுகளில் இன்றளவும் உச்சக் கட்ட சனத்தொகையைத் தக்க வைத்துக் கொண்டிருப்பது சீனா மட்டுமே. 1978 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு 1979 இல் அமுலுக்கு வந்த 'ஒரு குடும்பத்துக்கு ஒரே பிள்ளை' என்ற திட்டம் கடந்த 30 வருடங்களாக பெருமளவு பின்பற்றப்பட்டு வந்தது.

எவ்வாறாயினும், மூன்று தசாப்தங்களாகப் பின்பற்றப்பட்டு வந்த இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டு நிபந்தனையை மீளாய்வு செய்ய வேண்டிய நிலைமைக்கு சீனா தள்ளப்பட்டுள்ளதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

விரைவில் முதிர்ச்சியடைந்து விடுவதாக கணிக்கப்படும் சீனர்கள் தள்ளாத வயதையடையும்போது அவர்களின் ஒரேயொரு பிள்ளையால் பராமரிக்க முடியாத இக்கட்டுக்குத் தள்ளப்படுகிறார்கள்.

அத்துடன், சீனாவில் ஆண்களை விட பெண்களின் தொகை குறைவாக இருப்பதால் திருமணங்கள் பின் தள்ளப்படுவதால் குழந்தைகளின் பிறப்பு வீதம் கணிசமாகக் குறைந்து வருகிறது. சீனாவின் சனத்தொகை மற்றும் குடும்பக்கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் 2005 ஆம் ஆண்டுக்கான புள்ளிவிவரங்களின்படி பிறக்கும் ஒவ்வொரு நூறு பெண் குழந்தைக்கும் 118.6 என்ற வீதத்தின் அடிப்படையில் ஆண் குழந்தைகள் பிறக்கின்றன என்று கணிப்பிடப்பட்டுள்ளது. இதே ரீதியில் இத்தகையை பிறப்பு வீதங்கள் தொடருமாயின் சீனாவின் எதிர்காலம் கேள்விக்குறியாகலாமென அஞ்சப்படுகின்றது.

> இயற்கை தந்துள்ள மூலவளங்களின் பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்திகள், சுத்தம், சுகாதாரம், தொழில்வாய்ப்பு, கல்வி வாய்ப்பு போன்ற பிரதான காரணிகளைக் கருத்தில் கொண்டே 30 ஆண்டுகளுக்கு முன்பு இந்த குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. எனினும், இன்றுவரை உலக நாடுகளின் சனத்தொகையில் முதலாமிடத்தில் சீனாவே இருக்கிறது.



அரசால் மேற்கொள்ளப் பட்ட பூர்வாங்க ஆராய்ச்சிகளின்படி 2025 ஆம் ஆண்டில் சீனாவின் சனத்தொகை 140 கோடி முதல் 160 கோடி வரை அதிகரிக்கலாமென யூகிக்கப்படுகின்றது. அதற்கமைய 21 ஆம் நூற்றாண்டின் முதல் அரைவாசிக் காலத்தில் சனத்தொகையை நிலையானதொரு மட்டத்துக்குக் கொண்டுவருவதற்கு 2020 ஆம் ஆண்டு வரையிலான திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படுமென சீனாவின் குடும்பக் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பான அமைச்சர் தெரிவித்துள்ளார்.

30 ஆண்டுகளுக்கு முன்பாக அறிமுகப்படுத்தப்பட்ட 'ஒரு குடும்பத்துக்கு ஒரே பிள்ளை' என்ற சித்தாந்தத்தின் பிரகாரம் இந்தக் காலப் பகுதியில் 40 கோடி குழந்தைகளின் பிறப்பு தடுக்கப்பட்டுள்ளது எனக் கணிக்கப்பட்டுள்ளது.

1970 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்படி விவாகங்களுக்கான அனுமதியை ஒத்தி வைத்தல், குழந்தைகளின் பிறப்புகளுக்கு இடையிலான கால இடைவெளியை அதிகரித்தல், குறைந்த பட்ச குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு விசேட சலுகைகளை வழங்குதல் போன்றவை அமுல் செய்யப்பட்டன. இதன் மூலம் 30 ஆண்டு காலப்பகுதியில் 40 கோடி குழந்தைகளின் பிறப்பு தடுக்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டளவில் பெண்ணொருவர் பெற்றுக்கொள்ளக் கூடிய குழந்தைகளின் உச்சபட்ச எண்ணிக்கை ஐந்தாக இருந்த போதிலும் அது தற்போது இரண்டாகக் குறைந்துள்ளது.

ஆண், பெண் குழந்தைகளின் பிறப்பு வீதம் கணிசமாகக் குறைந்துள்ளதால் சீனாவின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது. பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைந்துள்ளதால், தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் ஆணாகவே இருக்க வேண்டுமென்ற அக்கறையில் அதற்கான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு முன்னெச்சரிக்கையாகச் செயற்படும் சீனர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மருத்துவப் பரிசோதனைகளின் மூலம் பிறக்கப்போகும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்பதை அறிந்து கொள்வதற்கு (Scan Test) அரசு தடை விதித்துள்ளது. பிறக்கப் போவது பெண் குழந்தை எனத் தெரியவரும்போது அக் குழந்தைகளை கர்ப்பச் சிதைவு செய்து கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. 'ஒரு குடும்பத்துக்கு ஒரேயொரு பிள்ளை' என்ற சித்தாந்தத்துக்கு 76 சதவீத சீனர்கள் அதரவு தெரிவித்துள்ளனர் என அறிக்கைகள் சுட்டிக் காட்டிய போதும் இதன் பின்னணியில் எழுதப்படாத பல்வேறு சோக சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளன.

இரண்டாவது குழந்தை பிறந்த பின்னர் அக்குழந்தையை வேறொரு குடும்பத்துக்கு தாரை வார்த்துக் கொடுக்கும் கண்ணீர்க் காவியங்கள் கடந்த 30 ஆண்டுகளில் நிறையவே நடைபெற்று வந்துள்ளன. அத்தகைய அவல நிலைகள் இன்றளவும் தொடர்ந்து வருகின்றன. இரண்டாவது குழந்தையைப் பிரசவித்த தாய்க்கு அரசாங்கத்தால் விதிக்கப்படும் அபராதம் காரணமாக மனதைக் கல்லாக்கிக் கொண்டு இரண்டாவது குழந்தையை வேறொருவருக்கு விற்கவோ அல்லது இலவசமாகக் கொடுக்கவோ வேண்டிய அவல நிலை நீடிக்கின்றது. இத்தகைய அபராதத் தொகையை அரசுக்கு செலுத்தி இரண்டாவது குழந்தையையும் தங்களுடன் வைத்துக்கொள்ள ஏராளமான பெற்றோர் விரும்பிய போதும், ஏழ்மை காரணமாக அபராதத்திலிருந்து தப்பிக்கொள்ள தங்கள் உதிரத்தில் பிறந்த குழந்தைகளை வெளியாருக்குத் தாரை வார்க்கும் அவலநிலை இன்றும் சீனாவில் தொடர்கிறது.

[illegible]

எவ்வாறாயினும் சீன அரசு எதிர்கால சனத்தொகை பற்றிய விவகாரத்தில் தர்மசங்கடமான நிலையிலேயே உள்ளது. ஒருபுறம் சனத் தொகை குறைவதால் அடுத்த நூற்றாண்டில் ஏற்படவுள்ள பிரச்சினைகள், அதற்குள் சனத்தொகையைக் கூட்டுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகிய இரண்டில் எது சாத்தியமானது; ஆக்கபூர்வமானது என்ற சிந்தனை சீன அரசை திரிசங்கு நிலையில் வைத்துள்ளது என்பதே சமகால உண்மை.

# மீன் பிடிப்பதில் உலக சாதனை!

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தைச் சேர்ந்த 47 வயதான ஸ்ரீவ் வொஸ்னியாக் எனபவர் 10 வருடங்களில் 63 நாடுகளுக்குச் சென்று 1000 வகையான மீன் இனங்களைப் பிடித்து உலக சாதனை படைத்துள்ளார். இதற்காக இவர் 20 ஆயிரம் மணித்தியாலங்கள் கடலில் பயணித்துள்ளார். இதன்போது சிறிய மீனிலிருந்து 900 கிலோ சுறா வரையான மீன் வகைகளையும் பிடித்திருக்கிறார். அது மட்டுமல்ல இதற்காக இவர் 50 ஆயிரம் பிரிட்டன் பவுண்களைச் செலவிட்டுள்ளார்.

அந்திலாந்திக் கடலில் அபூர்வமாக காணப்படும் 'சமன்' மீனைப் பிடிப்பதற்கு ஸ்கொட்லாந்தில் 7 லட்சம் ரூபா செலவழித்துள்ளார்.

சர்வதேச ரீதியாக மீன் பிடிப்பதில் 12 சாதனைகளைச் செய்துள்ள இவர் இன்னும் 5 சாதனைகளைச் செய்வதற்கு முயற்சிக் கின்றார்.




நோர்வேயில் இவர் இறுதியாக உறுத்தல் மீனைப் பிடித்ததுடன் தனது சாதனைகளை புத்தகமாக எழுதி வெளியிடவுள்ளார்.

5 வயதில் முதலில் மீன் பிடிக்க தொடங்கிய இவர் தனது 30 ஆவது வயது வரை 150 வகையான மீன்களைப் பிடித்துள்ளார். தனக்கும் தனது நண்பர் ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட போட்டி தான் தன்னை இச் சாதனை செய்வதற்குத் தூண்டியது என்று பெருமையுடன் கூறுகிறார்.

கணினி நிறுவனம் ஒன்றில் மேலாளரான இவர், தொழில் ரீதியாகப் பல நாடுகளுக்குச் செல்வது வழமை. அந்த நாடுகளுக்குச் செல்லும் போது ஓய்வு நேரங்களில் மீன் பிடிக்கச் சென்று விடுவாராம்.

2006 ஆம் ஆண்டு ஒரு வருட ஓய்வு எடுத்து அந்த ஆண்டில் மட்டும் 180 வகையான மீன்களைப் பிடித்துள்ளார்.




# 'வடக்கின் வசந்தம்' சிங்களக் குடியேற்றமா?

ப. திருமாவேலன்

மட்டக்களப்பு பன்குடா பகுதியைச் சேர்ந்த சீனித்தம்பி பத்மநாபனை, பெரும்பாலானவர்கள் அறிவார்கள். அந்தப் பகுதியில் மிக வசதியான குடும்பத்துக்காரர். தன்னுடைய செல்வத்தை எல்லாம் போராளிகளுக்கு உணவு தயாரித்துக் கொடுப்பதற்காகவே செலவு செய்தார். காட்டுப் பகுதியில் பதுங்கி இருக்கும் புலிகளுக்கு சாப்பாடு செய்து அனுப்பி வைப்பதுதான் அவரது வேலையாக இருந்தது. இந்திய இராணுவம் அங்கு இருந்தபோதும், அதே காரியத்தை சீனித்தம்பி செய்தார். அதைக் கண்டு பிடித்த இராணுவம், காலில் சுட்டு அவரைக் கைது செய்தது. சிறைவைக்கப் பட்ட நிலையில், அவர் இறந்துபோனார் எனப் பின்னர் அறியக் கிடைத்தது. உடல்கூட, அவரது குடும்பத் தினருக்குத் வழங்கப்படவில்லை!

அப்பாவுக்கு ஏற்பட்ட நிலையை, அவரது மகள் ஷகிலா உணர்ந்தார். பின்னர், அவரும் புலிகள் அமைப்பில் இணைந்தார். புலிகளின் மிகப் பெரிய வெற்றியாகச் சொல்லப்படும் ஆனையிறவு சமரில் சித்திரா என்று பெயரிடப்பட்டு, இவர் களத்தில் இறங்கினார். அதில் சித்திராவுக்கு விலா எலும்பில் பலத்த காயம் ஏற்பட்டது. அதன் பிறகு, அவர் புலிகள் அமைப்பில் இருந்து விலகினார். அதே அமைப்பைச் சேந்த உருத்தி என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். இருவருக்கும் இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். 2007 ஜூலையில் உருத்தி, இலங்கை சீருடையணிந்தவர்களால் கொலை செய்யப்பட்டார். அப்பா, கணவர் இருவரையும் நாட்டுக்காகக் கொடுத்த



அந்தப் பெண், மாவீரர் குடும்பங்களுக்கு மாதம் தோறும் தரப்படும் தொகையை மட்டும் வாங்கி, தானும் உண்டு தனது குழந்தைகளையும் காப்பாற்றி வந்தார். அவரது உடலில் ஏற்பட்ட பாதிப்பு காலப் போக்கில் அதிகமாகி, அறுவை சிகிச்சை செய்தால் மட்டுமே பிழைக்க முடியும் என்று சொன்னார்கள். அதற்கான செலவு 38 ஆயிரம் என்றும் சொல்லப்பட்டது.

அதற்காகப் பல இடங்களில் அலைந்தார். வெளிநாட்டில் இருக்கும் தனது உறவினர் மூலமாக அதை வாங்க முயற்சித்தார். அங்கே இருந்து பணத்தை அனுப்பிவைக்கும் சிரமத்தால், தொகை வந்து சேரவில்லை. சிகிச்சைக்கு வழி இல்லாமல், கடந்த 17ஆம் திகதி சித்திரா உயிரிழந்தார். அவரது இரண்டு பிள்ளைகளும் அநாதையாக நிற்கின்றன. இது தனிப்பட்ட ஒரு சித்திராவின் கதை அல்ல; ஓர் இனத்தின் கதை.

ஒவ்வொரு குடும்பத்திலும் உழைக்க முடிந்தவர் அனைவரையும் போர் தின்று துப்ப... மற்றவர்கள் பிழைக்க வழி தெரியாமல் கிடப்பதுதான் இன்றைய ஈழத் தமிழனின் நிலை!

சொந்த தேசத்து மக்களை இப்படிச் சூன்யத்தில் தள்ளிவிட்ட இலங்கை அரசும், மகிழ்ச்சியாக இருக்கிறது. 'ஓர் இனத்தை அழிக்க வேண்டுமானால், அம்மக்களைக் கொல், அவர்கள் வாழும் மண்ணைக் கைப்பற்று' என்பதுதான் அரசியல் பாசிசத்தின் அரிச்சுவடி. இன்று இலங்கையின் தமிழர் பகுதிகளில் அதுதான் நடந்துகொண்டிருக்கிறது. பயங்கவாதத்துக்கு எதிரான போர் என்று சொல்லி, விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது போர் தொடுக்கப்பட்டது. அந்த அமைப்பை முழுமையாக ஒழித்துவிட்டோம் என்று கடந்த ஆண்டு மே மாதம் அறிவித்தார்கள். அதற்குப் பின்னராவது வடக்கு, கிழக்கு, யாழ்ப்பாணம் பகுதி வாழ் தமிழ் மக்களை நிம்மதியாக வைத்திருக்கலாம். ஆனால், அதைச் செய்யவில்லை. அதாவது, அங்கே நடந்துகொண்டு இருப்பது பயங்கரவாதத்துக்கு எதிரான போர் அல்ல; ஓர் இனத்துக்கு எதிரான போர் என்பதால் தான், ஈழத் தமிழர்களை இன்னும் சிறுகச் சிறுகச் சித்திரவதை செய்து கொன்று தீர்த்து வருகிறார்கள் என்றே அங்கே இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. 'தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில், சிங்களவர்களைக் குடியமர்த்த வேண்டும். அடுத்த தேர்தலில் இந்தப் பகுதிகளில் சிங்கள எம்.பிக்கள் சிலரை தேர்ந்தெடுக்கப்பட்டு நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும்' என்ற முடிவோடு, இந்தக் காரியங்கள் செய்யப்படுகின்றன.

'வடக்கு மாகாணத்தில் பெரும் எண்ணிக்கையாக சிங்களவர்கள்தான் முன்னர் வாழ்ந்தார்கள். பின்னர், அவர்கள் தமிழர்களால் விரட்டி அடிக்கப்பட்டார்கள். சிங்களவர் விரும்பினால், மீண்டும் வடக்குப் பகுதிக்குப் போய் வாழலாம்' என்று பகிரங்கமாக அறிவித்து உள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. 'வடக்குக் கிழக்கின் பாதுகாப்பு கருதி, அங்கு நிரந்தர இராணுவ முகாம்களும் படைத் தளங்களும் அமைக்கப்படும். அதில் பணிபுரியும் இராணுவத்தினர் தங்கி வாழ, அந்தப் பிரதேசத்தில் இராணுவக் குடியிருப்புகள் அமைக்கப்படும்' என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூர்ய அறிவித்தார். இப்போது வடக்கில் மட்டும் ஒரு லட்சம் இராணுவத்தினர் உள்ளனர். அதன் அடிப்படையில், ஒரு லட்சம் குடியிருப்புகள் கட்டப்பட உள்ளன. இவர்கள் அனைவருக்கும் போர் வெற்றிக்குத் துணை புரிந்ததற்காக நிலங்கள் கொடுக்கப்பட உள்ளன. பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரால், சிங்கள நிறுவனங்களுக்கு பல ஏக்கர் நிலங்கள் தாரை வார்க்கப்படுகின்றன. கடலோரப் பகுதி அனைத்தும் சுற்றுலாத்தலங்களாக மாற்றப்பட்டு, பீச் ரிசார்ட்ஸ் அமைக்க சிங்கள நிறுவனங்கள் உள்ளே நுழைந்துவிட்டன. மாவட்ட நிர்வாகத்தைக் கவனிக்க, அனைத்து இடங்களிலும் சிங்களவர்கள் நியமிக்கப்பட்டு உள்ளார்கள். ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் இதை மேற்பார்வை செய்கிறார்கள். மாவட்டக் காணி அதிகாரிகளாக நியமிக்கப்படும் சிங்கள அலுவலர்கள், ஏதாவது ஒரு திட்டத்தின் பெயரை எழுதி, நிலங்களைத் தாரை வார்க்கும் வேலையை நித்தமும் பார்த்து வருகிறார்கள். இன்னும் ஆறு மாதங்களில் தமிழ் மக்களின் நிலங்கள் கபளீகரம் செய்யப்பட்டு இருக்கும்.

60 ஆண்டுகளுக்கு முன்னர் திருகோணமலையை தமிழர் தாயகத்தின் தலைநகர் என்றே பிரகடனம் செய்தார்கள். இதைத் தொடர்ந்தே, அந்தப் பகுதியில் சிங்களவர்களை அதிகமாகக் குடியேற்ற பல்வேறு திட்டங்களை முன் வைத்தார்கள். 1.3 சதவிதமாக இருந்த சிங்கள மக்கள்தொகை, கடந்த ஆண்டு 30 சதவிதம் உயர்ந்தது. 81.76 சதவிதமாக இருந்த தமிழர் தொகை, 23.5 சதவிகிதமாக சுருங்கிப்போனது. இன்று திருகோணமலையை, தமிழர் பிரதேசமாகவே சொல்ல முடியாது. இதே நிலைமையை மட்டக்களப்பும் அம்பாறையும் நெருங்கிக்கொண்டு இருக்கின்றன. முல்லைத்தீவும் கிளிநொச்சியும் அதே கதியை அடையப்போகின்றன. தமிழர்களின் வீடுகள் இருந்த இடங்கள் இடிக்கப்பட்டு நிலங்களாகவும், நிலமாக இருந்த பகுதிகள் வீடு கட்டும் இடங்களாகவும் வழங்கப்படுகின்றன. தன்னுடைய இடம், வீட்டைச் சட்டரீதியாக யாரும் இனி திரும்பப் பெறுவதற்கான வாய்ப்பே இல்லை.

'இலங்கைத் தீவின் எந்த இடத்திலும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழக் கூடாது என்பதற்கு இலங்கை அரசு மறைமுகத் திட்டத்தை அமுல்படுத்தி வருகிறது. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்கள் இருந்தால், தமிழ் மக்கள் தமது பாரம்பரியத் தாயகம், அதற்கான சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி கோருவார்கள். அதனை இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கையே இது!' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் சொல்கிறார்.

இதைத் தமிழர்கள் மட்டும் சொல்லவில்லை. அந்த நாட்டின் மிக முக்கிய ஆங்கிலப் பத்திரிகை ஒன்றும் கூறுகிறது. 'மஹிந்தவின் சிங்களக் குடியேற்றம்' என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டது. 'தமிழர்கள் அதிகம் வாழும் முறிகண்டியில் 12 ஆயிரம் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு இருக்கிறார்கள். இது மீண்டும் ஓர் இனக் கலவரத்தை ஏற்படுத்துவதற்கான திட்டம்' என்று சொல்கிறது அந்தப் பத்திரிகை. இந்த முறிகண்டி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் வேண்டும் என்றே புத்த விகாரை நிறுவப்பட்டது. நில உரிமையாளர் புத்த விகாரை அமைக்கக் கூடாது என்று நீதிமன்றம் சென்று தடை வாங்கி இருக்கிறார். ஆனால், வடக்குக் கிழக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளிலும் புத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 'யாழ்ப்பாணத்தில் அரச மரங்கள் இருக்கும் இடங்களில் எல்லாம் புத்தர் சிலைகளை வைக்கிறார் கள்' என்று சொல்கிறார் ஒரு பத்திரிகையாளர்.

மன அழுத்தத்தைப் போக்கவும் நம்பிக்கையை ஏற்படுத்தவும், புத்த பிக்குகள், தமிழர் பகுதியில் மனநல வகுப்புகளை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். 'இது தமிழர்களை மதம் மாற்றும் முயற்சி' என்று இந்து அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. பௌத்தர்கள் கொண்டாடும் பொசன் பண்டிகை, வெசாக் பண்டிகைக் கொண்டாட்டங்கள்தான் தமிழர் பகுதிகளில் அதிகமாக நடக்கின்றன. கிளிநொச்சியில் நடந்த பொசன் பண்டிகையை இராணுவத் தளபதி தலைமை தாங்கி நடத்தினார்!

முல்லைத் தீவு, அளம்பில், செம்மலை, வட்டுக்கால், முள்ளிவாய்க்கால், மாத்தளன், சாலை ஆகிய தமிழ்ப் பகுதிகள் அனைத்திலும் சிங்கள மீனவர்களே அதிக அளவில் மீன் பிடிக்கிறார்கள். தமிழ் மீனவர்களுக்குப் படகும் இல்லை. வலையும் இல்லை. இருந்தும், மீன் பிடிக்கச் சென்றால், அவர்களைக் கடல் பகுதிக்கு இராணுவம் விடுவது இல்லை. இப்படி தமிழன் மொத்த மாக தண்ணீர் தேசத்தில் தத்தளிக்கிறான். 'சண்டை நேரத்தில் செத்திருந்தால், நிம்மதியாப் போயிருக்கும்!' என்றே ஒவ்வொரு தமிழனும் ஒப்பாரிவைக்கிறான். சமாதியில் போய் உட்கார்ந்துகொண்டு சாவை அழைப்பதுபோலவே அவர்களது வாழ்க்கை.



நன்றி - இணையம்

ஆட்கள் தேவை

வத்தளையில் பிரமாண்டமான காட்சியறை கொண்ட எமது ஸ்தாபனத்திற்கு Sales Girls/ Man தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும் வேலை நாட்களான திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 10.00 - 2.00 மணிக்குள் நேரில் வரவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

150, நீர்கொழும்பு வீதி,
வத்தளை.

காணி விற்பனைக்கு

யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு
அருகாமையில் 5 பரப்பு காணி
வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.



மேலதிக விபரங்களுக்கு :- 0049 203 410 3458.

# பதற்றத்தை வெல்ல சில வழிமுறைகள்

பதற்றம்,பல்வேறு நிலைகளில் பல்வேறு விதங்களில் மனிதர்களைப் பாதிக்கிறது. பதற்றம் என்பது ஒரு மனநோயன்று. ஆனால், அதைத் தொடக்கத்திலேயே நாம் கிள்ளியெறிய மறந்தால் அது மனநோய்க்கு வித்தாகி விடக்கூடும். எனவே பதற்றம் எதனால் உண்டாகிறது, அதனை எப்படித் தவிர்க்கலாம் என்று அறிய வேண்டும்.

சிறு குழந்தைகளை நாம் எப்படி நடத்துகிறோமோ, அவர்களுக்கு என்ன கற்றுத்தருகிறோமோ அதுதான் பொதுவாக அவர்களது குண நலன்களுக்கு அடிப்படையாகிறது.எனவே சிறு குழந்தைகளாக இருக்கும்பொழுதே அவர்களைப் பலருடன் பழகவும், பல சூழல்களைக் கையாளவும் கற்றுக்கொடுத்துவிடுவதும், குழந்தைகளை மட்டம் தட்டி, கேலி செய்யாமல் தட்டிக்கொடுத்து வளர்ப்பதும் மிகவும் அவசியம். சிறு குழந்தைகளாக இருக்கையில் பிறருடன் பேச,பழக வெட்கப்படும் குழந்தைகளை அப்படியே விட்டுவிடாமல், மெள்ள மெள்ளப் பலருடன் பழக வாய்ப்பினை உண்டாக்கி,பயிற்சி அளிக்க வேண்டும். இல்லாவிட்டால், வளர்ந்தபின், பள்ளி அல்லது கல்லூரியில் படிக்கையில், நான்கு பேருடன் பேசவோ,வெளியில் செல்லவோ நேர்கையில் பதற்றத்தால் அவர்கள் ஆக்கிரமிக்கப்பட்டுவிடக்கூடும். இத்தகையவர்கள் தமது ஆசிரியர்களிடம் தமது சந்தேகங்களைக் கேட்கவோ, தமது உடன் படிப்பவர்களுடன் பேசவோ நேரும்பொழுது அதிகக் கூச்சத்தாலும் பயத்தாலும் ஆக்கிரமிக்கப்பட்டுவிடுவர். பொது இடங்களுக்குச் செல்வது, சிறிய குழுவுடன் பேச நேர்வது இவை அவர்களுக்கு அதிகப் பதற்றத்தை உண்டாக்கும்.

அதேபோல்,சிறு குழந்தைகளாக இருக்கையில் கேலிக்கு ஆளாகி வளர்ந்தவர்கள், பெற்றோராலும் மற்றவர்களாலும் திட்டி, மட்டம் தட்டி வளர்க்கப்பட்டவர்கள், பெரியவர்களாகியபின் கூட எந்தச் செயலைச் செய்வதானாலும், குழப்பமும் பதற்றமும் அடைவார்கள். பிறருடன் பேசுகையில் கைகால்கள் நடுங்குதல், உடல் வியர்த்தல், புதிய இடங்களுக்குச் செல்லத்தயங்குதல் இவையெல்லாம் பதற்றமான மனநிலைக்கு அறிகுறி.புதிய சூழலுக்கு ஆட்படுகையில் சிலர் பதற்றத்தால் மயக்கமடைவதும் மாரடைப்பு ஏற்படுவதும்கூட நடப்பதுண்டு.

இத்தகைய பதற்றமான மனநிலை உடையவர்கள் அதிலிருந்து விடுபடுவதற்கு இதோ சில வழிகள்.

நமது எண்ணங்களே நாம் வாழ்வின் அடிப்படை. நமது நேர்மறை எண்ணங்கள் நமக்கு நற்பலனையும்,எதிர்மறை எண்ணங்கள் தோல்வியையும் உண்டாக்குகின்றன. தவறு செய்துவிடுவோமோ என்ற அச்சத்துடன் செய்யும் வேலைகள் தவறாகவேதான் முடியும். எனவே எதிர்மறையான சிந்தனைகள் தோன்றும்பொழுது கவனமாக உங்கள் மனத்தை வேறு நேர்மறை எண்ணங்களுக்குத் திருப்புங்கள்.

ஒரு தாளைக் கையில் எடுத்துக்கொள்ளுங்கள். உங்களிடம் உள்ள குறைபாடுகள் என்னென்ன? எந்தெந்த விடயங்கள் உங்களுக்குப் பதற்றத்தைத் தூண்டுகின்றன எனப் பட்டியலிடுங்கள். பின் நிதானமாக அக்காகிதத்தைக் கிழித்து குப்பைத்தொட்டியில் எறியுங்கள். இக்குறைபாடுகள் என்னை விட்டு வெகு விரைவில் நீங்கிவிடும் என்றும், இனி இச்சூழல் என்னை அச்சுறுத்தாது. இத்தகைய சூழலை எதிர்கொள்ளும் தெம்பு எனக்கிருக்கிறது என்றும் திடமான குரலில் உங்களுக்கு நீங்களே சொல்லிக்கொள்ளுங்கள். சுய அறிவுரை என்ற இந்த முறை ஆழ் மனத்தில் உங்களைப் பற்றி நீங்களே பதித்து வைத்திருக்கும் தவறான எண்ணங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துவிடும்.

உங்களிடம் உள்ள திறமைகள் மற்றும் உங்கள் நிறைகள் என்னென்ன என்பதைப் பட்டியலிடுங்கள். எனக்கு எந்தத் திறமையுமே இல்லை என்று பதில் சொல்லாதீர்கள். எறும்பும் தன் கையால் எட்டுச் சாண் என்பார் அவ்வைப் பிராட்டி. இனிமையான குரலா, உயரமா, நினைவு வைத்துக்கொள்ளும் திறமா, கணக்கில் புலியா, வேகமாக ஓட வல்லவரா, சமையலில் திறமைசாலியா, பிறருக்கு உதவும் குணமும் மனமும் உள்ளவரா? என்னென்னவெல்லாம் உங்களுடைய நல்ல குணங்கள் அல்லது திறமைகள் என்று கருதுகிறீர்களோ அவை எல்லாவற்றையும் பட்டியலிட்டுப் பாருங்கள்.உங்கள் மனம் சோர்வடைகையில் அப்பட்டியலை எடுத்துப் படித்துப் பாருங்கள்.

நீங்கள் என்னென்ன செய்ய விரும்புகிறீர்கள் அல்லது வாழ்வில் உங்கள் இலக்கு என்ன? இதைச் சற்று ஆழ யோசியுங்கள். இந்தப் பதற்றம் அதற்கு எந்த வகையில் தடையாக இருக்கும் என்பதைச் சிந்தித்து, 'இதில் இருந்து நான் வெளியில் வந்தே தீருவேன். என் இலக்கை அடைந்தே தீருவேன்' என்று இரவில் படுக்கைக்குச் செல்லுமுன் உரக்கச் சொல்லிக்கொள்ளுங்கள்.

காலை எழுந்தவுடன் கண்ணில் படுகின்ற மாதிரியான இடத்தில், நல்ல ஆரோக்கியமான பொன்மொழிகள், உற்சாகமூட்டும் சுவரொட்டிகள் இவை இருக்குமாறு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். இரவு படுக்கைக்குச் செல்லுமுன், சிறியதோ பெரியதோ, உங்களுக்கு நடந்த நன்மை ஒன்றை நினைவு படுத்திக்கொள்ளுங்கள்.

எப்பொழுதும் ஏதாவது பரபரப்பாகச் செய்துகொண்டு இருங்கள். brain is devil's workshop என்பது ஆங்கிலப்பழமொழி. மனத்தை அலைபாய விடாமல் ஒரு நிலைப்படுத்தவேண்டுமானால் உடலுக்கும் மனதிற்கும் வேலை கொடுத்துக்கொண்டே இருப்பது அவசியம்.

தியானம் பதற்றத்திற்கு அருமருந்து. தியானமும், மூச்சுப்பயிற்சியும் பதற்றத்தைப் பெருமளவு கட்டுப்படுத்தக் கூடியவை. முடிந்தால் முறையாக ஒரு குருவை நாடி தியானம், யோகா, பிராணாயாமம் முதலியவற்றைக் கற்றுக்கொள்ளுங்கள். முடியாத பட்சத்தில் மெல்லிய இசையை ஒலிக்க விட்டு கண்களை மூடி இசையினையும் உங்கள் சுவாசத்தையும் மட்டும் கவனித்தவாறு பத்து நிமிடங்கள் அமர்ந்திருங்கள். உங்கள் மனம் உங்கள் கட்டுப்பாட்டை விட்டு நழுவி வேறு எண்ணங்களுக்குச் செல்லத்தான் செல்லும். ஒவ்வொருமுறையும் அதைப் பிடித்து இழுத்து வருவது உங்கள் பொறுப்பு. நாள்பட நாள்பட, தியானம் செய்வது பழகிவிடும். உங்கள் ஒரு முகப்படுத்தும் திறனும் கூடிவிடும்.

தண்ணீரில் இறங்காமல் கரையில் நிற்கும்வரை நீச்சல் பழகுவது என்பது முடியாது. நீங்களாகவே பேருந்தில் பக்கத்தில் அமர்ந்திருக்கும் உங்கள் சக பயணியிடம் மெல்லப் பொது விடயங்களைப் பற்றிப் பேச்சுக் கொடுப்பது, உங்கள் நண்பர்கள் மத்தியில் ஒரு புதிய கதை அல்லது நகைச்சுவைத் துணுக்கைப் பகிர்ந்து கொள்வது என்று மெல்ல மெல்லப் பயிற்சி செய்யுங்கள். உங்கள் அலுவலகக் கூட்டங்களில் குறைந்த பட்சம் ஒரு கேள்வி கேட்பது அல்லது ஒரு யோசனை சொல்வது என்று முடிவு செய்து அதைச் செயல்படுத்திப் பாருங்கள்.

## அம்மா வந்தாள்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமலாவின் முகம் ஒரு கணம் பிரகாசமடைந்து, பின்னர் சட்டென்று அசைவற்று தலை சாய்ந்தது.

கமலாவுக்குப் புரிந்து விட்டது. விமலா இறந்து விட்ட துயரை வெளிக் காட்டிக்கொள்ளாமல் சுமதியுடன் வெளியேறினாள். ''கடவுளே எங்களுக்கு ஏன் இந்தக் கொடுமை?''

''எனக்கு அம்மா வேணும்... நான் அம்மாட்ட போகப் போறேன். விடுங்கோ...'' சுமதி அடம் பிடித்தாள்.

''சுமதிக் குட்டி... அழாதையுங்கோ... அம்மா சாமிகிட்ட போயிட்டா... இனி வரமாட்டா...''

சுமதிக்குப் புரிந்து விட்டது. ''ஐயோ என்ர அம்மா... என்னை விட்டுவிட்டுப் போட்டியளே....''

அவள் பெருங்குரல் எடுத்து அழவே, கமலா அவளைத் தேற்றியபடி திரும்பி மீண்டும் தாயின் உடலருகே கொண்டுவந்தாள்.

அழுது குளறும் கமலாவும் சுமதியைத் தேற்ற முடியாமல் அழுதாள்.

வைத்தியசாலைச் செலவிலேயே விமலாவின் உடல் அடக்கம் செய்யப்பட்ட பின்னர் சுமதியைத் தினமும் கமலா தேற்றியதுடன் தனது அன்பை அள்ளிச் சொரிந்தாள். வாட்டிலிருந்து துண்டு வெட்டியதும், சுமதியைத் தனது இருப்பிடத்துக்குக் கூட்டிச்சென்றாள். தனது பிள்ளையை ஏற்கனவே பறிகொடுத்திருந்த கமலாவுக்கு சுமதியின் வரவு பெரும் ஆறுதலை அளித்தது.

''சுமதிக் குட்டி... ஒன்று கேட்பன். செய்வியளோ செல்லம்?'' பீடிகையோடு கமலா கேட்டதும், ''சொல்லுங்கோ மிஸ்சியம்மா...'' என்று அவள் முகத்தைத் தடவினாள் சுமதி.

''சுமதிக்குட்டி... இனி நீங்கள் மிஸ்சியம்மாவை அம்மா எண்டு கூப்பிடுறியளே?''

''ஓம். அம்மா... எனக்கும் அப்படிக் கூப்பிடத் தான் விருப்பம்.'' என்றபடி கமலாவைக் கட்டிக் கொண்டாள். கமலாவும் பூரிப்பில் அவளை வாரியணைத்து முத்தமிட்டாள்.

கமலா சுமதிக்கு அழகான உடுப்பு போட்டு ரசிப்பாள். வகைவகையாக உணவு செய்து கொடுப்பாள். உணவுத் தட்டுப்பாட்டு இருந்த போதும் தான் பட்டினி கிடந்தாலும் சுமதியை அன்போடு கவனித்தாள்.

நாட்கள் நகர்ந்தன.

திடீரென்று ஒரு நாள் காலை வைத்தியசாலைச் சுற்று வட்டமெங்கும் ஷெல்கள் வந்து வீழ்ந்து வெடித்தன. சுமதியையும் தூக்கிக்கொண்டு பதுங்கு குழியை நோக்கி ஓடிய கமலா, அருகே ஷெல் வந்து வீழ்ந்து வெடிக்கவே சுமதியையும் தரையில் கிடத்தி அவள் மீது போர்வையாய் படர்ந்தாள். எங்கும் கெந்தக மணமும், புழுதியும் புகையுமாய்.....!




2010 புலமைப்பரிசில் பரீட்சையில் கல்விச் சுடர் வளவாளர் ஆசிரியர் பி. அம்பிகைபாகனூடாக சுடர்ஒளி புலமைச் சுடரில் வெளிவந்த மாதிரி வினாத்தாள்களைப் பெற்று அதிகளவு பயிற்சிகளைச் செய்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு விருது வழங்கும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது. சுடர்ஒளியின் அனுசரணையுடன் இராஜேஸ்வரி கல்வி நிலையத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஆசிரியர்கள் மற்றும் பிரமுகர்களுடன் சித்தி அடைந்த மாணவர்கள் நிற்பதையும், அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர் ஒருவருக்கு சுடர்ஒளி கல்விச் சுடர் சார்பாக சுடர்ஒளி உத்தியோகத்தர் ஒருவர் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(மற்றும் ஒரு படம் 28 ஆம் பக்கத்தில்..)

# ராசி-பலன்

**10 . 10 . 2010 - 16 . 10 . 2010**




**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

கலைகளில் அதிக ஈடுபாடு காட்டும் மேஷ ராசி அன்பர்களே!

ஓய்வில்லாமல் பாடுபட்டு, முக்கியமான காரியங்களில் வெற்றியைத் தேடிக் கொள்வீர்கள். சில செயல்களில் சந்திக்கும் தளர்வுகளைச் சமாளிக்க முக்கியமானவர்களின் உதவியை நாடுவீர்கள். திட்டமிட்டபடி பணவரவுகள் வந்து சேரும். ஆனாலும் செலவுகள் அதிகமாகும். உத்தியோகஸ்தர்களில் சிலர் எப்படியும் முடித்து விடலாம் என்று நினைத்த காரியம், தொடர்ந்து கொண்டே போகலாம். சுயதொழில் செய்பவர்களுக்கு புதிய முயற்சிகளில் எதிர்பாராத வெற்றி கிடைக்கக் கூடும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணக்கூடும். குடும்பத்தில் விருந்தினர்களின் வருகையால் செலவுகள் அதிகமாகலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். பங்குச்சந்தை வியாபாரம் நன்றாக நடைபெற்று நல்ல லாபம் கிடைக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை. அதிர்ஷ்டக்கிழமை: புதன்.




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

நீதி நெறிகளில் அதிக பற்றுதல் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே!

நீங்கள் சுலபமாக முடித்து விடலாம் என்று நம்பிய காரியம் ஒன்றுக்கு அதிக முயற்சி தேவைப்படும். சில பிரச்சினைகளில் முக்கியமானவர்களின் உதவி தேவைப்படலாம். ஆரோக்கியக் குறைவால் அவசியமான செயல்களைத் தள்ளி வைக்க நேரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் ஆவணங்களைப் பாதுகாப்பதில் கூடுதல் கவனம் தேவை. கூட்டு வியாபாரத்தில் கூட்டாளிகளின் கெடுபிடியால் தொல்லைகளைச் சந்திக்க நேரலாம். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடைபெற முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். சகோதர வழியிலிருந்து பெண்களுக்குத் தனவரவுகள் ஏற்படும். பொன், பொருள் சேர்க்கை உண்டு. பணவரவுகளால் குடும்பத்தேவைகள் பூர்த்தியாகும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3.6.9. அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி.





**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

முன்னேறத் துடிக்கும் மனம் பெற்ற மிதுன ராசி அன்பர்களே!

வேலைகளை விரைவாகச் செய்ய வேண்டிய சூழ்நிலை உண்டாகும். அவசரமும், முக்கியமும் கருதி ஓய்வில்லாமல் பணிகளில் ஈடுபடுவீர்கள். அதிக அலைச்சல்களால் ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்படலாம். கிடைக்கும் என்று நம்பிய பணவரவுகளும், காரணமின்றித் தள்ளிப் போக நேரும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கிச் சமாளிக்கும் நிலை ஏற்படலாம். கூட்டுத்தொழில் செய்பவர்கள் புதிய கிளைகள் ஆரம்பிக்கும் முயற்சியைத் தள்ளி வைப்பது சிறந்தது. குடும்பத்தில் சிறு சிறு கடன் தொல்லைகள் இருக்கலாம். பெண்கள், சகோதரி வழி உறவினர்களால் பிரச்சினைகளுக்கு உள்ளாகலாம். வார்த்தைகளில் கவனம் தேவை. வேலைக்காகக் காத்திருப்போருக்கு நல்ல செய்தி தேடி வரும். கன்னியர், மனம் இனிக்கும் சம்பவம் ஒன்றைச் சந்திக்கலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்.





**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

சிறந்த பேச்சாற்றலுக்குச் சொந்தக்காரரான கடக ராசி அன்பர்களே!

அவசியமான பணிகளை உடனே செய்து முடிக்க தீவிர முயற்சியோடு பாடுபட்டு வெற்றிகளைப் பெறுவீர்கள். நண்பர்களும் உறவினர்களும் தக்க சமயத்தில் உங்கள் பணிகளில் ஆதரவாக இருப்பார்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நிர்வாகத்தின் முன் வைத்த கோரிக்கைகள் தள்ளிப்போக நேரலாம். ஆவணங்கள் தொலைந்து போவதால் பதற்றம் ஏற்படலாம். கூட்டுத்தொழில் செய்பவர்கள், ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்துவார்கள். தொழிலை விரிவுபடுத்தும் எண்ணமும் மேலோங்கும். குடும்பத்தில் பிள்ளைகள் தொடர்பான விஷயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் அதிக லாபம் பெற புதிய நபர்களின் ஆலோசனைகள் பயனுள்ளவையாக இருக்கக்கூடும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,3,5. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள். அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

எந்த செயலையும் முன்யோசனையுடன் செய்யும் சிம்ம ராசி அன்பர்களே!

முக்கியமான செயல்களை அதிக முயற்சியுடன் செய்து முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். முக்கிய நபர்களின் ஆதரவுடன் தளர்வடைந்த செயல்களை ஊக்கப்படுத்தி வெற்றி பெற முற்படுவீர்கள். தனவரவுகள் எதிர்பார்த்தபடி வந்து சேர்ந்தாலும், செலவுகளும் முன்வந்து நிற்கும். சுயவேலை செய்பவர்கள் முதலில் செய்து கொடுத்த வேலைக்குப் பாராட்டும் பரிசும் பெறுவார்கள். கூட்டு வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகள் இருந்தாலும் சீராக நடைபெற்று வரும். கணவன்-மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். பெண்களுக்கு கடந்த கால கசப்பு உணர்வுகள் மாறி, சுமுக சூழ்நிலை உண்டாகும். உறவினர் வருகை மகிழ்ச்சி அளிக்கும். பங்குச்சந்தை வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கலாம். முதலீடுகளை அதிகமாக்க முற்படுவீர்கள்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,8. அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம். அதிர்ஷ்டக்கிழமை: சனி.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

கலை நுணுக்கத்துடன் காரியங்களைச் செய்யும் கன்னி ராசி அன்பர்களே!

எடுத்த வேலைகள் சிறியவையாக இருந்தாலும் அதிக முயற்சி செய்து வெற்றி காண முற்படுவீர்கள். சிலவற்றிற்குத் தக்க பிரமுகர்களின் உதவி தேவைப்படலாம். கையில் உள்ள பணம் நல்ல காரியங்களுக்காகச் செலவழியும். சிலருக்கு வெளிநாட்டு பணி தேடி வர வாய்ப்பு இருக்கிறது. சுயவேலை செய்பவர்களுக்கு பணவரவுகள் இருக்கும். குடும்பத்தில் பழைய கடன் தொல்லைகள் இருந்தாலும், அதனால் பாதிப்புகள் உண்டாகாது. பெண்களுக்கு சேமிப்பு பெருகும். திருமணத்தடை உள்ளவர்கள், அதற்குப் பரிகாரமாக இஷ்ட தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வதன் மூலம் நல்ல செய்தி கிடைக்கப்பெறலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,8,9. அதிர்ஷ்ட நிறம்: பச்சை. அதிர்ஷ்டக்கிழமை: புதன்.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

கவலை மறந்து களிப்பான முகத்துடன் காட்சி தரும் துலாம் ராசி அன்பர்களே!

மனதில் நினைத்த விஷயங்கள் கடிதம் மூலம் நல்ல செய்தியை கொண்டு வரும். சில செயல்களில் ஏற்படும் தொய்வுகளில் தக்க நபர்களின் உதவி கொண்டு முயற்சித்து முன்னேறுவீர்கள். திட்டமிட்ட பணவரவுகள் சரியான சமயங்களில் வந்து சேரும். பழகிய சிலர் மூலம் முக்கியமான செய்திகளை கேட்கலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு உயரதிகாரிகளின் ஆதரவுடன் சில சலுகைகளை அனுபவிக்கும் நிலை உண்டாகும். சுயதொழிலில் எதிர்பார்க்கும் லாபம் ஏற்படும். கூட்டு வியாபாரம் செய்பவர்கள் கணிசமான லாபம் அடைவார்கள். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பெண்கள் சமாளித்து விடுவார்கள். சுபநிகழ்ச்சி நடைபெற முன்னேற்பாடுகளைத் தொடங்குவீர்கள். சேமிப்பு செலவழிய வாய்ப்புகள் உண்டு.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,6. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள். அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்.




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

கம்பீரமான தோற்றம் கொண்ட விருச்சிக ராசி அன்பர்களே!

எந்த விஷயத்தையும் அதிகம் பேசியே சாதிக்க வேண்டி இருக்கும். கேட்ட இடத்தில் கடன் கிடைத்தாலும், செலவுகள் அதிகரிப்பதால் சேமிப்பு இருக்காது. உங்கள் முயற்சிகள் தீவிரமாக இருந்தாலும், செய்யும் செயல்கள் சிலவற்றிலேயே முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதைத் தவிர்ப்பதும், புதிய முடிவுகளை எடுக்காமல் இருப்பதும் நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்புகளில் கவனமாக இருத்தல் வேண்டும். கூட்டு வியாபாரத்தில் வாக்குறுதி கொடுப்பதில் கவனம் தேவை. குடும்பத்தில் அமைதி இருந்தாலும், அவ்வப்போது சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு சமாளிக்கப்படும். கொடுக்க வேண்டிய கடனைச் சரியான நேரத்தில் கொடுக்க முடியாமல் சிறு மனக்கசப்புகளுக்கு ஆளாக நேரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,5,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்.





**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

தோல்வி வந்தாலும், அதைக் கண்டு துவளாத தனுசு ராசி அன்பர்களே!

உங்களது கடினமான போராட்டத்துக்கு வெற்றி கிட்டும். எதிர்பார்த்த நல்ல பலனை அடைவீர்கள். பிரபலமானவர்கள் உங்களுக்குத் தக்க சமயத்தில் உதவியாக இருப்பார்கள். நீண்ட காலமாக எதிர்பார்த்த உங்கள் நண்பர்கள் தேடி வரக்கூடும். முக்கிய பயணங்களைத் தவிர்க்கவும். புதிய பொருள் வாங்குவதிலும் கவனம் தேவை. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரக்கூடும். கூட்டுத்தொழில் செய்வோர் வியாபாரத்தில் உள்ள போட்டிகளைச் சமாளிக்க ஆலோசிப்பீர்கள். குடும்பத்தில் அங்கத்தினர்களின் உதவியுடன் பிரச்சினைகளைச் சமாளிப்பீர்கள். சகோதர வழி உறவுகள் இல்லத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சியில் பெண்கள் பங்கேற்பார்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். புதிய பங்குகள் வாங்கவும் பழைய பங்கை விற்கவும் சாத்தியம் ஏற்படும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,6,9. அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி.




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

தேர்ந்த நுண்ணறிவுடன் செயலாற்றும் மகர ராசி அன்பர்களே!

சில காரியங்களில் தளர்வுகள் இருந்தாலும், தக்க நபர்களின் உதவியோடு அவைகளைச் சரிசெய்து வெற்றி பெற முற்படுவீர்கள். வார்த்தைகளில் கவனமும், பணப் பரிமாற்றத்தில் நிதானமும் தேவை. கடன் விவகாரங்களில் அவசர முடிவு எடுக்க வேண்டாம். நீங்கள் எதிர்பார்க்கும் முக்கிய செய்தி ஒன்று உங்களைத் தேடி வரக்கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் பிறகு செய்யலாம் என்று தள்ளிவைத்த வேலையை உடனே செய்ய வேண்டிய அவசியம் ஏற்படலாம். சுயவேலை செய்பவர்கள் பாராட்டுப் பெறுவார்கள். கூட்டு வியாபாரம் செய்பவர்களுக்கு வியாபாரம் சுமாராக நடந்தாலும் வழக்கமான லாபம் குறைவுபடாது. குடும்பத்தில் அவ்வப்போது சில பிரச்சினைகள் ஏற்படும். குடும்ப அங்கத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும். அதிக லாபம் பெற நண்பர்களின் ஆலோசனைகள் தேவைப்படும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,5,6. அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி.




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

பேச்சில் இனிமையை வெளிப்படுத்தும் கும்ப ராசி அன்பர்களே!

எதிர்பார்த்த இனங்களில் சிறிய வெற்றி உண்டாகும். தீவிர முயற்சியோடு ஈடுபடும் காரியங்களில் சிறப்பான பலன்களைப் பெறுவீர்கள். தளர்ச்சி அடையும் சில காரியங்களில் முக்கியமானவர்களின் உதவியை நாடுவீர்கள். தாய்வழி உறவுகளால் எதிர்பார்த்த லாபம் உண்டு. சிலருக்கு சுபகாரியங்கள் முன்னின்று செல்ல வாய்ப்புகள் உண்டாகும். அவசியமற்ற பயணங்களைத் தள்ளிப்போடுங்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு புதிய பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிடைக்கும். சுயதொழிலில் வேலைகள் அதிகமாகும். லாபமும் கூடும். குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகள் தலைதூக்கினாலும் சமாளித்து விடுவீர்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் பெற சற்றுப் பொறுமை அவசியம்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,3,5. அதிர்ஷ்ட நிறம்: வெண்மை. அதிர்ஷ்டக்கிழமை: திங்கள்.




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

அரிய செயல்களையும் எளிதாக முடிக்கும் மீன ராசி அன்பர்களே!

நீண்ட நாள் எதிர்பார்த்த வெற்றியை நோக்கி முன்னேறுவீர்கள். தீவிர முயற்சியுடன் செய்யும் காரியங்களில் நல்ல முன்னேற்றம் காணப்படும். வரவேண்டிய பணம் சிறிது தாமதமாக வந்து சேரக்கூடும். வழிகாட்டியாகக் கருதும் நண்பர்களிடம் எதிர்காலத்தைப் பற்றி ஆலோசிப்பீர்கள். வங்கி கடன் கிடைத்து, வீடு, மனை, கார் வாங்கும் யோகம் சிலருக்கு ஏற்படும். சுயவேலை செய்பவர்கள், தங்கள் பணிகளில் சில மாற்றங்களைச் செய்து கொள்ளலாம். கூட்டுத்தொழில் செய்பவர்கள் எதிர்பாராத புதிய செலவுகளைச் சந்திக்க நேரலாம். குடும்பத்தில் உடன்பிறப்புகள் வழியில் மனக்குறைகள் உருவாகலாம். பெண்கள் பிறந்த வீட்டிலிருந்து விரும்பிய உதவிகளைப் பெறுவார்கள்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,3,5. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: ஞாயிறு.

# மனித உறவுகளுக்கு தொடர்புகொள்ளும் ஆற்றல் மிக முக்கியமானது

சுயமதிப்பைக் கட்டி எழுப்புதல்

சுய மதிப்பைக் கட்டி எழுப்புவதற்கு அடிப் படையாக உள்ள 'ஏற்று அங்கீகரித்தல்' (AFFIRMATION) என்பது ஒரு முக்கிய இடத்தை வகிக் கின்றது. ஆனால், எமது கலாசாரத்தில் இது காணப்படுவதில்லை; நாம் பெரும்பாலும் இந்த விடயத்தைத் தட்டிவிடுபவர்களாக (KNOCKERS) இருக்கின்றோம்.

முதிர்ச்சியடைந்த, சமநிலையில் சிந்திக்கும் சக்தி வாய்ந்த நாம், எம்மைப் பற்றி உயர்வாகச் சிந்திக்க வேண்டும். மற்றவர்கள் செய்வதற்கு, உள்ளார்ந்த மதிப்பீட்டை (APPRECIATION) எளிய முறையில் தெரிவிக்க வேண்டும். இது தனிப்பட்டவருக்கு மாத்திரமன்றி குழந்தைகளுக்கும் பொருந்தும்.

உங்களது அந்தரங்க பிரச்சினைகள் மற்றும் குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர்

**ஏ.எச்.ஏ.ஹுஸைன்.**

கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:

"A.H.A. HUSSEIN
KAYAR ROAD
ERAVUR.

ஈமெயில்:
abdulhussein525@gmail.com



AFFIRMATION எனும் அடிப்படையான ஏற்று அங்கீகரிக்கும் தன்மை என்பது, பரஸ்பர நம்பிக்கையையும், சுமுகமான சூழலையும் உருவாக்கி, பிரச்சினைகளை அடக்கி, வெடிக்கும் வரை உட்கொதிப்பை வளர்த்தலைத் தவிர்த்து, அவற்றை மேலே கொண்டுவந்து தீர்ப்பதற்கு வழி வகுக்கும்.

அடிப்படையான ஏற்று அங்கீகரிப்பும் (AFFIRMATION) உற்சாகப்படுத்தலும் இளையோருடன் உறவாடும்பொழுது தேவைப்படும். பெரும்பாலான சந்தர்ப் பங்களில் ''வெற்றியீட்டியது போதாது'', ''பத்துக்குப் பத்து எடுக்கவில்லை'', ''அதிகமாகக் கதைக்கிறாய்'', ''எங்கள் தகுதிக்கு எட்டக் கூடிய அளவு இல்லை'' போன்ற கருத்துக்களை அவர்களுக்கு உணர்த்துகிறோம். இத்தகைய கருத்துக் களுக்கு எதிர்மாறாக நடந்துகொள்ள நாம் மனமார முயற்சி செய்ய வேண்டும்.

குழந்தைகளின் உள் பெறுமதியை உறுதிப்படுத்தும்பொழுது, அவர்களின் செயலில், அவர்கள் செய்த முயற்சிகளில் அக்கறை காட்ட வேண்டுமேயன்றி, அவர்களது உற்சாகத்தைக் குறைக்கும் வண்ணம் அல்லது சோர்வு ஊட்டும் வகையில் நடந்துகொள்ளக் கூடாது. படிப்பதற்கு அவர்கள் எடுத்த முயற்சி யில் கவனம் செலுத்த வேண்டுமேயொ ழிய, அவர்கள் பெற்ற பெறுபேறுகளில் அல்ல. விளையாட்டில் வெற்றியை விட, விளையாடிய திறமையில் அக்கறை செலுத்த வேண்டும்.

இன்னொரு முக்கியமான அம்சம் என்னவென்றால், பாராட்டுதலை விட உற்சாகப்படுத் துதலே முக்கியமாகும்.

பாராட்டும்போது ''நீ எதிர்பார்த்த இலக்கை அடைந்து விட்டாய்'' என்ற மறைமுகச் செய்தியை அளிப்பதாக அமையும். உண்மையிலேயே, நாம் உற்சாகப்படுத்துவது அவர்களது மனதில் ஒரு திருப்தியை உண்டுபண்ணும்.




தொடர்பாடல் (COMMUNICATION)

மனித உறவுகளுக்கு, தொடர்புகொள்ளும் ஆற்றல் மிக முக்கியமானது. தொடர்புகொள்வதில் முக்கியமான அம்சம் செவிமடுத்தலாகும். ஒரு சுமுகமான சூழல் இதற்கு உதவியாக இருக்கும். செயல் திறனுடனான தூண்டிச் செவிமடுத்தல் (ACTIVELISTENING) என்பது ஒருவர் பேசும்பொழுது எமது உணர்வுகளை அவருக்குத் தெரியப்படுத்தி, ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கும்.

- ஏ.எச்.ஏ.ஹுஸைன் -

உடல் மொழி (BODY LANGUAGE)

தொடர்பு கொள்வதற்கு மிக முக்கியமான ஒன்று, ஒருவர் பேசும்பொழுது வெளிப்படுத்தும் துக்கம், சந்தோஷம், கோபம் போன்றவை உடல் மொழியினுள் அடங்கும்.

தொடர்புகொள்ளும் வழி வகைகளை நாம் தெரிந்து வைத்திருப்பது அவசியம். சில சந்தர்ப்பங்களில் ஒருவர் ''தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம்'' (TELEPHONE EXCHANGE) போல் இருப்பார்.

பிரச்சினைகள் உருவாகும்போது தொடர்பு கொள்ளல் அவர் ஊடாகவே மேற்கொள்ளப்படும். இத்தகையவர்களுக்கு விசேட சக்திகள் ஏதும் உண்டா? அந்தச் சக்தி என்ன?

தொடர்புகொள்ளல் என்பது ஒருவரின் கருத்துக்களை மற்றவருக்குத் தெளிவாக விளங்கவைத்தலும் வலுச் சண்டைக்குப் (AGGRESSION) போகாமல் அடிப்படையான அங்கீகரித்தலுமாகும்.

வலுச்சண்டை மற்றவர்களின் உரிமைகளை மறுக்கும். தொடர்புகொள்ளலானது தீர்ப்பேதும் கூறாது, அவதானமாகச் செவிமடுத்தலையும் உள்ளடக்குகின்றது.

ஒத்துழைப்பு

இது மற்றவர்களுடன் ஒத்துழைத்துப் பொதுவான இலக்கொன்றுக்காகத் தங்கள் பணிகளைப் பகிர்ந்து இயங்குவதாகும். போட்டி குறைந்த சூழலிலேயே ஒத்துழைப்பு பயனளிக்கக் கூடியதாக இருக்கும். அதே சமயம், ஒத்துழைப்பு இருக்கும் சூழலிலேயே முரண்பாடுகள் உண்டாவதற்கான சாத்தியக்கூறுகளும் குறைவாக இருக்கும். ✱

---

கேள்வி:

சிலர் நாம் சொல்லும் கருத்துக்கள் நன்மையாக இருந்தும் கூட எடுத்த மாத்திரத்திலே நிராகரித்து விடுகிறார் கள். தாங்கள் ஒரு வகையில் மேதாவிகள் என்ற நினைப்போடு இவர்கள் நடந்து கொள்கிறார்கள். இவர்களால் சமூகத்தில் குழப்பங்களும் ஏற்படுகின்றன. இத்தகைய ஒரு நடத்தை சமுதாயத்தில் குழப்பங் களுக்குக் காரணமாகஇருக்கிறதே?

பதில்:

மனித சமூகத்தில் ஒரு சாராரின் இத்தகைய நடத்தைகள் நிச்சயமாக குழப்பத்தையும் அழிவுகளையும் ஏற்படுத்தவல்லன.

இத்தகையபிறழ்வானநடத்தைகளுக் குக் காரணம், அவர்களது பின்னணி, வாழ்ந்த, வாழும்சூழல் மற்றும் மனப் பாங்குகளும் விழுமியங்களுமாகும்.

இதுவும் ஒரு வகையான ஆளுமைக் குறைபாடே ஆகும்.

எதற்கெடுத்தாலும் பிறர் சொல்லும் கருத்துக்களை ஆராய்ந்து பாராது தட்டிக் கழிப்பவர்களை மதிப்புக்கொடுத்து வரவேற்க வேண்டியதில்லை. நாமும் கணக்கிலெடுக்காமல் விட்டுவிட வேண்டியதுதான். மற்றவர்கள் ஏன் தங்களை நிராகரிக்கிறார்கள் என்று அவர்கள் உணரும் போதுதான், தாங்கள் நடந்துகொண்ட விதம் எத்தகையது என்பது அவர்களுக்குப் புரியவரும்.

வெட்டிப் பேச்சுப் பேசித்திரியும் இத்தகைய பேர்வழிகள் தங்களுக்குத் தாங்களே வலை பின்னிக் கொண்டு அந்தக் கூட்டிலே வாழ்பவர்கள். ஒட்டு வதை விட, இவர்களை ஒதுக்கிவிட்டு ஆகப்போவதைக் கவனிக்க வேண்டியது தான்.

நாம் ஒவ்வொருவரும் சற்றுத்தடுமாற் றம் உடையவர்கள். எனினும், சாத்வீகத் தின் ஊடாக நாம் உலக ஒருமைப்பாட்டை அடையலாம். சாத்வீகம், முடிவாக எமது எதிரிகளுக்கும் நன்மை கலந்த மாற்றம் வருவதையே எதிர்பார்க்கின்றது.

''ஒரு சாத்வீகப் புரட்சி என்பது அதிகா ரத்தைக் கைப்பற்றும் செயல்திட்டமாகாது, அது முறைமைகளை மாற்றும் செயல் திட்டமாகும். அதன் நிறைவு சமாதானம் நிறைந்த அதிகார மாற்றமாக அமையும்.''

ஒரு குறிப்பிட்ட செயலை வெற்றிகர மாக நிறைவேற்றும் தந்திரோபாயமாகச் சாத்வீகம் பயன்படுத்தப்படலாம்.

# சாத்வீகம், அஹிம்சை வழிச் செயற்பாடுகள் வெற்றியளிக்குமா?

கேள்வி:

நான் பல முரண்பாடுகளை அனுப வத்தில் கண்ட ஒருவர். பல முரண்பாடு கள் வன்முறையில் முடிவடைந்து, எந்தத் தரப்பாருக்கும் வெற்றியைத் தராமல் தோல்வியையும் அவமானத்தை யும் தேடித்தந்திருக்கின்றன. எனது கேள்வி சாத்வீகம் அல்லது அஹிம்சை வழிச் செயற்பாடுகள் வெற்றியளிக்குமா என்பதுதான்.

மொத்தத்தில் இவர்களைத் திருத்துவ தென்பது சற்றுச் சிரம சாத்தியமான விடயம். சமூகத்தில் குறைந்தளவு எண்ணிக்கையினரான இவர்களோடு நமது சக்தியை வீணாக்கு



பதில்:

உங்களது கேள்வி யிலேயே தக்க பதிலும் இருக்கிறது. மனிதப்பண்புகளையும் வாழ்வின் பெறுமதியையும் மதிப்புக் கொள்ளச் செய்வது சாத்வீகத்தின் நோக்கமாகும்.

சாத்வீகமான முறையில் மாற்றத்தை விரும்பும் பொழுது, நாம் நமது எதிரியை மரியாதையுடனும், திறந்த மனதுடனும், அன்புடனும் அணுகுகின்றோம். நாம் ஒவ்வொருவரும் உண்மையை உடைய வர்கள். எமது ஊக்கத்தைப் பகிர்ந்து கொள்வதன் மூலமும், நமது எதிரியை யும் சாத்வீக நடவடிக்கையாளரையும் ஒரே கண்ணோட்டத்தில் நடத்துவதன் மூலமும் பிறரையும் நன்மை அடையச் செய்யலாம் என்பதையும் அறிவோம்.


இந்த உலகம் நமக்காகச் செயற்பட வேண்டுமானால், நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படக் கூடியவர் களாயிருத்தல் வேண்டும்.

சாத்வீகத்தை ஒன்றிணைந்த வாழ்க்கை முறை என்றும் கொள்ளலாம். சாத்வீகம் இரண்டு நிகழ்வுகளிலும் நற்பயனை விளைவிக்கத்தக்கது. சாத்வீ கத்தைப் பயன்படுத்துவது இன்றியமை யாததாக அமையலாம். ஏனெனில், சாத்வீகம் பாரம்பரியமற்ற முறைகளில் நம்பிக்கைகொள்ளவும் அவற்றைக் கடைப் பிடிக்கவும் தூண்டும் பெறுமானமுடையது.

நாம் ஒரு சாத்வீக, சமூக நீதியோடு அமைந்த, எல்லோருக்கும் வெற்றியான உலகைக்காண விரும்பினால், வன்முறை, பயங்கரவாதம், கொலை என்பனவற்றை முற்றிலும் நிராகரித்தல் வேண்டும்.

சாத்வீகம் என்பது ஆக்கபூர்வமானது, திட்டமிடப்பட்டது, நிச்சயமானது, செயலாற்றல் வாய்ந்தது. அது வேற்றுமை களைத் தீர்ப்பதற்கு பலாத்காரத்தை வழியாகக் கொள்ளாதது. ✱

# இந்திய சினிமாவின் ஜாம்பவான் அமிதாப் பச்சன்



அமிதாப் பச்சன்... இந்திய சினிமாவின் ஜகன். பொலிவுட்டின் பிக்பி. கோபக்கார இளைஞனாகத் திரையுலகில் கால் பதித்து, 40 வருடங்களைக் கடந்த நாயகனாகவே பயணித்துக்கொண்டிருக்கும் அமிதாப் பற்றி சில குறிப்புகள்....

★ பிறந்த நாள், 1942 ஒக்டோபர் 11. அப்பா ஹரிவன்ஷ் ராய் பச்சன், இந்தியில் பிரபலமான கவிஞர். அம்மா தேஜி பச்சன், அலகாபாத் பல்கலைக்கழகத்தில் உளவியல் பேராசிரியராக இருந்தவர். அப்போதைய பிரதமர் இந்திராகாந்தியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தவரும் கூட!

★ இன்க்லாப் என்பதுதான் அமிதாப்பின் இயற்பெயர். சுதந்திரப் போராட்ட காலத்தில் 'இன்க்லாப் ஜிந்தாபாத்' என்ற வார்த்தைகள் ஹரிவன்ஷ் ராய் பச்சனை ஈர்க்க, அந்தப் பெயரைச் சூட்டினார். அதுவே பிறகு அமிதாப் ஆனது. அதன் பொருள் 'அணையாத ஒளி'!

★ 1969 இல் வெளிவந்த 'ஸாத் ஹிந்துஸ்தானி', இவரின் அறிமுகப் படம். படம் வெற்றி பெறவில்லை. ஆனால், சிறந்த புதுமுக நடிகருக்கான முதல் தேசிய விருதை வாங்கினார் அமிதாப்!

★ 1973 இல் 'ஸன்ஜீர்' படத்தில் நடித்தபோது ஜெயபாதுரியுடன் காதல். அதே ஆண்டு ஜூன் 2 இல் திருமணம் நடைபெற்றது. அப்போது அமிதாப் அவ்வளவு பெரிய ஹீரோ அல்ல. ஆனால், ஜெயா... சூப்பர் ஹிட் ஹீரோயின். ஜெயாவைத் திருமணம் செய்துகொண்ட பிறகு தான் சினிமாவில் தனக்கு ஏற்றம் கிடைத்தது என்று இன்றும் நம்புபவர் அமிதாப்!

அமிதாப் - ஜெயா பச்சன் இருவரும் கணவன்-மனைவியாகவே பல படங்களில் நடித்திருக்கிறார்கள்.

★ யாஷ் சோப்ரா இயக்கி, அமிதாப் நடித்த 'தீவார்' படம், இந்தியா டைம்ஸ் வெளியிட்ட கட்டாயமாகப் பார்க்க வேண்டிய டொப் 25 பொலிவுட் படங்களின் பட்டியலில் இன்று வரை முதல் இடத்தில் உள்ளது!

★ 1975 ஓகஸ்ட் 15 அன்று வெளியான 'ஷோலே' இன்று வரை இந்திய சினிமாவின் 'ஓல் டைம் ரெக்கோர்ட்.' சுமார், 16 கோடி அமெரிக்க டொலர் கணக்கில் இதன் வசூல் ஒரு மெகா சாதனை. 'இந்த நூற்றாண்டின் படம்' என்று பி.பி.ஸி. பாராட்டியது!

★ 1973 முதல் 1983 வரை அமிதாப் நடித்து வெளியான அனைத்துப் படங்களும் ஹிட். தொடர்ந்து ஹிட் கொடுத்ததால், பிரான்ஸ் நாட்டின் புகழ் பெற்ற இயக்குநர் ப்ராங்க்காய்ஸ் ட்ரூபாட் இவரை 'வன் மேன் இண்டஸ்ட்ரி' என்று வர்ணித்தார்!

★ அமிதாப், சிறந்த பாடகரும் கூட. 1979 இல் வெளியான 'மிஸ்டர் நட்வர்லால்' படத்தில் இவர் சொந்தக் குரலில் பாடல்களைப் பாடினார். இதனால் அந்த ஆண்டு 'பிலிம் பேர்' சிறந்த பின்னணிப் பாடகர் விருது கிடைத்தது!

★ 1982 இல் 'குலீ' படப்பிடிப்பின்போது, ஒரு சண்டைக் காட்சியில் இவருக்குக் காயம் ஏற்பட்டது. இவர் குணமடைய உலகம் முழுக்க, சிறப்பு வழிபாடுகளை நடத்தினார்கள் ரசிகர்கள். பல மாதங்கள் வைத்தியசாலையில் இருந்து, அதன் பிறகு மீண்டும் நடித்தார். இவருக்கு ஏற்பட்ட விபத்தினால் உண்டான விளம்பரமே இந்தப் படத்தை 'பொக்ஸ் ஒபீஸ் ஹிட்' அடிக்கச் செய்தது!




★ 1984 இல் அமிதாப்பின் அரசியல் வருகை ஆரம்பித்தது. அலகாபாத் தொகுதியில், உத்தரப்பிரதேசத்தின் முன்னாள் முதல்வர் பஹுகுணாவை எதிர்த்துப் போட்டியிட்டு, மிக அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று வருடங்கள் இருந்தவர், தன் பதவியை ராஜினாமா செய்தார்!

★ தொடர்ந்து படங்கள் தயாரித்து அவை தோல்வி அடைந்த நிலையில், கனரா வங்கிக் கடனைத் திருப்பித் தர முடியாமல், தன் 'ப்ரதீக்ஷா' வீட்டை அடமானம் வைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அதில் இருந்து மீள இவருக்குக் கைகொடுத்தது, 'கோன் பனேகா க்ரோட்பதி' டி.வி. தொடர்!

★ 4 தேசிய விருதுகள், 13 பிலிம் பெயார் விருதுகள் இவர் கிரெடிட்டில். பிலிம் பெயார் சிறந்த நடிகர் விருதுக்கு இதுவரை அதிகம் உச்சரிக்கப்பட்ட பெயர் இவருடையதுதான். இவர் பெற்ற விருதுகள், அங்கீகாரங்களை வைத்தே தனியாக ஒரு 25 பட்டியல் போடலாம். அவ்வளவு விருதுகள்!

★ லண்டனில் 'மேடம் டுஸாட்ஸ்' மெழுகு மியூஸியத்தில் இவரின் மெழுகுச் சிலை வைக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பெருமைக்கு உரிய முதல் ஆசிய நடிகர் இவர்!

★ 'விஜய்' என்பது இவருக்கு மிகப் பிடித்த கேரக்டர் பெயர். இந்தப் பெயரில் இதுவரை 20 படங்களில் நடித்திருக்கிறார்!



★ இவர் ஒரு 'ஐஸோமேனியாக்'. தினமும் அதிகாலை 3 முதல் 5 மணி வரைதான் தூங்குகிறார். இரண்டு மணி நேரம் மட்டுமே தூங்கி எப்படி இவ்வளவு உழைக்கிறார் என்று அனைவரும் அதிசயிப்பார்கள்!

★ குர்தா பைஜாமா இவர் விரும்பி அணிகிற உடைகள். ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் 'மோண்ட் பிளாங்க்' என்ற பேனா நிறுவனம், இவருக்கு என்றே தனியாக பேனா தயாரித்துப் பரிசாக அளிக்கும்!

★ கார்கள் மீது இவருக்கு ஆர்வம். 11 கார்கள் வரிசை கட்டி நிற்கின்றன. 'லெக்சஸ்' என்ற புல்லட்ப்ரூப் கார்தான் இவர் விரும்புவது. 'நான்தான் கார் ஓட்டுவேன்' என்று அடம்பிடிப்பார்!

★ ஒரு நிமிடத்துக்கு 7,000 ரூபா சம்பாதிக்கிறார். பிளானட் ஹாலிவுட் ரெஸ்டூரண்டைத் திறந்து வைத்தபோது, ஹொலிவுட் நடிகர் ப்ரூஸ் வில்லீஸ் இப்படிச் சொன்னார். 'ஹொலிவுட் ஸ்டார்களைக் காட்டிலும் பெரியவர் அமிதாப்!'

★ ஷூட் அவுட் அட் லோக்கன்ட்வாலா' படத்துக்காக 5 மணி நேரத்தில் 23 ஸீன்களுக்கு டப்பிங் பேசியது ஒரு சாதனையாகவே கருதப்படுகிறது!

★ பிப்ரவரி 2010 இல் அமிதாப்பை குஜராத்தின் பிராண்ட் அம்பாசிடராக நியமித்தார் நரேந்திர மோடி. 'அமிதாப் ஒரு மகா நாயகன். நான் ஒரு சாதாரண மனிதன்' என மோடி 'வித்தை' செய்தது அப்போது பா.ஜ.கவினர் இடையே பெரும் சலசலப்பை உண்டு பண்ணியது!

★ அமிதாப்புக்கு ஸ்வேத்தா, அபிஷேக் பச்சன் என்று இரண்டு குழந்தைகள். ஸ்வேத்தாவின் கணவர் நிகில் நந்தா. இவர் எவர்கிரீன் 'ஷோமேன்' ராஜ் கபூரின் மகள் வழிப் பேரன். அபிஷேக் பச்சன் ஐஸ்வர்யா ராயைக் கைப்பிடித்தது உலகறிந்த விஷயம். இந்தியாவின் மிகப் பிரபலமான நட்சத்திரக் குடும்பம்!

★ ராஜீவ் - சோனியா திருமணத்தின்போது சோனியாவைக் கன்னிகா தானம் செய்துவைத்ததே அமிதாப்பின் அன்னைதான். அந்த அளவுக்கு இரண்டு குடும்பங்களும் நெருக்கம். ராஜீவ் காந்தியால்தான் அமிதாப் அரசியலுக்கு வந்தார். ஆனால், போபர்ஸ் ஊழலில் ராஜீவின் பெயர் அடிபடவே, அவரைவிட்டு விலகினார். அந்தக் கடுப்பை இன்று வரையிலும் வைத்திருக்கிறது ராஜீவ் குடும்பம்!

★ 'நீ நினைப்பது எல்லாமே நிகழ்ந்துவிட்டால், அது நல்லது. அப்படி நடக்காவிட்டால், அது சிறந்தது!' அமிதாப், தன் நண்பர்களுக்கு உதிர்க்கும் தத்துவம் இது!

## மாத்திரைக் கவிதைகள்

மனிதர்களே..! மனங்களையும்
சலவை செய்யுங்கள்

★ ★ ★

இரத்தக் கறை படிந்த சட்டைகளை
அணிந்து கொண்டு கைலாகு
கொடுப்பதா...?

★ ★ ★

முகமூடிகளுக்குள் பத்திரமாக
பதுங்கி இருக்கிறது முகம்

★ ★ ★

முழு சுதந்திரமும்
கொடுக்கப்பட்டிருப்பது
கட்டாக்காலி நாய்களுக்கே...!

★ ★ ★

விரலை அடகு வைத்து வீணை
வாங்குவதா...?

★ ★ ★

இழப்புகளை....
இலையுதிர் காலம் என கணக்கு
வைப்போம்

★ ★ ★

கடவுளின் உறக்கத்தையும்
கலைக்கிறது மணியோசை

★ ★ ★

நகர வாசிகள் ரீ.வி. சனல்களிலே
கிராமத்தைப் பார்க்கிறார்கள்

★ ★ ★

உயிரோடு இருக்கும் போதே
எதற்காக தோண்டப்படுகிறதோ
புதைகுழிகள்

★ ★ ★

இயற்கையை சொந்தம்
கொண்டாடுகிறான் கவிஞன்

★ ★ ★

புழுவாய் இருந்து வந்ததுவே
பட்டாம் பூச்சி

★ ★ ★

மணம் முடிக்கும் முன்னரே
கனவுகள் கற்பமாகின்றன.

★ ★ ★

தங்கத் தட்டை நீட்டி
பிச்சை கேட்கலாமா...?

★ ★ ★

மௌனப் போராட்டத்துக்கு - எந்த
ஆயுதங்களைப் பயன்படுத்துவது

★ ★ ★

பலி பீடத்துக்கு இப்போது
மனிதர்களும்
அழைக்கப்படுகிறார்கள்

★ ★ ★

துறவிகளின் கனவிலும் அழகிகளின்
நடமாட்டமா?

★ ★ ★

சூரியனுக்கு கல்லெறிகிறான்
ஒரு சிறுவன்

★ ★ ★

சுடுகாடுகள் நிறைந்து விட்டதே...
கல்லறைகள் குட்டியா ஈனுகின்றன?

★ ★ ★

நாம் நட்ட மரங்களின் கீழ்
நிழலுக்கு ஒதுங்கவே
நமக்கு உரிமையில்லை - ஆனால்
நீங்கள் ஊஞ்சல் கட்டி ஆடுகிறீர்கள்!

(மாத்திரைகள் தொடரும்)

நெடுந்தீவு முகிலன்

# நூற்சுவை நுகர்வோம்

**த.சிவா**

''ஒவ்வொருவரினதும் மனவெளிப்பாடுகள், சக உறவுகளுடனான வாழ்வு முறை, சமூகத்தில் ஏனையோருக்கு முகம் கொடுக்கும் விதம் - இவ்வாறு என் மனதைத் தொட்ட, மனதை அசைத்த, மனதை அதிர்வித்த நிகழ்வுகளையே கதைகளிற் பதிவு செய்திருக்கிறேன்'' என்று கூறும் சுதாராஜ், அறுபது சிறுகதைகளை உள்ளடக்கிய 'உயிர்க்கசிவு' என்னும் நூலை வெளிக் கொண்டுவந்துள்ளார். ஏற்கனவே சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும், தொகுதிகளிலும் வெளிவந்த கதைகளில் திரட்டியவையே இந்நூலில் இடம்பெற்றுள்ளன. 'நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்' நிறுவனத்தினரின் வெளியீடு என்ற வகையிலும் இச்சிறுகதைத் தொகுதி கனதியான அந்தஸ்தைப் பெற்று நிற்கின்றது.

''இந்தத் தொகுப்பின் பல கதைகள் வறுமையின் பிடியில் சிக்கும் மனிதர்களைப் பற்றியவை. தமிழ்ச் சமூகத்தைச் சீரழிக்கும் சீதனம் என்னும் கொடுமையின் கோரப்பல்லுக்குள் சிக்கி அரைபடும் முதிர்கன்னிகள் பற்றியவை. சுய கௌரவத்தை விட்டுக் கொடுக்க முடியாமல் திண்டாடும் உழைப்பாளிகள் பற்றியவை, அரசாங்கத்தின் கீழ் அதிகாரிகள் படும் அவலங்கள் பற்றியவை, குடும்பத்தைப் பிரிந்து வாழும் தனிமனிதர்கள் மனத்துயரங்கள் பற்றியவை, கீழ் நிலைத்தொழிலாளர்களின் இரண்டும் கெட்டான் நிலை பற்றியவை. புறக்கணிப்புக்குள்ளான குழந்தைகள் பற்றியவை, இந்தக் கதைகள் வெறும் கதைகளல்ல. உயிரும்

| | |
|---|---|
| நூல் | : உயிர்க்கசிவு |
| ஆசிரியர் | : சுதாராஜ் |
| வெளியீடு | : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட் சென்னை, தமிழ்நாடு. |
| விலை | : ரூபா 1500 (இலங்கையில்) |

உணர்வும் ததும்பும் வாழ்க்கை அனுபவச் சித்திரங்கள். வாசகருடன் அவை பேசும்; மகிழ்ந்து சிரிக்க வைக்கும்; வெம்பி அழவைக்கும்; கோபத்தில் சீறவைக்கும்; வெறுப்பில் திரும்ப வைக்கும்; இன்றைய அக இருட்டில் வழிகாட்டித் தெம்பூட்டும். தடுமாறும் இன்றைய தமிழர்களைத் தோளோடு தோள் சேர்த்து வருங்காலத்துக்குள் அழைத்துச் செல்லும் நம்பிக்கை விரல்களும் அவை. மேலும் இவரது கதைகள் எதார்த்த பாணியில் அமைந்தவை'' என்ற எழுத்தாளர் பொன்னீலன் தமது கண்ணோட்டத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்.

சுதாராஜின் ஒவ்வொரு கதையிலும், ஒவ்வொரு வரியிலும், ஒவ்வொரு வார்த்தையிலும் மனிதன் மட்டுமல்ல, மற்ற உயிரினங்களின் உணர்வுத்துடிப்புகளும் வெளிப்படுகின்றன. 'உயிர்க்கசிவு' என்ற கதையில் அம்மாவைப் பற்றியும் குருவியைப் பற்றியும் கூறும் இடத்தை நோக்கும்போது உணர்வுகளின் செயற்பாடு எவ்விதம் அமைந்துள்ளது என்பதை அவதானிக்கலாம். ''உறக்கத்துக்கும் விழிப்புக்குமிடையிலான இழுபறியில் ஓரளவு கண்தூங்கும் வேளையிற்தான் அந்தக் குருவியின் குரல் கேட்கும். நிலம் விடியாத அதிகாலையிலேயே வந்திருந்து பாடும் குருவி! வெளியே இழைவிரித்து நிற்கும் மரத்துக்கு நாட்தவறாது வந்துவிடும். ஜன்னலூடு சற்று வெளிப்புத் தெரிந்தது. அம்மா ஒருகையை நிலத்திலூன்றி மறு கையால் பக்கத்திலிருந்த கதிரையைப் பிடித்தவாறு மெல்ல எழுந்தாள். படுக்கையை ஒரு பக்கமாக எடுத்து வைத்தாள். பின்னர் சுவரோரமாக இருக்கும் தனது கதிரையிற் போய் அமர்ந்துகொண்டாள். பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் எழுந்து அலுவல்களை முடித்துப் புறப்படும் வரை அந்தச் சுவரோரக் கதிரைதான் அம்மாவுக்குத் தஞ்சம். குருவி, குரலின் தொனியை மாற்றிமாற்றிப் பாடும் இனிமையை அம்மா கேட்டுக்கொண்டே இருப்பாள்.''

வயதுபோனால் குடும்பத்தவரினால் எவ்வெவ் வேளைகளில் புறக்கணிப்புக்கு உள்ளாவார்கள் என்பதை இக்கதைமூலம் ஆசிரியர் வெளிக்காட்டியுள்ளார்.

எஜமானியம்மாவின் கொடுமைக்கு உள்ளாகும் அப்பாவிச் சிறுவன், முதுகன்னியர்களின் மனக்குமைச்சல்கள், சாலையோர வாழ்க்கையின் கோலங்கள், இளமையைத் தொலைத்துவிட்டு வயது வந்தவனை இரண்டாம் தாரமாகக் கட்டிய பெண்ணின் ஏக்கப் பெருமூச்சு, காதலியால் ஏமாற்றப்பட்டு விபசாரியை நாடிச்செல்லும் இளைஞன், ஆசைநாயகியாக அழைக்கப்படும் பெண்கள், முதியோர் இல்ல முதியவர்களின் மனநிலை, ஏழை - பணக்கார நண்பர்களுக்கிடையிலான மனப்போக்குகள், குடும்பங்களின் வறுமைநிலை அவலங்கள், சீதனக் கொடுமையின் தாத்பரியம், நிறைவேறாக் காதல்கள், தொழிலாளர்களின் பரிதாப நிலை போன்ற சமுதாய மக்களின் பிரச்சினைகளை மிக நுணுக்கமாக அவதானித்து அவற்றை உள்வாங்கிக் கதைகளாகச் சித்திரித்துள்ளார் சுதாராஜ்.

பல்சமூகத்தினர் கூடிவாழும் ஜனநாயக வாழ்க்கை, வறுமையும், புறக்கணிப்பும் நசுக்குதலுமில்லாத அறவாழ்க்கை, எல்லாரும் எல்லாம் பெறுகின்ற சமவாழ்க்கை போன்ற சமூகநலன் நோக்கிய கதைகளும், யுத்தச் சூழலுக்கிடையேயும் வாழ்க்கையை முன்கொண்டு செல்லும் மனிதர்களின் சுற்றுச்சூழல்களின் இறுக்கங்களையும் பயங்கரங்களையும் வெளிப்படுத்தும் கதைகளும், இலங்கையின் இனப்படுகொலைச் சூழலைக் காட்சியாகப் பதியவைக்கின்ற - நெஞ்சை உறையவைக்கும் கதைகளும் இந்த நூலில் இடம்பிடித்துள்ளன.




சுதாராஜின் கதைகளில் சில, முடிவுகளை எடுத்துக்கூறும்பாணியில் அமைந்திருப்பதையும் அவதானிக்கலாம். ''உரமேறிய கால்களைத் தரையில் ஊன்றி அணிவகுத்து நின்ற பனைமரங்களிற்கூட ஒன்றிரண்டு குண்டு வீச்சில் மடிந்து வீழ்ந்திருந்தன. ஆனால், பக்கத்திலேயே கடுந்தரையை கற்பாறைகளின் அழுத்தத்தை உடைத்தெழுந்து செழித்து வளரும் பனைவடலிகள்'' மனிதத்தன்மையின் மீட்சியில் - வாழ்வின் வளர்ச்சியில் நம்பிக்கையூட்டும் இம்மாதிரியான வைரவரிகள் அவரின் கதைகளுக்கு உரமூட்டியுள்ளன.

''சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவராக தன்னை நிலை நிறுத்திக்கொண்ட சுதாராஜ், கடந்த நாற்பது ஆண்டுகால ஈழத்து வாழ்வின் அசைவியக்கத்தை, அதன் வரலாற்றுத் திருப்பங்களை, தனிமனித வாழ்வில், மன உணர்வுகளில் அவை ஏற்படுத்திய தாக்கங்களைத் தன் கதைகளில் அவர் பதிவு செய்திருக்கிறார். இந்தப் பதிவுகள் உணர்வு சார்ந்த, அனுபவம் சார்ந்த பதிவுகளாக அமைகின்றன. அவற்றில் பொதிந்திருக்கும் அரசியலும் அழகியலும் அவரைச் சமூகப் பொறுப்புடைய ஒரு கலைஞராக இனங்காட்டுகின்றன. மனிதர்கள் மீதும், இயற்கையின் மீதும், மிருகங்கள் மீதும் கொண்ட நேயம் நல்ல கலைஞனுக்குரிய முக்கியமான குணாம்சம் எனலாம்.'' என்று பேராசிரியர் எம்.ஏ.நுகுமான் தமது அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது பேரினவாத அத்துமீறலுக்கு எதிரான கதைகளாகக் குறிப்பிடத்தக்க கதைகள் அமைந்திருந்தபோதிலும், இன நல்லுறவின் மலர்ச்சியைக் காணத்துடிக்கும் கதைகளும் எழுதப்பட்டுள்ளன. மேலும் பல நாடுகளில் இவர் (சுதாராஜ்) பணிபுரிந்துள்ளமையினால் தமது வெளிநாட்டு வாழ்க்கை அனுபவங்கள் பலவற்றைத் தமிழ்ச் சிறுகதைக்குள் கொண்டுவந்து தமிழ்ச்சிறுகதையின் அனுபவ வலயத்தையும் சற்று விசாலப்படுத்தியிருக்கின்றார் என்பதையும் கூறியே ஆகவேண்டும். மனிதத்தை நேசிக்கும் எழுத்தாளர் தமது கதைகள் மூலமாக மனிதாபிமானத்தைக் கட்டிவளர்க்கும் பணியினை மேற்கொண்டு வெற்றியும் கண்டுள்ளார்.

*

## சங்கீதம் படிக்கப்போன கழுதையின் கதை

**பாரதியார் கதை**

**சென்றவாரத் தொடர்ச்சி**

# பிராமணப்பிள்ளை நாலு சாஸ்திரம் படித்தகதை

நான் சாகுமுன்னே உனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைத்துவிட்டுச் சாகலாமென்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். அதற்காகத்தான் பக்கத்துத் தெருச் செட்டியாரிடம் மாசம் ஒரு ரூபா சீட்டுப் போட்டுக்கொண்டு வருகின்றேன். நீ அந்தப் பெண்டாட்டியை எப்படி வைத்துக் காப்பாற்றுவாய்? சீ, நாயே, ஓடிப்போ, எங்கேனும் வடதேசத்துக்குப் போய் நாலு சாஸ்திரம் படித்துக் கொண்டு வா'' என்றாள்.

அந்தப் பையனுக்கு சாஸ்திரம் என்றால் இன்ன பதார்த்தம் என்ற விஷயமே தெரியாது. ஆனாலும் அவன் மனதில் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்ற தாகம் இருந்தது. ஆதலால் பெண்டாட்டியைக் காப்பாற்ற சாஸ்திரம் படிக்க வேண்டுமென்று தாயார் சொல்லியதைக் கேட்டவுடன் அவனுக்கு சாஸ்திரப் பயிற்சியில் விசேஷமான ஆவல் மூண்டது. அன்று பகல் சாப்பிட்டவுடனே தாயாரிடம் சொல்லிக் கொள்ளாமல் ஊரிலிருந்து புறப்பட்டு வடதிசை நோக்கிச் சென்றான். போகும் வழியில் ஒரு பனை மரம் நின்றது.

''எங்கே போகிறாய் அப்பா?'' என்று இந்தப் பிள்ளையை நோக்கி அந்தப் பனைமரம் கேட்டது. ''நான் சாஸ்திரம் படிக்கப்போகிறேன்'' என்றான். அப்பொது அந்தப் பனைமரம் சொல்லுகிறது-

அப்படியானால் நான் ஒரு சாஸ்திரம் கற்றுக்கொடுக்கிறேன்; தெரிந்துகொள்'' என்றது. பிராமணப்பிள்ளை உடன்பட்டான்.

அப்போது பனைமரம் ''நெட்டைப் பனைமரம் நிற்குமாம் போலே போலே'' என்ற வாக்கியத்தைச் சொல்லிற்று.

இந்த வாக்கியத்தைப் பையன் திரும்பத் திரும்பத் தன் மனதுக்குள் உருப்போட்டுக்கொண்டே போனான்.

அங்கே ஒரு பெருச்சாளி வந்தது. அந்தப் பெருச்சாளி இவனை நோக்கி ''அடா பார்ப்பாரப் பிள்ளாய், எங்கே போகிறாய்?'' என்று கேட்டது. ''சாஸ்திரம் படிக்கப் போகிறேன்'' என்று இவன் சொன்னான். ''அப்படியானால் நான் சாஸ்திரம் சொல்லுகிறேன்; படித்துக் கொள்'' என்று பெருச்சாளி கூறிற்று. பையன் உடன்பட்டான். ''பெருச்சாளி மண்ணைத் தோண்டுமாம் போலே போலே'' என்ற சாஸ்திரத்தை அந்தப் பெருச்சாளி சொல்லிக் கொடுத்தது. இவன் மேற்படி இரண்டு சாஸ்திரங்களையும் வாயில் உருப்போட்டுக்கொண்டே நடந்து சென்றான். வழியில் ஒரு குளம் இருந்தது. அதில் இறங்கி தண்ணீர் குடிக்கப் போனான். நடுக்குளத்தில் ஒரு கோரைப்புல் நின்றது. அது இவனை நோக்கி - ''ஐயரே, எங்கிருந்து வந்தாய்? எந்த ஊருக்குப் போகிறாய்?'' என்று கேட்டது. இவன் தன்னுடைய விருத்தாந்தங்களைச் சொல்லி ''சாஸ்திரம் படிக்கப் போகிறேன்'' என்றான். ''அப்படியானால் நான் ஒரு சாஸ்த்ரம் கற்பிக்கிறேன்; படித்துக்கொள்'' என்று கோரை சொல்லிற்று. பிராமணப்பிள்ளை உடன்பட்டான்.

''நடுக்குளத்திலே கோரை கிடந்து விழிக்குமாம் போலே போலே'' என்ற வாக்கியத்தை அது கற்றுக்கொடுத்தது. இவன் மூன்று வாக்கியங்களையும் பாராமல் சொல்லிக் கொண்டு பின்னும் நடந்து சென்றான். அங்கே ஒரு நரி வந்து அவனை நோக்கி - ''எங்கே போகிறாய்? என்ன சங்கதி?'' என்று விசாரணை பண்ணிற்று. இவன் சாஸ்திரம் படிக்கப் போகிறேன்'' என்றான்.

''ஓகோ! சாஸ்திரம் படிக்கவா போகிறாய்! நல்லது, உனக்கு நான் சாஸ்திரம் கற்றுக்கொடுக்கிறேன்; தெரிந்துகொள்'' என்று நரி சொல்லிற்று. இவன் உடன்பட்டான். ''ஆளைக் கண்டால் நரி வாலைக் குழைத்துக் கொண்டோடுமாம் போலே போலே'' என்ற வாக்கியத்தை நரி போதித்தது. இவன் ''ஆஹா! புறப்பட்ட தினத்திலே நமக்கு நாலு சாத்ரமும் தெரிந்து போய்விட்டதே. என்ன அதிர்ஷ்டமப்பா, நமக்கு; இந்த நான்கு சாஸ்த்ரத்தையும் மறக்காமல் வீட்டில் தாயாரிடம் போய்ச் சொன்னால் அவள் நமக்குக் கல்யாணம் செய்துகொள்ள அனுமதி கொடுப்பாள்'' என்று சந்தோஷப்பட்டுக்கொண்டே தன் ஊரை நோக்கிச் சென்றான். போகும் வழியில் இரவாகி விட்டது. ஊர் நெடுந்தூரத்துக்கப்பால் இருந்தபடியால் இடையே இருந்த ஒரு கிராமத்தில் அவ்விரவு தங்கி, மறுநாட் காலையில் அங்கிருந்து புறப்படலாமென்று நினைத்து, அங்கு ஒரு வீட்டு வாசல் திண்ணையிலே போய்ப் படுத்துக் கொண்டான். விடிய ஒரு ஜாமம் ஆனபோது, இவன், கண்ணை விழித்துக் கொண்டு, தான் படித்த நாலு வாக்கியங்களையும் பாடம் பண்ண ஆரம்பித்தான். அப்போது அந்த வீட்டின் கொல்லைப் புறத்தில் கள்ளர் வந்து கன்னம் வைத்துக் கொண்டிருந்தார்கள். இவன் சத்தம் போட்டுச் சந்தை சொல்லிக் கொண்டிருந்தான்.

முதலாவது - 'நெட்டைப் பனைமரம் நிற்குமாம் போலே போலே' என்றான். இவன் கூவின சத்தத்தைத் திருடர் கேட்டு ''ஓஹோ! நாம் இங்கு நிற்பதைக் கண்டு வீட்டிலுள்ளோரை எழுப்பும் பொருட்டாக எவனோ இப்படிக் கூவுகிறான்'' என்றெண்ணிப் பயந்தார்கள்.

அந்தச் சமயத்தில் இவன் - 'பெருச்சாளி மண்ணைத் தோண்டுமாம் போலே போலே' என்று கூவினான்.

இதைக் கேட்டுத் திருடர் - ''அடே! நாம் கன்னம் வைக்கிறதைக் கண்டுதான் இவன் இப்படிக் கூவுகிறான்'' என்று கை, கால் நடுங்கத்தொடங்கினார்கள்.

அப்போது இவன் - 'நடுக்குளத்திலே கோரை கிடந்து விழிக்குமாம் போலே போலே' என்று தனது மூன்றாம் சாஸ்த்ரத்தை ஓதினான்.

(தொடரும்)

# முத்தம் அன்பின் அடையாளம்



அன்பின் அடையாளம் முத்தம். முன்பெல்லாம் முத்தம் என்பது பேசக்கூடாத ஒரு வார்த்தையாகவே இருந்தது. இப்போது நிலைமை தலைகீழ்! பலரும் முத்தங்களை பரிமாறிக் கொள்கிறார்கள்.

முத்தம் பற்றி ஏ தொடக்கம் இசட் வரைக்கும் ஆராய்ச்சி செய்து விட்டார்கள். இன்னமும் ஆராய்ச்சி தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

நியூயோர்க் பல்கலைக்கழகம் அங்குள்ள மக்களிடம் முத்தம் பற்றி நடத்திய ஆய்வில் பல சுவாரஸ்யமான தகவல்கம் கிடைத்தன. அவை வருமாறு :-

* பெண்களைப் பொறுத்தவரை, அவர்கம் தங்கள் இணை உடனான முத்தங்களை வாழ்க்கையில் ஓர் அங்கமாக கருதுகிறார்கள்.

* தங்களது அன்பையும், மகிழ்ச்சியையும் முத்தத்தின் மூலமே பெண்கள் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றனர்; பகிர்ந்து கொள்கின்றனர்.

* தம்பதிகள் இடையேயான நீண்டகால உறவு பலமாக இருப்பதற்கு அவர்களுக்குள் நடைபெறும் முத்த பரிமாற்றமும் ஒரு முக்கிய காரணம். செல்போனில் நீண்டநேரம் பேச அடிக்கடி சார்ஜ் செய்வதுபோல், தம்பதியர் இடையே இணக்கமான உறவு இருக்க வேண்டுமானால் அவர்களும் அடிக்கடி முத்தம் கொடுத்துக் கொள்ள வேண்டும்.

* முத்தத்திற்கு பெண்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தை ஆண்கள் கொடுப்பதில்லை. திருமணத்துக்கு முன்பு காதலியிடம் முத்தத்தை பெற துடிக்கும் அவர்கள், திருமணத்துக்கு பிறகு, மனைவியே முத்தம் கொடுக்கத் தேடி வந்தாலும் கூட வேண்டாவெறுப்பாகத் தான் அதை ஏற்றுக் கொள்கிறார்கள்.

* ஆண்களைப் பொறுத்தவரை, செக்ஸ் உறவின் போது பயன்படுத்த தேவையான சாவியாக மட்டுமே முத்தத்தை கருதுகிறார்கள்.

* ஆண்கள், தங்கள் துணைக்கு முத்தம் கொடுக்க முன் வந்தால், அவர்களது எதிர்பார்ப்பு அவளுடன் செக்ஸ் உறவு வைக்க வேண்டும் என்பதாகவே இருக்கிறது. மற்ற மகிழ்ச்சியான தருணங்களில் அவர்கள் முத்தத்தை துணையுடன் பரிமாறிக் கொள்ள பெரும்பாலும் தவறிவிடுகிறார்கள்.

* ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள் என்பதுபோல், முத்தம் கொடுப்பதும் நாளடைவில் ஆண்களுக்கு சலித்துப் போய்விடுகிறதாம். ஆனால், பெண்கள் மட்டும் அதற்கு நேர்எதிராக இருக்கிறார்கள். முத்தத்தை புத்துணர்வு தரும் விஷயமாக அவர்கள் கருதுவதுதான் அதற்கு காரணம்.

* தாம்பத்திய உறவின்போது ஓர் ஆண் நினைத்தால், துணையை முத்தமிடாமலேயே உறவை வெற்றிகரமாக முடித்துக் கொள்ள முடியும். ஆனால், பெண்களால் அது முடியாது. அவர்கள், முத்தம் கொடுக்கக்கூடாது என்று உறுதியாக முடிவெடுத்து உறவில் ஈடுபட்டால் கூட, அதை மறந்து தங்களை அறியாமல் துணைக்கு முத்தமிட்டு விடுவார்கள்.

* தாம்பத்திய உறவில், தன் துணையை பலவாறு முத்தமிடுவதன் மூலமே அந்த உறவில் ஒரு திருப்தியான நிறைவை அவள் பெறுகிறாளாம்.

இப்படி பல்வேறு சுவாரஸ்யமான தகவல்களை அள்ளித் தந்து இருக்கிறது, இந்த அமெரிக்க ஆய்வு. ஆனால், நம் பெண்கள் எப்படி...? அவர்களின் ஆழ்மனத்திற்கு மட்டுமே அது வெளிச்சம்!

# 'நவீன யுக மனைவி'யின் அன்பைப் பெற 10 விதிகள்...

**மதியுங்கள்**

வீட்டு வேலை தவிர தங்களால் நிறைய விடயங்கள் முடியும் என்று பெண்கள் நிரூபித்து நீண்டநாட்களாகி விட்டன. எனவே, மனைவியை அவரது திறமைக்காக மதியுங்கள். புதிய விடயங்களைச் சாதிப்பதற்கு ஊக்குவியுங்கள்.

**கனவுகளைப் பின்பற்றட்டும், உங்களை அல்ல**

இன்றைய பெண்கள் இலக்கு சார்ந்தவர்களாக உள்ளனர். அவர்களுக்கு ஓர் இலட்சியம் இருக்கிறது, ஒரு கனவு இருக்கிறது. உங்களுக்காக அவர்கள் தங்கள் கனவுகளை விட்டுவிட வேண்டும் என்று வற்புறுத்தாதீர்கள்.

**எல்லை தாண்டிச் சிந்தியுங்கள்**

மனைவியை சமாதானப்படுத்துவதற்கான பழைய விதிகள் எல்லாம் காலாவதியாகிவிட்டன. புதிய யோசனைகளில், சோதனை முயற்சிகளில் ஈடுபடத் தயங்காதீர்கள். மனைவிக்குத் திடீர் ஆச்சரியம் கொடுக்கும் வழக்கத்தைக் கைவிடாதீர்கள்.

**உணர்வுகளை வெளிப்படுத்துங்கள்**

'ஆண்கள் அழமாட்டார்கள்' என்பது சரிதான். உணர்வுகளை வெளிப்படுத்தும் உணர்வுப்பூர்வமான ஆண்களையே பெண்கள் விரும்புகிறார்கள் என்பதே உண்மை. ஆனால் எதற்கெடுத்தாலும் கண்ணைக் கசக்காதீர்கள். அழுமூஞ்சி ஆண்களை பெண்களுக்கு பிடிக்கவே பிடிக்காது.

**ஆலோசனை கேளுங்கள்**

நீங்கள் ஒரு முடிவெடுக்கும்போது உங்கள் மனைவியின் ஆலோசனையையும் கேளுங்கள். அது பணத்தைப் பற்றியதாக இருக்கலாம், வேலை, தொழிலைப் பற்றியதாக இருக்கலாம். மனைவியின் கருத்தைக் கேளுங்கள், அதற்கு மதிப்புக் கொடுங்கள்.

**சமைக்கத் தெரிந்து கொள்ளுங்கள்**

நேசத்தில் மட்டுமல்ல, சமையலிலும் கெட்டிக்காரராக இருக்கும் கணவரை மனைவிக்குப் பிடிக்கும். அப்படிப்பட்ட கணவர் தான் அவர்களைப் பொறுத்தவரை 'முழுமையானவர்.'

**பேசுங்கள்**

பேசுவது பெண்களுக்குப் பிடிக்கும் என்று தெரியும். மனைவியுடன் வழக்கமான விடயங்களை மட்டுமல்லாமல், அரசியல், பொருளாதாரம், இலக்கியம் என்று பல விஷயங்களைப் பற்றியும் பேசுங்கள். உங்களின் எதிர்கால திட்டங்கள், கனவுகள், பயம் என்று எல்லாவற்றைப் பற்றியுமே பகிர்ந்துகொள்ளுங்கள்.

**மனைவியின் குடும்பத்தில் 'பங்கு கொள்ளுங்கள்'**

வீட்டுக்கு வருகிற மனைவி உங்கள் குடும்பத்தோடு ஒன்றிப்போய்விட வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். அப்படி நீங்களும் ஓர் அன்பான மருமகனாக மனைவியின் வீட்டில் அக்கறை காட்டுவது அவசியம்.

**அழகில் கவனம் செலுத்துங்கள்**



அழகு, பெண்கள் மட்டும் சம்பந்தப்பட்ட விடயம் என்று யார் சொன்னது? வெளியிடங்களுக்குப் போகும்போது உங்கள் மனைவியை வியப்பாக நான்கு பேர் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். அப்படி அவரும் எதிர்பார்ப்பது நியாயம்தானே?

**அவ்வப்போது 'வழக்கம்போல்' இருங்கள்**

எல்லாவற்றிலும் புதுமையாக இருக்க வேண்டும் என்பதில்லை. அவ்வப்போது, 'நீதான் எனக்குக் கிடைத்த மாபெரும் பொக்கிஷம்' என்று 'பழைய டயலாக்' பேசுவதில் தவறில்லை.

# வாழ்க்கை இனிக்கும்...!

'உங்கள் வாழ்க்கை சுமையாக இல்லாமல் சுவையாக அமைய வேண்டுமா? நீங்கள் உங்கள் வாழ்வில் யாரையாவது மிக முக்கிய முன்னோடி மனிதராக கருதி, அவரைப் பின்பற்றி வாழ விரும்புகிறீர்களா? அந்த முக்கியமான மனிதர் வேறு யாருமல்லர் அது நீங்கள் தான்! இதை நீங்கள் உணர்ந்தீர்களானால், உங்கள் வாழ்க்கை சுகமாக அமையும்' என்கிறார், பிரபல இந்திய முற்போக்குச் சிந்தனையாளர் சித்ரா ஜா. தொடர்ந்து அவரது சிந்தனைக் கருவூலங்கள் உங்கள் கவனத்திற்கு...


'நான் நல்லவனா?' இந்தக் கேள்வியை உங்களுக்குள்ளே அடிக்கடி கேட்டுக் கொள்ளுங்கள். 'உங்களுக்குள் இருக்கும் சுயநலம் தான் உங்களை உங்களிடமிருந்தே தூரமாக்குகிறது!' என்பதை நீங்கள் விடையாகக் கொண்டால், அந்த எண்ணம் உங்களை முதிர்ச்சியுற்ற பண்பாளனாகப் பரிமளிக்கச் செய்யும்.

எந்த ஓர் அர்த்தமற்ற பொருளையும் பிறரிடமிருந்து எதிர்பார்த்து நிற்கும் எண்ணத்தை மாற்றி அமையுங்கள்! இலவசம் இனிது என்ற சிந்தனை உங்களை இன்னொருவரை நம்ப வாழும் நிலைக்குத் தள்ளிவிடும்.

சிலர் தங்களால் முடிகிற காரியத்தை செய்ய முயலாமல் நொண்டிச்சாக்கு சொன்னால், அதை ஏற்றுக் கொள்ளாதீர்கள். அவ்வாறே உங்களிடமும் எந்த ஒரு காரியத்திற்கும் நொண்டிச்சாக்கு சொல்லும் பழக்கம் இருந்தால், அதைக் கைவிடுங்கள்!

வாழ்க்கைப் போக்கில் சில தடைகள் உங்களை மேற்கொள்ளப் பார்க்கலாம். தடைகளைத்தாண்டி வாழ்க்கையை முன்நடத்திச் செல்லக் கற்றுக் கொள்ளுங்கள்!

நீங்கள் அறிந்தோ, அறியாமலோ செய்த ஏதாவது ஒரு சிறு குற்றத்துக்காக உங்கள் மனதை வீணாக அலட்டிக் கொள்ளாமல் சுதந்திரமாக செயல்படுங்கள்.



உங்களை நீங்களே குறைத்து மதிப்பிட்டு மனதை வருத்திக் கொண்டிருக்காதீர்கள்.

உங்கம் முயற்சி அல்லது முயலாமை குறித்து அதிகநேரம் சிந்தித்து காலவிரயம் செய்யாதீர்கள்.

'ஒரு காரியத்தை செய்து முடித்தபிறகு அதை அப்படிச் செய்திருக்கலாமே... இதை இப்படிச் செய்திருக்கலாமே..!' என்று மாறிமாறி சிந்தித்து, குழம்பக் கொண்டிருக்காதீர்கள்.

உங்கள் ஒவ்வொரு செயலுக்கும் அதன் விளைவுக்கும் நீங்கள்தான் பொறுப்பு என்பதில் தெளிவாயிருங்கள். ஏதேனும் தவறு நேர்ந்தால் நீங்களே பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். பிறர் மீது பழிபோடும் பழக்கத்தைக் கைவிடுங்கள்.

உங்கள் வாழ்வில் உங்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு நல்ல சந்தர்ப்பத்தையும் நழுவ விடாமல், அதனை முழுமையாகப் பயன்படுத்துங்கள்.

கடந்த கால சிந்தனைகளில் அதிக நேரம் ஆழ்ந்து விடாமல் நடப்பு விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். அவை நல்லபடியாக நடப்பதற்கு, முழுக்கவனத்துடன் செயல்படுங்கள்.

முன்னேற்றம் பற்றியே எப்போதும் சிந்தியுங்கள். சிலநேரங்களில் ஏற்படும் எதிர்மறையான விளைவுகளைக் கண்டு ஒருபோதும் பின்னோக்கிப் போய்விடாதீர்கள்.

அறிந்தோ, அறியாமலோ யாருக்காவது உங்களால் சிறு தீங்கு நடந்திருந்து அதற்காக மன்னிப்பு கேட்கவேண்டும் என்று நினைத்தால், அதை உடனே கேட்டு விடுங்கள். அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போடாதீர்கள்.

உங்கள் வாழ்வில் நிகழும் எல்லா செயல்களுக்கும் நீங்கள்தான் காரணம் என்பதைப் பகுத்துணர்ந்து கொள்ளுங்கள். பிறர்மீது பழிபோடுவது முட்டாள்தனமானது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

சந்தேகம் ஏற்படுகிற காரியங்களில் 'நாம் செய்வது சரிதானா? சரியாகத்தான் போய்க் கொண்டிருக்கிறோமா?' என்பதை சுயபரிசோதனை செய்து கொள்ளுங்கள். *

# நெத்திலிக் குழம்பு

தேவையானவை

நெத்திலி மீன் - 1/4 கிலோ
சின்ன வெங்காயம் - ஒரு கை அளவு
தக்காளி - 3
மஞ்சள் தூள் - அரை டீஸ்பூன்,
மிளகாய்த் தூள் - 2 டீஸ்பூன்
தனியா தூள் - 3 டீஸ்பூன்
புளி - ஒரு எலுமிச்சை அளவு
எண்ணெய் - ஒரு குழிக்கரண்டி,
கடுகு - ஒரு டீஸ்பூன்,
காய்ந்த மிளகாய் - 2
கறிவேப்பிலை - ஒரு கொத்து
வெந்தயம் - ஒரு டீஸ்பூன்
உப்பு - தேவைக்கேற்ப

செய்முறை

நெத்திலியை சுத்தம் செய்து. எண்ணெய் விட்டு கடுகு, கறிவேப்பிலை, வெந்தயம் ஆகியவற்றை தாளிக்கவும்.

வெங்காயத்தை பொன் முறுவலாக வதக்கிட்டு, தக்காளியையும் போட்டு வதக்கவும்,

பிறகு புளியைத் தேவையான அளவு தண்ணீரில் கரைத்து ஊற்றி, உப்பு போடுங்கள்.

குழம்பு நன்றாகக் கொதிக்கும் போது, கழுவி வைத்திருந்த நெத்திலி மீன்களைப் போட்டு, மீனில் குழம்பு சேர்ந்ததும் இறக்குங்கள்.




காலையில் வைத்த குழம்பை இரவு சாப்பிட்டுப் பாருங்கள், உலகத்தையே எழுதித் தருவீங்கள்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 438

சொற்சிலம்பம் 438 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித்தினம் 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒக்டோபர் 31 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 436 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி' 85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

### சொற்சிலம்பம் போட்டி இல. 438



### சொற்சிலம்பம் போட்டி இல. 438

**இடமிருந்து வலம்**
1. கதையின் பாத்திரம் 6. ஊட்டம்
7. மன ஈடுபாடு கொள். 9. சாப்பாடு
10. நளன் இவனோடு சூதாடி அனைத்தையும் இழந்தான்.
11. தேசத்தின் 12. பருகச் செய்து வை. 15. தாண்டு
16. பொறுப்பு/பணி 17. உள்ளம் 19. களவு
20. தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி
21. தோழன்

**மேலிருந்து கீழ்**
1. கண் தெரியாதவன் 2. அடிமை/ ஊழியக்காரன்
3. மிடா/ சோறு சமைக்கப் பயன்படுத்துவது
4. சேர்த்து வை 5. ரசிப்பவன் 8. இளம்பெண்
11. விருப்பம் 13. ஆகாயம்
14. பாடுவதைத் தொழிலாகக் கொண்டவன்
17. மயக்கமூட்டும் பாணம்
18. பார்ப்பதற்கு உதவும் உறுப்பு




### பரிசு பெறுவோர்

1. **திருமதி எஸ். ரெஜினோல்ட்,**
262, பதுளை வீதி,
பண்டாரவளை.

2. **திருமதி எஸ். பாக்கியநாதன்,**
பொது நூலகம்,
வவு/ தெற்கு தமிழ் பிரதேசசபை

3. **பொ. நமசிவாயம்,**
பாண்டிதமணி இல்லம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

### பாராட்டுப் பெறுவோர்

- சி. கிருஷ்ணவேள், வவுனியா.
- எஸ். எல். பாவனந்தன், நீர்வேலி.
- வே. கார்த்திகேசு, வாழைச்சேனை.
- சந்திராணி தங்கத்துரை, பெரிய நீலாவணை-01.
- பீ. ஜேசுரத்தினம், தெஹிவளை.
- இந்திமதி வடிவேல், செங்கலடி.
- திருமதி. தி. சிதம்பரநாதன், கோப்பாய் தெற்கு.
- க. சகீலா பேகம், ஏறாவூர்-03.
- திருமதி மதனிகா நடராஜா, தெஹிவளை.
- திருமதி யோகா சிவப்பிரகாசம், கொக்குவில்.
- கே.எம்.எஸ். ஆட்தீன், புத்தளம்.




**பாலமனோகரன்,**
**கோப்பாய்.**
**கேள்வி:** மிதமிஞ்சிய நம்பிக்கை எதில் போய் முடியும்?
**பதில்:** தலைகுப்புற விழுவதில்.

**அரவிந்தன்,**
**புலோலி.**
**கேள்வி:** நாத்திகம் மதிப்பிழந்து போகக் காரணம் என்ன?
**பதில்:** நாத்திகத்தைப் போதித்த மதங்களைப் பின்பற்றும் மக்களே தமது மனவெறுமையை பூரணப்படுத்திக்கொள்ள கடவுள்களைக் கற்பித்துக் கொண்டிருக்கும்போது சில்லறைகளைப் பற்றி என்ன பேச்சு?

**சிவநேசன்,**
**பண்டாரவளை.**
**கேள்வி:** ஒரு கட்சியினூடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் பின்னர் அரசின் பக்கம் சார்வாரானால் அவரை எப்படி அழைக்கலாம்?
**பதில்:** சுயநலப் பச்சோந்தி.

**சிவகாமி பார்வதி,**
**கல்கிசை.**
**கேள்வி:** கஷ்மீரில் அமைதி நிலவ இந்தியாவோ பாகிஸ்தானோ என்ன செய்ய வேண்டும்?
**பதில்:** இந்தியாவினதோ பாகிஸ்தானினதோ தலையீடின்றிச் சுதந்திர நாடாக இருக்க வேண்டும் என்பதே இந்த மாநிலத்தைச் சேர்ந்த மக்களின் ஏகோபித்த அபிப்பிராயம் என்று அண்மையில் நான் சந்தித்த கஷ்மீர் மாணவர் குழாம் ஒன்று தெரிவித்தது.

**பரந்தாமன்,**
**கிளிநொச்சி.**
**கேள்வி:** பிரதான கட்சிகளுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளால் இனப்பிரச்சினைத் தீர்வு சாத்தியம் அற்றதாகிப் போய்விடுமோ என்ற அச்சம் நிலவுகிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?
**பதில்:** எதிர்க் கட்சிகள் பலம் குன்றி, அந்திவாரங்கள் ஆட்டம் கண்டுகொண்டிருக்கின்ற நிலையில், அதீத பெரும்பான்மைப் பலம் பெற்றுள்ள அரசாங்கத்துக்கு இதனைத் தீர்க்கும் சக்தி நிச்சயமாக இருக்கின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது. அரசாங்கமும் தமிழர் தரப்பும் இணக்கம் கண்டால் இந்த நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும். அரசியல் அமைப்புத் திருத்தங்களுக்கே அங்கீகாரம் பெற்றுக்கொண்ட அரசாங்கம், உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் எதிர்கட்சிகள் சம்மதத்தைப் பெற்றுத்தான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று சொல்வதாக இருந்தால் அது வெறும் சாக்குப் போக்கே ஆகும்.

ஜனாதிபதி அவ்விடயம் தொடர்பாக உலக நாடுகளின் நெருக்கடிக்கு முகம் கொடுத்திருப்பதால், சம்பந்தப்பட்ட இரு தரப்புகளும் இணக்கமான ஒரு முடிவுக்கு வந்தால், அது ஜனாதிபதியின் பெயரை வரலாற்று ஏட்டில் பொன் எழுத்துக்களால் பொறிக்கச் செய்துவிடும்.

**நெல்சன்,**
**கண்டி.**
**கேள்வி:** பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளின் முகாம்களை அந்நாடு நிர்மூலமாக்காது விட்டால் அமெரிக்கா நேரடியாகத் தலையிட்டு தரைப் படை மூலம் தாக்குதல் நடத்தும் என அமெரிக்க இராணுவத் தளபதி எச்சரிக்கை செய்திருக்கிறாரே?
**பதில்:** உலக நாடுகளின் இறைமையையும் சமத்துவத்தையும் பாதுகாக்கும் பணியைச் செய்ய வேண்டிய ஐ.நா. சபை, அமெரிக்காவின் கைப்பொம்மையாக இருப்பதால் அமெரிக்கா ஒரு தலைப்பட்சமாக வியட்நாம், ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளுக்குள் நுழைந்து பேயாட்டம் ஆடி, லட்சக்கணக்கான பொது மக்களை படுகொலை செய்துள்ளது. ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்திருக்கின்றது. ஆனால், ஒன்பது ஆண்டுகள் கடந்தும் அமெரிக்காவால் தலிபான்களையோ, அல்கொய்தா தீவிரவாதிகளை அடக்கி ஒடுக்க முடியவில்லை. இவர்கள் எதற்காகப் போராடி வருகிறார்கள் என்பது பற்றி அமெரிக்கா ஒருபோதும் சிந்திப்பதில்லை. என்றாலும் தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதில் அமெரிக்காவுக்கு இன்னமும் வெற்றி கிட்டியதாகத் தெரியவில்லை. முட்டி மோதி மூக்குடைத்துக் கொண்டு திரும்பி ஓடுவதுதான் அமெரிக்காவின் வழக்கம் என்று பரவலாகப் பேசப்படுதற்கு அமெரிக்காவின் இந்தப் 'பலவீனம்' தான் காரணம். அதற்குள் பாகிஸ்தானிலும் தனது படைப் பலத்தைப் பிரயோகிக்கப் பார்க்கிறது!

**சாந்தன்,**
**பம்பலப்பிட்டி.**
**கேள்வி:** ரொயிட்டர், ஏ.எஸ்.பி.,சி.என்.என். போன்ற செய்தி நிறுவனங்கள் எல்லாம் உண்மையான செய்திகளைத் தான் உலகிற்கு வழங்குகின்றனவா?
**பதில்:** இல்லை. தமது மூலோபாயங்களுக்கு ஏற்றவாறு மாற்றியும் திருத்தியுமே அவை செய்திகளை வெளியிடுகின்றன என்பது இன்று உலக நாடுகளுக்கு வெட்ட வெளிச்சம் ஆகிவிட்டது. அதனால் பெரும் எண்ணிக்கையானோர் இவற்றை ஒதுக்கித் தள்ளிவிட்டு, உண்மையான செய்திகளை உள்ளபடி வழங்கும் அல்ஜெசீரா தொலைக்காட்சியின் பக்கம் திரும்பிக் கொண்டிருக்கின்றனர் என புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

**குமாரன்,**
**வவுனியா.**
**கேள்வி:** கட்சி விட்டு கட்சி மாறுவதில் யாருக்கு நஷ்டம்?
**பதில்:** கட்சி மாறியவருக்கு எத்தனையோ லாபங்கள், சிறப்புமைகள். கட்சிக்கு முன்னுரிமை கொடுத்து கட்சி அபேட்சகராகத் தெரிந்தெடுத்தவர்களுக்கே நஷ்டம். அப்படி மாறியவர் முதலில் கட்சிக்கும் அடுத்து தன்னை நம்பி வாக்களித்த மக்களுக்கும் மாபெரும் துரோகம் இளைத்தவர் ஆகின்றார். எமது நாட்டின் ஜனநாயகம் பண நாயகத்தை நோக்கமாக் கொண்டு மாறிக் கொண்டிருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

**கண்ணன்,**
**இணுவில்.**
**கேள்வி:** இத்தாலி, பாரிஸ், ரோம் ஆகிய நாடுகளில் பொன்சேகாவை சிறைத் தண்டனையில் இருந்து விடுவிக்கக் கோரி நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் மூலம் ஏதாவது பயன் ஏற்படுமா?
**பதில்:** இந்த ஆர்ப்பாட்டங்கள் மூலம் முன்னாள் இராணுவத் தளபதியின் திறமை, புகழ், வழிநடத்தல் என்பன உலகளாவிய ரீதியில் பேசப்படும் நிலை உருவாகும். அவருக்காக மாபெரும் அனுதாப அலை ஒன்று தோற்றம் பெறும். இவற்றின் முடிவு, உலக நாடுகளின் பார்வையில் ஒருவர் 'குட் புக்'கிலும், பலர் 'பாட் புக்' கிலும் போய்விடும் சாத்தியம் ஏற்படக்கூடும்.

**பொன்னம்பலம்,**
**கோண்டாவில்.**
**கேள்வி:** முதுமையில் ஆதரிப்பார் இன்றி கைவிடப்படுவேனா என்ற ஆதங்கத்திலிருந்து தப்புவதற்கு வழி என்ன பித்தரே?
**பதில்:** குடும்பத்தினரோடு அன்போடும், பரிவோடும் நடந்துகொள்ளும் அதே நேரம், முதுமையின் போது உங்களைக் காப்பாற்றக் கூடிய வகையில் நியாயமான ஒரு தொகைப் பணத்தைச் சேமிப்பாக வைத்திருங்கள். அனைவரும் உங்களைக் கைவிடும் பட்சத்தில் அது மற்றவர்கள் முன்னிலையில் தலை நிமிர்ந்து நிற்பதற்கு உங்களுக்கு உதவும்.

**பரசீகரன்,**
**வெள்ளவத்தை.**
**கேள்வி:** ஒவ்வொரு மனிதனுக்கும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம், ஒரு சிறு பொறியாகவேனும் இருக்கும். ஆனால், ஏன் எல்லா மனிதர்களாலும் சாதிக்க முடியவில்லை?
**பதில்:** சாதனை வேட்கை என்னும் சிறு பொறியை உழைப்பு என்ற காற்று ஊத வேண்டும். அதை நேரமும் காலமும் வளர்க்க வேண்டும். இவற்றின் ஒத்துழைப்பு இருந்தால் தான் உயர முடியும். பெற்ற வெற்றியைப் பேணிக்காக்க, உழைப்பு என்ற நீரைத் தொடர்ந்து ஊற்றிக் கொண்டே இருக்க வேண்டும்.

**அரவிந்தன்,**
**வல்வெட்டித்துறை.**
**கேள்வி:** பெண்கள் கண்ணீர் விட்டு காரியம் சாதித்துக் கொள்கிறார்கள். ஆண்கள் எப்படிச் சாதித்துக் கொள்கிறார்கள்?
**பதில்:** அதற்காகத்தானே புராண காலந்தொட்டு பெண்களை மானே, மயிலே, குயிலே என்று வர்ணிக்கும் வழக்கம் இருந்து வருகிறது.

**கே. சகுந்தலாதேவி,**
**வத்தளை.**
**கேள்வி:** மனைவியருக்கு கணவர் மேல் இருக்குமளவு பாசம் கணவர்களுக்கு மனைவி மேல் இருப்பதில்லையே ஏன்?
**பதில்:** அப்படிச் சொல்ல முடியாது. ஆண்கள் வெளியே காட்டிக்கொள்வதில்லை. மனைவி மறைந்த பிறகு தவிக்கும் ஆண்களைப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம். பெண் என்னும் தாய்மை அவர்களுக்குத் தொடர்ந்து தேவையாக இருக்கிறது. ஆனால், பெண் அந்த வகையில் ஆச்சரியப்படக் கூடிய மனோதிடம் கொண்டவள்.

# இரண்டு மொட்டுக்கள் விரிகின்றன

யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம்பெற்ற சம்பவங்களைப் பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்தத் தொடரில் யோ.புரட்சி எழுதிய 'இரண்டு மொட்டுக்கள் விரிகின்றன' என்ற உண்மைக்கதையின் பாகம் ஒன்று வெளிவருகிறது.

01

யோ.புரட்சி

''இஞ்சை வாடா கண்ணா.... புடிச்சு தலையில குட்டி விட்டுருவன். என்ன செய்தனீ இவ்வளவு நேரம்...''

''சித்தி தங்கச்சி ரொய்லெட்டுக்கு போனவா அதுதான்...''

''கண்டறியாத ரொய்லெட். போய் குழாய் பம்பில தண்ணி எடுத்திட்டு வா. இருக்கிற ரெண்டு புள்ளைகளோட நான் படுற பாட்டில இதுகள் வேற. முள்ளிவாய்க்காலிலையே, ஒன்டு நீங்கள் போய்ச் சேர்ந்து இருக்க வேணும். அல்லது நான் போய்ச் சேர்ந்திருக்க வேணும் ச்...சீ''

கண்ணாவை பேசிவிட்டு தன் வாய்க்குள் முணு முணுத்துக்கொள்கிறாள் சித்தி ஜீவராணி. ஐ.சி.ஆர்.சி நிறுவனம் கொடுத்த அந்த பத்து லீற்றர் தண்ணீர்க்கானை எடுத்துக் கொண்டு தண்ணீர் எடுக்க கண்ணா போய்க் கொண்டிருக்கும்போதே கண்ணாவின் இரண்டரை வயது தங்கை நிரோசா மலம் கழித்து விட்டு வந்தாள். ''சித்தி...'' என செல்லக்குரலில் அழைத்தாள் நிரோசா. ''பொறு அண்ணா வருவான்...'' அடுப்பை எரித்தவாறே சித்தி ஜீவராணி சொல்லிக்கொண்டாள்.

பத்து லீற்றர் நீர்க்கானை தனது தோளிலே சுமந்தபடி வருகிறான் கண்ணா. அவனின் அந்த ஊத்தையான ரீசேட்டில் நீர்வடிந்து கொள்கிறது. வழமையாகவே நீர் எடுப்பவன்தானே, களைப்புத் தெரியல்லை. மலம் கழித்து விட்டு வந்து நின்ற தங்கை நிரோசாவைக் கண்டுவிட்டான் கண்ணா. அவள் தன் சட்டையை உயர்த்தியவாறு நிற்கிறாள். ''நிருபாரு அண்ணாச்சி வாறன்'' என சொல்லியவாறே கானை இறக்கினான்.

மெனிக்பாம் அருணாச்சலம் நலன்புரி முகாம் அது. பதினொரு வயது கண்ணாவும், இரண்டரை வயது தங்கை நிரோசாவும் இப்போது வாழ்வது அவர்களின் சித்தியின் தயவில்தான். சித்தி ஜீவராணி இவர்களின் தாயின் ஒன்றுவிட்ட சகோதரி. சித்தப்பா இராஜகுலரட்ணம் நேரியகுளத்திற்கு மேசன் வேலைக்குப் போய்விட்டார்.

* * * * *

''வடை...வடை...வடை...வடேய்...'' சத்தமிட்டபடியே முள்ளிவாய்க்கால் காளியம்மா கோயில் தெருவோடு போகிறான் கண்ணா. இப்போது அவன்தான் குடும்பக் காவலன். அம்மா சுட்டுத்தரும் வடைகளை விற்பதுதான் அவன் வேலை. முள்ளிவாய்க்கால் பிரதான சந்தியிலிருந்து தெற்குப் பக்கமாக நானூறு மீற்றர் வரையான தூரத்திலே காளியம்மா கோயில் இருக்கிறது. முன்பு இந்தக் கோயிலுக்கு அருள்வாக்கு சொல்லும் காளியம்மாவிடம் நிறைய மக்கள் தொடராக வருவதுண்டு. ஆனால், இன்று அந்த இடம் அளவற்ற மக்கள் நெரிசலால் நிரம்பி விட்டது. மழைத்துளிகள் வீழ்ந்தாலும் அவை நேரடியாக நிலத்தில் படுவது குறைவாகத்தான் இருக்கும். அந்தளவிற்கு கூடாரங்கள். கூடாரங்களின் இடையிடையே காயப்பட்ட மக்களைப் பராமரிக்கும் இடங்கள். கூடாரங்களை அண்டியும், காயப்பட்டவர்கள் இருக்கும் இடங்களிலும் சென்று, வடைகளை விற்பதுதான் கண்ணாவின் தொழில். சிறிய ஒரு சிவப்பு வாளியில்தான் வடைகளை கண்ணா கொண்டுபோவான்.

கண்ணாவுக்கு இப்போது பத்து வயது ஆகிறது. தாய் யோகேஸ்வரியும், தங்கை நிரோசாவும் வீட்டிலே இருக்கிறார்கள். குடும்பத்திலே மூவரும்தான். பிறப்பிலேயே ஒரு கால் போலியோவை ஒத்த ஓர் தாக்கத்திற்கு உட்பட்டு இருந்ததனால் தாய் யோகேஸ்வரி ஒரு ஊன்றுகோலின் துணையுடன்தான் நடப்பாள். ''ஏனப்பா கண்ணா, நிவாரணத்துக்கு பருப்பு கொடுக்கிறாங்களாம். புள்ளை நேரத்துக்கே போய் நிண்டு எடுத்திட்டு வந்தியென்டா வடைக்கு பிரச்சினை இராது. மிளகும் கிடக்குதுதானே...'' அம்மா சொன்ன போது ''ஓம் அம்மா... அந்த பழைய லக்ஸ்பிறே பையைக் கொண்டுபோய் எடுத்து வாறன் என...'' என்று சொல்லியவாறே காளியம்மா கோயில் எதிரே உள்ள நிவாரணம் வழங்கும் இடம்நோக்கிப் போக தயாராகிறான் கண்ணா. அங்கே உளுந்து வடை, பருப்பு வடை, கீரை வடை, ஸ்பெஷல் வடை என விதவிதமான அயிட்டங்கள் இல்லை. மைசூர் பருப்பினைவிட சற்று பெரிதான துவரம் பருப்பில்தான் வடை. சுவைக்காக உப்பும், அதன் காரத்தன்மைக்காக இடிக்கப்பட்டமிளகுதூளும் சேர்க்கப்படும். சாதாரண தேசிக்காய் அளவிலே வடை இருக்கும். ஒன்று இருபது ரூபாய்.

அன்றைய நிலையிலே அந்த வடையைப் பெற்றுக்கொள்வதே பெரிய விசயம்தான். கொஞ்ச நாட்களுக்கு முன்பு வலைஞர்மடம் பகுதியில் இருந்தபோதிலே வாய்ப்பனும் சுட்டு, கண்ணாவிடம் விற்கக்கொடுப்பாள் யோகேஸ்வரி. ஒரு வாய்ப்பன் ஐம்பது ரூபா. பிசைந்த கோதுமை மா, மரக்கறி எண்ணெயில் இடப்பட்டு சுடப்படும். வாழைப்பழம் எதுவும் இல்லை. இப்போது இரண்டாயிரம் ரூபா ஒரு கிலோ மாவின் விலை. எப்படி வாய்ப்பன் போடுவது. பருப்பின் துணைகொண்டு வடை. வடை விற்பதனால் வரும் சிறு காசுமூலம் அரை கிலோவோ, ஒரு கிலோவோ அரிசி வாங்கிச் சீவியத்தை ஓட்ட வேண்டியதுதான்.

பரந்தன் பகுதியை அண்டி கோரக்கன்கட்டு என்று ஒரு கிராமம். விவசாயமும் கூலித்தொழிலும் அவர்களின் பிரதான தொழில்கள். பரந்தனில் இருந்து முல்லைத்தீவு வீதியிலே இடதுபுறமாக இருந்த இந்தக் கிராமம்தான் சின்னத்தம்பியின் வாழ்விடம். சிறு வயதிலேயே கல்வியை இடைநிறுத்திய சின்னத்தம்பி, மேசன் தொழிலைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பழகி அந்த தொழிலையே தன் நிரந்தர தொழிலாக்கிவிட்டான். ஒரு தடவை முரசுமோட்டைப் பகுதிக்கு மேசன் வேலைக்குச் சென்றபோது சிறிய மரக்கறிக் கடையிலே மரக்கறி வியாபாரம் செய்துகொண்டிருந்த யோகேஸ்வரியை சின்னத்தம்பி முதன்முதல் சந்தித்தான். அவள் ஒருகால் இயலாதவள் என்று தெரிந்தும், அவள் தனது அப்பா அம்மாவைப் பார்க்கவே மரக்கறி வியாபாரம் செய்கிறாள் என்பதை அறிந்தும் அவள்மீது இரக்கம் கொண்டான். இது காதலா? அன்பா அவனுக்குத் தெரியாது. யோகேஸ்வரியின் சிறிய ஊனம் அவளின் திருமணத்திற்குப் பெருந்தடையாக இருப்பதை அறிந்த சின்னத்தம்பி, அவனின் பெற்றோர் சம்மதம் பெற்று யோகேஸ்வரியை மனைவியாக்கிக் கொண்டான். ஆடம்பர திருமண வீடு எதுவும் நடக்கவில்லை. சில உறவினர்களின் முன்னிலையில் தாலி கட்டிய சம்பிரதாய திருமணம்.

ஓலை வீடெனிலும் ஏழை வீடெனிலும் சந்தோசத்தில் வசதிக்கு குறைவு இருக்கவில்லை. யோகேஸ்வரியை தாய் போலவே பார்த்துக்கொண்டான் சின்னத்தம்பி. 1998 இலே திருமண வாழ்க்கையில் நுழைந்து இன்பமாகவே நகர்ந்துகொண்டிருந்த அவர்களின் வாழ்க்கைப்படகு யுத்த சூறாவளியால் திசை திரும்பியது. கிளிநொச்சியில் இடம்பெற்ற பாரிய யுத்தத்தின் பின்னர் மிக விரைவாகவே கோரக்கன்கட்டு மக்களும் இடம்பெயர்ந்தனர். கால் ஒன்று ஊனமான யோகேஸ்வரி மற்றும் பிள்ளைகள் கண்ணா, நிரோசா ஆகியோரைத் தன் துவிச்சக்கர வண்டியில் ஏற்றி குறிப்பிட்ட சிறுதொகைப் பொருட்களோடு பயணம் தொடர்ந்தான் சின்னத்தம்பி. மூவரையும் ஏற்றிய துவிச்சக்கர வண்டியை உருட்டியபடியே அந்த இடப்பெயர்வு. முதலில் றெட்பானா மாணிக்கபுரம், பின்பு இருட்டுமடு, பின்பு சுதந்திரபுரம்.

சுதந்திரபுரம் பகுதியிலே முப்பெருந்தேவியர் கோயிலடிக்குச் சற்றுத்தள்ளி இருந்த தென்னந்தோப்போடு ஒரு கொட்டில். முன்பு தென்னைக் காவலுக்கு இருந்தவர் பயன்படுத்தும் கொட்டில் அது. அந்த காவல்காரர் ஏற்கனவே எறிகணை வீச்சில் கொல்லப்பட்டு விட்டார். அந்த இடத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கூடாரங்கள் அமைத்து குடியேறிவிட்டார்கள். சின்னத்தம்பி குடும்பத்திடம் தறப்பாள் எதுவுமே இல்லாததால் ஏதோ அதிர்ஷ்டம் அடித்தது போல இந்தக் கொட்டிலில் சரண்புகுந்தார்கள்.

இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு ஜனவரி மாதத்தின் இறுதிப்பகுதி. ''யோகா... உடையார்கட்டு டவுனோட ஒரு லொறியில செல் விழுந்து நிறைய பால்மா பைக்கட், சமன்ரின் எல்லாம் சும்மா கிடக்குதாம். புள்ளைகளை அங்க இங்க விடாமல் பார்த்துக்கொள்ளுங்கோ. நான் வேகமா போய் சைக்கிளில் கொஞ்சம் கட்டிட்டுவாறன்...'' யோகேஸ்வரிக்கு சொன்ன சின்னத்தம்பி தன் சைக்கிளில் உடையார்கட்டு புறப்பட்டான். பல கூடாரங்ளைச் சேர்ந்த பலர் ஒன்றாக சென்று பால்மா உள்ளிட்ட பலவிதப் பொருட்களைக் கட்டிக்கொண்டு குறுக்கு வீதி ஒன்றினூடாக விரைந்தார்கள். உடையார்கட்டு சிறுநகருக்கு சற்றுத்தள்ளி இருந்த தேவாலயத்தினைக் கடக்கும்போது எதிர்பாராமல் வீழ்ந்த எறிகணையொன்றிலே துவிச்சக்கரவண்டியை ஓட்டிவந்த சின்னத்தம்பியும் சிக்குண்டான். அவன் மட்டுமல்ல அவனோடு சமமாக துவிச்சக்கரவண்டி ஓட்டிவந்த தர்மபுரம் ராசனும் அந்த இடத்திலேயே பலியானான். நீலநிறக் கன்ரர் ஒன்றிலே பொருட்கள் கட்டப்பட்ட இரத்தம் படிந்த துவிச்சக்கரவண்டியும், சின்னத்தம்பியின் சிதைந்த உடலும் தென்னந்தோப்பிலே இருந்த அந்த காவல்கொட்டில் வசிப்பிடம் நோக்கி வந்தது.



ஒன்றரை வயது நிரோசாவும் மூத்தபிள்ளை கண்ணாவும் இல்லாமல் இருந்திருந்தால் யோகேஸ்வரிக்கு தற்கொலை தவிர வேறு முடிவின்றிப் போயிருக்கும். பிள்ளைகளுக்காக கல்லாக்கினாள் மனதை. தனிமையும், வறுமையும், யுத்தக் கொடுமையும் ஒன்றாகச் சேர்ந்து யோகேஸ்வரியை வதைத்தது. சுதந்திரபுரம் இருந்து இடம்பெயர்ந்து தேவிபுரம், இரணைப்பாலை, அம்பலவன், பொக்கனை, வலைஞர்மடம் என நகர்ந்து இப்போது முள்ளிவாய்க்கால் காளிகோயிலடிக்கு வந்துவிட்டார்கள்.

* * * * *

(தொடரும்)

# தண்டனை

இயற்கை செய்யும் செயல்களால்
இழப்பு தனையே பாருங்கள்
துயரில் மனிதர் சோர்ந்திங்கு
துவண்டு போகச் செய்கிறது
புயலை மழையைக் கட்டவிழ்த்து
புவியில் அழிவைத் தருகிறதே
முயன்று அழிவைத் தடுப்பதற்கு
முடிய வில்லை என்செய்வோம்?

காற்று சுனாமி சூறாவளி
ககனம் பிளக்கும் மின்னலிடி
ஆற்று வெள்ளம் காட்டுத்தீ
அகிலம் அழிக்கும் விந்தைதான்
சீற்றம் கூற்றம் ஆகியே
சிதைப்பு வதைப்பு இம்மண்ணில்
மாற்றம் ஏற்றம் உருவாகி
மனிதர் உய்ய வழிவேண்டும்!



நிலமும் நடுங்கி ஒடுங்கியே
நிலைகு லைந்து போகுதுகாண்
நலமாய் உயிரும் பயிர்களும்
நிலத்தில் ஓங்கும் நிலைவேண்டும்
வளமாய் உள்ள வாழ்வதும்
வாடி உதிர்தல் வேதனை
பலமாய் இயற்கை அனர்த்தத்தை
பாரில் தடுப்ப தெப்படியோ?

வறுமை மிடிமை பயங்கர
வாதம் அழிப்பு உயிரிழப்பு
சிறுமை யோடு இயற்கையின்
சீற்றம் கூடி ஆர்ப்பரித்தால்
வெறுமை எங்கும் குடிகொள்ளும்
வைய கந்தான் பாழ்படுமே
உறுத்தும் துயரில் நாம்உழன்று
இறையின் கோபம் என்பதா?

**- வி.எம். அன்ஸார் -**
**கிண்ணியா.**

# விளைவுகள்


மண்கிளறி பசளை இட்டு
மாறிமாறி நீரும் பாய்ச்சி
விதைத்துநாம் விளைவு கிட்டும்
விருந்துவரும் என்றி ருந்தோம்!

முண்டகண்ணோ மூளிக் கண்ணோ
எக்கண்தான் பட்ட துவோ
கிண்டக்கிண்ட எங்கள் புலத்தில்
எலும்புவெடி அறுவ டைகாண்!

வன்னிப்போர் கருவாய்ப் பூக்க
வருகின்றார் வழங்கு கின்றார்
பன்னீராய் உறுதி அரிசி
பருப்பொடு படுக்கை பண்டம்!

பலகோணப் படப்பி டிப்பு
பறைசாற்றும் விளம்ப ரங்கள்
அவங்கோலம் எடுத்து ரைக்கும்
அதிகாலைச் செய்தித் தாள்கள்!

அவங்கோலம் வன்னி மண்ணில்
அவதிமக்கள் சகதி வாழ்வு
நிலம்புழுதி வெள்ளம் என்றே
நிஜவாழ்வைப் புட்டு வைக்கும்!






## குறிஞ்சிக் கோவில்கள்

## அப்புத்தளை ஸ்ரீகதிரேசப் பெருமான்

வான்முகில் வந்துறையும் முகடு- கதிரை
வாரிவீசி எழும்பரிதித் தகடு
மோனவரை நீளடவி கானமிசை அருவிவிழுந்
துள்ளி; பாளம் வெள்ளி!

தேயிலைகள் போர்வையிடுந் தோட்டம்- உழைப்போர்
தேகம்பிழி வியர்வைதரும் தேட்டம்
ஓயாது பாயுமாறு தேயாது என்றுமிங்கு
விரையும்; தாவி இரையும்!

ஓதைமிகு பாதையடி கோயில்- மெச்சும்
அப்புத்தளை சீர்நகரின் வாயில்
வேதமொழி ஆதிசிவன் காதிலுரை சோதிமைந்தன்
ஆட்சி; அளிப்பான் மீட்சி!

பஞ்சுப்பனித் திரையகலுங் காலை- குலுங்கும்
பாறைவரைச் சாரலெழில் சோலை
தஞ்சமளி கஞ்சமலர் மஞ்சமீது வந்துதித்தோன்
கோட்டை; ஓட்டுங் கேட்டை!

ஆடிவிழா நாடிவருங் கூட்டம்-வர்ண
அலங்கிர்தம் பூணுங்குகன் கோட்டம்
கூடியாடி பாடிமகிழ் தேருலாவில் நகர்ந்துவருங்
கூட்டம்; வேலன் கோட்டம்!

அணிநகரில் சேயோனின் கோயில்- ஈர்க்கும்
அள்ளுமெழில் சிற்பநிரை வாயில்
தணிகைமலை புராணமொடு கந்தர்கலி வெண்பாபுகழ்
தீரன்; என்றுஞ் சீரன்!

நக்கீரர் ஆற்றுப்படைக் கேட்டு- கந்தன்
கொன்றுபூதம் காத்துநின்றான் மீட்டு
திக்கறியா அருணகிரி தக்கவேளை முருகனாலே
பிழைத்தார்; புகழை இழைத்தார்!

**- கவிஞர் ஸி.எஸ். காந்தி -**
(தொடரும்)



## மகிழ்விலாட மணம்செய்தேன்

சொத்து சுகங்கள் நாடாமல்
சுந்தரி பிடித்தே கைநீட்டி
பத்துச் சதமும் வாங்காமல்
பாரில் அவளை மணம்செய்தேன்!

காணி தோட்டக் கல்வீடு
கழுத்தில் கையில் நகைசூடி
வாநீ யென்று கேளாமல்
வஞ்சியை நானும் வரித்திட்டேன்!

அழகின் ரதியாய் உள்ளவளை
அடையும் ஆவல் தனைவிட்டு
உலகோர் போற்றும் பண்புடைய
உத்தமி தனையே மணம்செய்தேன்!

அரச பதவி தொட்டவளில்
ஆசை விடுத்து தொழிலின்றி
இருக்கும் ஒருத்தி தனைத்தேர்ந்தே
இல்லற வாழ்வை நான்தொட்டேன்!

அடக்கம் பணிவு கொண்டவளை
அன்பாய் உயிராய் உள்ளவளை
தொடரும் வாழ்வின் துணையெனவே
தோதாய் எண்ணி மணம்செய்தேன்!

சீத னத்தை நா(து)ன் வாங்கும்
சிறுமை யெண்ணம் பற்றாமல்
மாத னத்தான் அவளென்று
மகிழ்வி லாட மணம்புரிந்தேன்!

**- கவிஞர் அ.கௌரிதாசன் -**
**ஆலங்கேணி கிழக்கு, கிண்ணியா.**




## நல்லதொரு குடும்பம்

மூத்தவள் மூர்க்கக் காரி
மூக்கினில் சினந்து விர்க்கும்
பார்த்தவள் என்றால் ஐயோ
பார்வையில் தீப்பி டிக்கும்
அத்தனை கிறுக்கை அள்ளி
அடுக்கினள் ஞானக் கள்ளி!

இளையவள் சற்றுச் செல்லம்
இருப்பினும் இடும்புக் காரி
நாளைய காலம் வாழ்த்தும்
நற்றமிழ்க் கவிதை யாவாள்
காளையர் வாசம் வாங்கா
கலியுகக் கவரி மானாள்!

அறிவினில் மேதை யல்ல
ஆயினும் கெட்டிக் காரி
வறியதோர் வாழ்க்கை ஓடம்
வதையெனும் அலையால் சாய்ந்தும்
நெறிமுறைக் கவசம் பூண்டு
நீந்திடும் ஜீவன் மூத்தாள்!

உயர்தரக் கல்வி ஊற்றை
உண்மையில் அருந்தி வென்றாள்
பயன்பெறு பேறைத் தாங்கிப்
பல்கலைக் கழகம் சென்றாள்
துயர்தனைத் துரத்தும் நெஞ்சுத்
துணிவினாள் என்றன் செல்வி!


முன்னமென் மனம்ப றிக்க
மோதியே களவு செய்த
அன்னவள் மௌன தேசம்
அழகினில் நிலவும் தோற்கும்
இன்னமும் நீட்டப் போனால்...
இவளெந்தன் உயிரில் பாதி!

அன்றிலைப் போல ஒட்டி
அன்பிலே வாழும் ஜாதி
இன்றிவள் விழியின் உள்ளே
இருப்பதோ காதல் ஜோதி
நன்றிசெய் பண்பை மீட்டும்
நாணத்தாள்! மனையின் தேவி!!




மெல்லிய நடைகள் கண்ட
மென்மலர்க் கவிப்பூங் காவில்
தெள்ளிய தமிழைத் தந்து
தீர்ப்பதோ அவர்கள் பற்றி
சொல்லிட வார்த்தை யில்லை
சொக்குமென் குடும்பக் கோயில்!

**- கவிஞர் ஏ.ஆர். நாகூர் -**
**கந்தளாய்.**







## எந்திரன் படத்தின் 2ஆம் பாகத்தை எடுக்கும் எண்ணம் இல்லை — ரஜினி

எந்திரன் படத்தின் 2ஆம் பாகத்தை எடுக்கும் எண்ணம் இது வரை இல்லை என்று கூறியுள்ளார் நடிகர் ரஜினிகாந்த். எந்திரன் என்ற பெயரில் தமிழிலும், ரோபோ என்ற பெயரில் ஹிந்தி, தெலுங்கிலும் உருவாகி வெளியாகியுள்ள எந்திரன் உலகெங்கும் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், பொலிவூட் பிரபலங்களுக்காக ரோபோ திரைப்படம் பிரத்தியேகமாகக் காண்பிக்கப்பட்டது. இதில் கலந்துகொள்வதற்காக ரஜினிகாந்த் மும்பைக்கு வந்தார். அப்போது அவரிடம் செய்தியாளர்கள் ரோபோ வெற்றி குறித்துக்கேட்டபோது, ''மிகப் பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது. இப்படத்தின் வெற்றியை ஏற்கனவே நான் தெரிவித்திருந்தேன்'' - என்றார்.

ரோபோவின் தொடர்ச்சி எடுக்கப்படுமா, அதில் நடிப்பீர்களா என்ற கேள்விக்கு அப்படி ஒரு எண்ணம் இதுவரை இல்லை - என்றார் ரஜினி.



## சிறையிலிருந்து ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகக் கதை எழுதுகிறார் சீமான்

தாணு தயாரிப்பில் சீமான் இயக்கத்தில் விஜய் நாயகனாக நடிக்கும் பகலவன் திரைப்படத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. சிறைக்குள் இருக்கும் சீமான் பகலவன் படத்துக்காக திரைக்கதை எழுதி வருகிறார். சிறையில் இருந்தபடியே தன்னுடைய இணை, துணை இயக்குநர்களை வரவழைத்துப் படக்கதை விடயமாக ஆலோசனை நடத்திவருகிறார்.

படத்தில் ஈழ மக்களுக்கு ஆதரவான கருத்துக்கள் அதிகம் இடம்பெறும்படி திரைக்கதையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிகிறது. சீமான் சிறை மீண்டதும் படப்பிடிப்பு ஆரம்பமாகவிருக்கிறதாம்.

## யோகா கற்றுக்கொள்ளுங்கள்... ஸ்ரேயா

யோகக் கலையைக் கற்றுக்கொண்டால் உடல்நலத்துக்கு நல்லது. எப்போதும் இளமையாகத் தெரிவதற்கு இது மிகவும் உதவியாக இருக்கும் - என்று சமீபத்தில் த்ரிஷாவுக்கு நடிகை ஸ்ரேயா செய்தி அனுப்பியுள்ளார்.

கோவையில் உள்ள ஒரு ஆச்சிரமத்துக்கு தொடர்ந்து செல்லும் ஸ்ரேயா, அங்கு உடற்பயிற்சி மற்றும் யோகக் கலையைக் கற்று வருகிறார். இதனை மற்றவர்களுக்கும் சொல்லிக்கொடுத்து, அவர்களையும் வந்து இந்தக் யோகக் கலையைக் கற்றுக்கொள்ளுமாறு கூறிவருகிறார்.

ஸ்ரேயா அனுப்பிய செய்திக்கு பதில் அளித்த த்ரிஷா, ''நீ சொல்றது உண்மைதான். நானும் இந்த ஆச்சிரமத்தின் சென்னைக் கிளையில் சேர்ந்துவிட்டேன். இப்போது தினமும் யோகக் கலையைக் கற்றுவருகிறேன். எனது நடனப் பயிற்சியாளரும் இதனைக் கண்டிப்பாகக் கற்றுக் கொள்ளுமாறு கூறியுள்ளார். எனக்கு இந்தப் பயிற்சி மிகவும் பிடித்திருக்கிறது - என்றார்.

## கவர்ச்சி எந்த தனிப்பட்ட நடிகைக்கும் சொந்தமானது அல்ல — லட்சுமிராய்

கவர்ச்சி எந்தத் தனிப்பட்ட நடிகைக்கும் சொந்தமில்லை என்று லட்சுமிராய் கூறியுள்ளார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

என்னை பற்றி நிறைய கிசுகிசுக்கள் வருவதிலிருந்தே நான் சிறந்த நடிகையாக இருக்கிறேன் என்பதை உணர்கிறேன். டோனி கிரிக்கெட்டில் ஜெயித்ததை பாராட்டினால் கூட அது செய்தியாகிறது. மும்பையில் சொந்த வீட்டில் தங்கினால் ஹிந்திப்பட வாய்ப்புக் கேட்டு அலைவதாகச் சொல்கிறார்கள். ஆனால் நான் இதைப் பற்றி எல்லாம் கவலைப்படவில்லை. இப்போது கூட 'காஸினோ' என்ற மலையாளப் படத்தில் கிளாமராக நடித்து வருகிறேன். ஒரு மாதம் டுபாயில் படப்பிடிப்பு நடக்கவிருக்கிறது. சர்வதேச ரீதியான கதை என்பதால் ஹொலிவூட் ஹீரோயின்களைப் போல கவர்ச்சியாக நடிக்கிறேன். நீச்சல் உடை, முத்தக் காட்சி, சண்டை எல்லாமே படத்தில் உள்ளன.

உடனே நயன்தாரா போன்று கிளாமராக நடிக்கிறார் என்கிறார்கள். கவர்ச்சி என்பது எந்தத் தனிப்பட்ட நடிகைக்கும் சொந்தமானதல்ல. அழகான நடிகைகள் அனைவருக்கும் சொந்தமானது. தமிழில் 'மங்காத்தா' படத்தில் அஜித்துக்கு ஜோடியாக நடிக்கிறேன்.

- இப்படி அவர் தெரிவித்தார்.



## கவர்ச்சியில் இருந்து குடும்பப் பெண்ணாக மாறும் நமீதா

போதும் போதும் என்ற அளவுக்குக் கவர்ச்சி காட்டி நடித்துவிட்டேன். கவர்ச்சி நடிப்பு எனக்கே அலுத்துப் போய்விட்டது - என்கிறார் கவர்ச்சி நடிகை நமீதா.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கவர்ச்சி நடிப்பு, எனக்கே அலுத்துப் போய்விட்டது. ஆரம்பத்தில் நான் கவர்ச்சியாக நடித்தேன். ஆனால் அதையே எனக்கு முத்திரையாக்கி கவர்ச்சி நடிகையாக்கிவிட்டனர்.

தமிழ் தான் என்றில்லை எங்கு போனாலும் கவர்ச்சியாகத்தான் நடிக்க அழைக்கிறார்கள் - நடிக்க வைக்கிறார்கள், இது எனக்கு சலிப்பைத் தந்துவிட்டது. இனிமேல் குடும்பப்பாங்கான வேடங்களிலேயே நடிக்கப்போகிறேன்.

அதற்கு முதற்படியாக கன்னடத்தில் குடும்பப் பாங்கான வேடத்தில் வரப்போகிறேன். அதேசமயம், இதில் சண்டைக் காட்சியிலும் கலக்கப்போகிறேன்.

- இப்படி அவர் தெரிவித்தார்.





# சில்க் சுமிதாவாக வித்தியா

சில்க் ஸ்மிதா வாழ்க்கை படமாகிறது. அவரது வேடத்தில் நடிக்கும் வித்யா பாலன், சில்க் போல இடுப்பை வளைத்து நெளித்து கிக்காக டான்ஸ் ஆட ஒரு மாதம் பயிற்சி எடுக்கிறார்.

தனது காந்தக் கண் கவர்ச்சியால் இளவட்டங்களைக் கவர்ந்தவர் நடிகை சில்க் ஸ்மிதா. 1980களில் அவர் இல்லாத தமிழ்ப் படங்களே இல்லை என்ற அளவுக்கு பெரும்பாலான படங்களில் நடித்தார். கமல், ரஜினி உள்ளிட்ட எல்லா நடிகர்களுடனும் சில்க் ஸ்மிதா நடித்திருக்கிறார். ரசிகர்களை மகிழ்வித்த சில்க ஸ்மிதாவின் நிஜ வாழ்க்கை போராட்டம் நிறைந்ததாக இருந்தது. பட அதிபர்கள், நடிகர்கள், கால்ஷீட் மேனேஜர்களுடன் இணைத்து கிசுகிசுக்கப்பட்டார். திடீரென்று ஒருநாள் தூக்குப் போட்டு தற்கொலை செய்துகொண்டார். இந்த சம்பவம் திரையுலகினர், ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்தி மற்றும் தென்னிந்திய மொழிகளில் அவரது வாழ்க்கைக் கதையை படமாக்குகிறார் ஹிந்தி படத் தயாரிப்பாளர் ஏக்தா கபூர். இதற்கு டர்ட்டி பிக்சர் என்று தற்காலிகமாகப் பெயரிடப்பட்டுள்ளது.

சில்க் ஸ்மிதா வேடத்தில் நடிக்க பல்வேறு நடிகைகளின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. இறுதியில் வித்யா பாலன் பொருத்தமாக இருப்பார் என்று முடிவானது. ஸ்மிதாவின் கண், உதடு, இடுப்பை வளைத்து ஆடும் நடன அசைவு பேசப்பட்டதால் அவரைப்போலவே ஆடுவதற்காக ஒரு மாதம் தென்னிந்திய நடன இயக்குநரிடம் பயிற்சி பெறுகிறார் வித்யா. "இது கவர்ச்சிப் படம் என்ற நோக்கத்தில் அல்லாமல் ஒரு நடிகைக்கும், தயாரிப்பாளருக்கும் இருந்த உறவை சித்திரிக்கும் படமாகவே இருக்கும். நடிப்புத் திறமை வாய்ந்த வித்யாபாலன், சில்க் வேடம் ஏற்பது பொருத்தம்.



# ஐஸ் பெருமிதம்

திருமணத்துக்குப் பிறகும் எனக்கு வரவேற்பு இருக்கிறது. அதற்காக நான் பெருமைப்படுகிறேன் என்று நடிகை ஐஸ்வர்யா ராய் கூறியுள்ளார். உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது இருந்த அதே அழகுடன் இப்போதும் இருக்கும் ஐஸ்வர்யா ராய் பாலிவுட்டின் பிஸியான காஸ்ட்லி நடிகை.

தற்போது ஆக்ஷன் ரிப்யோ, குஜாரிஸ் ஆகிய இந்திப்படங்களில் நடித்து வரும் அவர் அளித்துள்ள பேட்டியில், "நம் இந்திய சினிமாவைப் பொறுத்த வரை ஹீரோக்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப் படுகிறது. நடிகைகளால் திருமணத்திற்கு முன்பு வரைதான் நாயகியாக வெற்றி பெற முடியும் என்ற நிலை இருந்தது. என்னைப் பொறுத்தவரை திருமணத்திற்கு முன்பு இருந்த வரவேற்பு திருமணத்திற்கு பிறகும் இருக்கிறது. டைரக்டர்களும் எந்தவித பயமும் இல்லாமல் பிரமாண்ட படங்களில் நடிக்க வைக்கிறார்கள். அவர்களது எதிர்பார்ப்பு என்ன என்பதை அறிந்து நடிக்கிறேன். படப்பிடிப்பு தளத்தில் டைரக்டர் என்ன சொல்கிறாரோ அப்படியே நடிப்பேன். எந்த நிபந்தனையும் விதிப்பதில்லை. இதனால்கூட எனது படங்கள் ரசிகர்களிடம் வரவேற்பை பெற்றிருக்கலாம் என்று கருதுகிறேன்" என்று கூறியுள்ளார்.



# தமன்னா திண்டாட்டம்

யார் பக்கம் போறது? யார் பக்கம் நோகறது என்று தெரியாமல் முழிக்கிறாராம் தமன்னா. வேட்டை படத்தில் ஆர்யாவுக்கு ஜோடியாக தமன்னாவையும் ஒப்பந்தம் செய்திருக்கிருக்கிறார் லிங்குசாமி. இந்தப் படத்தில் முதலில் நடிப்பதாக இருந்த சிம்பு, எனக்கு ஜோடியாக தமன்னாவைதான் போட வேண்டும் என்று வற்புறுத்தி வந்தது ஊரறிந்த சங்கதி. கடைசியில் படமே சிம்புவை கைகழுவி விட்டுவிட்டது. அரண்மனை ராஜாவுக்கு அகப்பட்டதெல்லாம் வாள் என்பது மாதிரி, சமீபகாலமாக வாய் பேசாமல் இருந்த சிம்பு, இந்த பிரச்சனையில் கொஞ்சம் ஆத்திரப்பட்டே அறிக்கைகள் விட்டார். இப்போது லிங்குசாமிக்கு போட்டியாக வேட்டை மன்னன் என்று தனது புதுப்படத்திற்கு தலைப்பும் வைத்துவிட்டார். இப்போது இந்தப் படத்தில் நடிக்க தமன்னாவை அணுகியிருக்கிறாராம் சிம்பு.

வேட்டை முதலில் வருமா? வேட்டை மன்னன் முதலில்வருமா? என்பது தெரியாத நிலையில் தமன்னா சிம்புவுக்கு கால்ஷீட் கொடுக்கத் தயங்குகிறாராம். ஆனாலும் வந்தே ஆகவேண்டும். சம்பளம் எவ்வளவு வேண்டும் என்றாலும் தருவோம் என்று வற்புறுத்த ஆரம்பித்திருக்கிறாராம் சிம்பு.

# தீபாவளிக்கு படங்கள்...?

தீபாவளிக்கு கமல், ரஜினி நடித்த படங்கள வெளிவரப் போதில்லை என்பது உறுதியாகிவிட்டது. விஜய், அஜித் படங்களும்கூட வெளிவரப் போதில்லை என்பது ரசிகர்களுக்குப் பெருத்த ஏமாற்றமே.

விக்ரம் நடித்த படமும் இந்தப் பட்டியலில் இல்லை. இறுதி தகவல்களின்படி, சூர்யா, தனுஷ், சிம்பு நடித்த படங்கள் மட்டுமே தீபாவளிக்கு திரைக்கு வரும் எனத் தெரிகிறது. இதில் சிம்பு படம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

சூர்யா நடித்த 'ரத்த சரித்திரம்' தீபாவளி அன்று திரைக்கு வருகிறது. இதனை படத்தின் தயாரிப்பாளர்களும் படத்தை வெளியிடும் கிளவுட் நைனும் உறுதி செய்துள்ளனர். இப்படத்துடன் போட்டி போடும் இன்னொரு படம் - அதுவும் கிளவுட் நைன் வெளியிடும் படம்தான் - வகுவாட்டர் கட்டிங்.

தீபாவளிப் படங்களில் இந்த இரு படங்களுமே நூறு சதவீதம் உறுதி செய்யப்பட்டுள்ளன.





# பரத்துடன் சில நிமிடங்கள்...

சிம்புவுடன் சேர்ந்து நடிக்கும் 'வானம்' அனுபவம் எப்படி?

"படத்தில் நான் ஒரு தனி டிராக். சிம்பு தனியா வருகிறார். எனக்கு, நேகா ஜோடி. சிம்புவுக்கு அனுஷ்கா. நானும் சிம்புவும் சேர்ந்து ஆடுற மாதிரி ஒரு பாட்டு இருந்தா நல்லாத் தான் இருக்கும். ஆனால், அப்படி அமையலை!"

இனிமே இரு ஹீரோ கதைகளில் தொடர்ந்து நடிப்பீர்களா?

"வானம் மாதிரி வித்தியாசமான கேரக்டர் கிடைத்தால், இரு ஹீரோ கொண்ட படங்களில் நடிக்கலாம். இரண்டு ஹீரோக்கள் சேர்ந்து நடித்தால், படம் ரிலீஸ் ஆகும் போது நல்ல ஓப்பனிங் கிடைக்கும். இது பணம் போட்டுப் படம் எடுக்கும் தயாரிப்பாளர்களுக்கு நல்ல விஷயம் தானே!"



# அடுத்த ஆட்டம் விக்ரமுடன்...

மோகன் நடராஜன் தயாரிப்பில் விக்ரம் நடிக்கும் படத்தில் அவருக்கு ஜோடியாக நடிப்பதாக இருந்தவர் இலியானா.

இந்தப் படத்தை விக்ரம் கே.குமார் இயக்குவதாக இருந்து இறுதியில் அந்த வாய்ப்பு பூபதி பாண்டியனுக்கு போனது. அப்போதும் நான் ரெடி என்று சம்மதம் கொடுத்தார் இலியானா.

ஆனால் பூபதி பாண்டியன் இயக்கத்திலும் நடிக்கவில்லை விக்ரம். அவர் நடிக்கவிருப்பது மதராசப் பட்டினம் விஜய் இயக்கத்தில்.

இயக்குநர்கள் மாறிய கால இடைவெளியில் இலியானாவின் கால்ஷீட் காலாவதியாக இப்போது அனுஷ்காவிடம் கதை சொல்லியிருக்கிறார் விஜய். கதை பிடித்திருப்பதால் விக்ரம் ஜோடி அனேகமாக அனுஷ்காதான் என்கிறார்கள்.

# ராணி துர்காவதி

புத்தாக்கம் : கே.கான்







## சிறுவர் கைவண்ணம்



கேதீஸ்வரன். அபிஷாரணி
தரம் : 05
நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயம்,
நெடுந்தீவு.



சுப்பர் டீம்
தரம் : 7பி
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



எம்.மித்யா
தரம் : 6ஜி
கிங்ஸ்ரன் சர்வதேச கல்லூரி,
முகத்துவாரம்.

ஓர் ஆசிரமத்தில் பெரும் எண்ணிக்கையான சிஷ்யர்கள் கல்வி கற்றுவந்தனர். ஒரு நாள் சில மாணவர்கள் குருவை நோக்கி, "செல்வம், குடும்பம், சமயம் என்பவற்றில் உண்மையாகவே மனிதனுக்கு உதவியாக இருப்பது எது?" என்று கேட்டார்கள். குரு அதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் ஒரு கதை சொன்னார்.

# நம்பிக்கையான நண்பன்

ஒருவனுக்கு மூன்று நண்பர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒருவன் அவனுக்கு மிகவும் பிரியமானவனாக இருந்தான். எங்கேயாவது செல்வதானால் அவனோடு தான் செல்வான். மற்ற நண்பனோடு அவனுக்கு

இணையத்தளக் கதை



அவ்வளவு நெருக்கம் இருக்கவில்லை. மூன்றாவது நண்பனோ புறக்கணிக்கப்பட்டவனாகவே இருந்தான். அவனை மிக அரிதாகவே இவன் சந்திப்பான்.

ஒரு நாள் அவன் ஒரு துன்பத்தில் சிக்கிக் கொண்டான். அவனுக்கு அரச தர்பாருக்கு வரும்படி அழைப்பு விடுக்கப்பட்டது. அவன் கொஞ்சம் மனம் கலங்கினான். தனியாகப் போகப் பயமாக இருந்ததால், ஒரு நண்பனை அழைத்துச் செல்ல நினைத்தான். அவன் தனக்கு மிகவும் பிடித்தமான நண்பனிடம் சென்றான். ஆனால், அவனோடு செல்வதற்கு அந்த நண்பன் மறுத்துவிட்டான். பின்னர் அவன் இரண்டாவது நண்பனிடம் சென்றான். வேலைப்பளு காரணமாகத் தன்னால் வர முடியாதென அவன் தெரிவித்தான். ஆனால், வேறு ஏதும் உதவிகள் தேவையானால் கேட்கும்படி அவன் சொல்லத் தவறவில்லை. நிராசையடைந்தவனாக அவன் மூன்றாவது நண்பனிடம் சென்றான். மூன்றாவது நண்பன், அவன் கூறுவதை முழுக்கக் கேட்டான். அவனுக்கு உதவி செய்வதாக உறுதியளித்து, அவனோடு அரச தர்பாருக்குப் போனான்.

தர்பாரில் அவன் தன்னுடைய நண்பனுக்குச் சார்பாக இருந்து துன்பத்திலிருந்து அவனை மீட்டு வந்தான். கதை முடிவுற்றதும் குரு மூன்று நண்பர்களினதும் சங்கேத அர்த்தத்தைச் சொன்னார். முதலாவது நண்பன் செல்வம். அதுவே மிக்க பிரியத்துக்குரியதாகக் கருதப்படுகிறது. ஆனால், அது மரணத்துக்குப் பிறகு வீட்டைவிட்டு ஓர் அடிகூட நகர மாட்டாது. இரண்டாவது நண்பன், குடும்பம். அது தன்னால் முடிந்த உதவிக்ளைச் செய்யும். ஆனால், அதனுடைய ஒத்துழைப்பு உடலில் உயிர் இருக்கும் வரையே நிலைக்கும். சமயம் மட்டுமே இவ்வுலகிலும் மறுவுலகிலும் ஒருவனுக்கு இறுதிவரை உதவியாக இருக்கின்றது. ஆனால், இதனை நாம் பொருட்படுத்தாதிருக்கிறோம். அது தான் நிலையான சாந்தியையும் மகிழ்ச்சியையும் அளிப்பது.

தமிழில் : ஸ்யெம்மே

இப்படி அவர் சொன்னார். மாணவர்களுக்கு அவர்களுடைய கேள்விக்குப் பதில் கிடைத்துவிட்டது. ✱







## கேள்வி நேரம்

**நாம் வெளியில் போனால் வேர்க்கிறது. காகம், குருவிகள் நாள் முழுவதும் வெயிலில் அலைகின்றனவே, அவைகளுக்குச் சிரமமாய் இருக்காதா?**

ஆம், வெயிலில் போனால் உடம்பில் அளவுக்கு மிஞ்சி உஷ்ணம் உண்டாகி விடுகிறது. அதனால் கஷ்டமாய் இருக்கிறது. அந்தக் கஷ்டத்தை நீக்கிக் கொள்வதற்காகவே வியர்வை உண்டாகிறது. வியர்வை உண்டானதும் அது நீராவியாக மாறுவதற்காக உடம்பிலுள்ள உஷ்ணத்தை உபயோகித்துக் கொள்கிறது. அப்போது மிகையான உஷ்ணம் குறைந்து விடுகிறது. ஆகவே உடம்பில் உஷ்ணம் அதிகப்பட்டால், அதைக் குறைத்து உடம்பைக் குளிரும்படி செய்வதற்காகவே, நமக்கு வியர்வை உண்டாகிறது.

அதுபோல் பறவைகளுக்கும் வியர்வை உண்டாகிறதா? இல்லை. அப்படியானால் அவை கஷ்டம் தோன்றாமல் வெயிலில் அலைந்து கொண்டிருக்கின்றனவே, அதன் காரணம் என்ன? வெயிலில் போனால் அவைகளுக்கு உஷ்ணம் அதிகப்படவே செய்கிறது. ஆனால் அதை அவைகளுடைய உடல் வேறு விதமாக நீக்கிக் கொள்கிறது; அவை நன்றாகக் காற்றைச் சுவாசித்துத் தங்கள் எலும்புகளிலுள்ள சிறிய பைகளுக்குள் காற்றை அனுப்புவதும் வெளியாக்குவதுமாக இருக்கின்றன. இவ்வாறு உள்ளே செல்லும் காற்று அவற்றின் உஷ்ணத்தைக் கிரகித்துக் கொண்டு வெளியேறுவதால் பறவைகளுக்கு உஷ்ணம் கஷ்டமாகத் தோன்றுவதில்லை.

**சிலருக்கு மாறுகண் என்று கூறுகிறார்களே, அதற்குக் காரணம் என்ன?**

நாம் ஏதேனும் ஒரு பொருளைப் பார்க்கும் போது நம்முடைய இரண்டு கண்களும் ஏககாலத்தில் அதைப் பார்க்கின்றன. ஆனால் சிலருடைய கண்களுள் ஒன்று அந்தப் பொருளைப் பார்க்கும்போது மற்றக் கண் வேறு பொருளைப் பார்க்கும். அதைத்தான் மாறு கண் என்று சொல்லுவார்கள். அவ்வாறு இரண்டாவது கண் வேறு பொருளைப் பார்ப்பது ஏன்?

நம்முடைய இரண்டு கண்களும் சேர்ந்து ஒரு பொருளைப் பார்ப்பதற்கு அனுகூலமாகக் கண்களை இயக்கும் பொருட்டு ஒவ்வொரு கண்ணிலும் மூன்று சோடி தசைகள் உள்ளன. நாம் ஒரு பொருளைப் பார்க்க விரும்பும் பொழுது மூளையானது அந்தத் தசைகளை வேண்டிய அளவு இயங்குமாறு கட்டளை இடுகிறது. தசைகள் இயங்குகின்றன. இரண்டு கண்களும் பொருளைப் பார்க்கின்றன.

ஆனால், மாறு கண் உடையவர்களுடைய கண்களிலுள்ள தசைகள் எல்லாம் ஒத்துவேலை செய்வதில்லை. சிலருடைய கண் ஒன்றில் கண்களை மூக்குப் பக்கமாக இயக்கும் தசைகள், வெளிப் பக்கமாக இயக்கும் தசைகளைவிடப் பலமுடையனவாக இருக்கும். அதனால் அவர்கள் உள்பக்கம் திரும்பும் மாறுகண் உடையவர்களாக இருப்பார்கள். இந்த விதமான மாறு கண்தான் வெளிப்பக்கம் திரும்பும் மாறு கண்ணைவிட அதிகமாகக் காணப்படும்.

மாறு கண் அநேகமாக இரண்டு வயது முதல் ஐந்து வயதுவரையுள்ள காலத்திலேயே தோன்றுகிறது. குழந்தைகள் நீண்டநேரம் கூர்மையாகப் பார்க்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தால் இந்த மாறு கண்நோய் உண்டாகும்.

சிலர் குழந்தைகளை முதலில் அன்பாக வளர்த்து விட்டுப் பிறகு கவனியாமல் இருந்து விடுவர். சிறு குழந்தைகள் முன்பாகச் சண்டையிட்டுக் கொள்வார்கள். இவைகளாலும் குழந்தைகளிடம் மாறுகண் உண்டாகக் கூடும் என்று டாக்டர்கள் கூறுகிறார்கள்.

மாறு கண் ஏற்பட்டதும் அதைக் குணப்படுத்துவதற்கான சிகிச்சையைச் செய்தால் குணமாகிவிடும். அதற்காக மூக்குக்கண்ணாடி போடுவார்கள். பலமுள்ள கண்ணை வேலை செய்யவிடாமல் மறைத்து வைத்துப் பலவீனமான கண்ணை மட்டும் வேலை செய்யுமாறு செய்து, அதைப் பலம் பெறும்படி செய்வார்கள். கண்களுக்குச் சில பயிற்சிகள் கொடுத்து ஒரு பொருளையே இரண்டு கண்களும் பார்க்குமாறு பழக்குவார்கள்.


இதற்காகச் சத்திரசிகிச்சை செய்வதுமுண்டு. ஆனால் சத்திரசிகிச்சையால் மாறுகண்ணைச் சாதாரண கண் போல் பார்க்கும்படி செய்ய முடிவதில்லை.

மாறுகண் ஏற்பட்டவுடனேயே விரைவாகச் சிகிச்சை செய்யாவிட்டால், கண்பார்வை இழக்க நேரிடும். பிறகு எவ்விதச் சிகிச்சையாலும் இயலாது.

ஆதலால்! பிள்ளைகளே, கண்கள் நோகும்படியாக எதையும் நீண்ட நேரம் பார்க்காதீர்கள். எதைப் படித்தாலும் அடிக்கடி அதைவிட்டு வெளியே பாருங்கள். அப்பொழுது கண்கள் ஓய்வுபெற்று நலம் பெறும். ✱



இந்த இரண்டு படங்களுக்கும் இடையேயுள்ள 7 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்களேன் பார்க்கலாம்.



# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2010

ஆசிரியர் P. அம்பிகைபாகன்



2010 புலமைப்பரிசில் பரீட்சையில் கல்விச் சுடர் வளவாளர் ஆசிரியர் பி. அம்பிகைபாகனூடாக சுடர்ஒளி புலமைச் சுடரில் வெளிவந்த மாதிரி வினாத்தாள்களைப் பெற்று அதிகளவு பயிற்சிகளைச் செய்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு விருது வழங்கும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி இடம் பெற்றது. சுடர்ஒளியின் அனுசரணையுடன் இராஜேஸ்வரி கல்வி நிலையத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், ஆசிரியர்கள் மற்றும் பிரமுகர்களுடன் சித்தி அடைந்த மாணவர்கள் நிற்பதை படத்தில் காணலாம்.

# அரங்கேற்றம்



கொழும்பு அபிநயஷேத்ரா நடனப் பள்ளி இயக்குநர் செல்வி திவ்யா சிவநேசனின் மாணவி செல்வி சிந்து இராஜசேகரத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம் அண்மையில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது





